

# சுவாமி

# பரம அரூபி ஆனந்தம்

T.14702

# சுவாமி
# பரம அரூபி ஆனந்தம்
## நினைவு மலர்

நூலாசிரியர் : சுவாமி ஆரோக்கியநாதர்

சச்சிதானந்த ஆசிரமம்

சாந்திவனம், தண்ணீர்ப்பள்ளி

குளித்தலை :-: திருச்சிராப்பள்ளி

IMPRIMATUR

*6th January 1959*

† J. MENDONCA

Bishop of Tiruchirapalli.

The Trichinopoly United Printers, Tiruchirapalli-2.

# பொருளடக்கம்


பக்கம்.

திருச்சி ஆண்டகையின் திருமுகம் ... v
நூலாசிரியரின் நூன்முகம் ... ix
ஆசிருரை ... xi
கடவுள் வாழ்த்து ... xiii

தோற்றுவாய். ... 1

I. பிரெஞ்சு தேசத்தில் அடிகளாரின் தோற்றம். ... 3
குரு பட்டாபிஷேகம் பெறுதல். ... 5
கலையுள்ளம். ... 6
திவிர ஆன்ம சேவை. ... 7
கிறிஸ்துவின் சம்பூரணத்தைக் குறித்து [நோக்குதல். ... 8
பாட்டாளி மக்கள் மேல் பரிவு. ... 10
அனைத்திலும் அணைகடந்த அன்பு. ... 11

II. அடிகளாரை இந்தியாவுக்கு அழைத்தல். ... 14
அழைத்தலின் பக்குவமாகுதல். ... 16
திருச்சபைக்குள் இந்தியா அழைக்கப்படுதல். ... 17
நமது அடிகளின் உன்னத கனவு. ... 19

III. இந்தியாவுக்கு வருகை. ... 21
முதல் அநுபவம். ... 22
மேற்கொண்டு உட்புகுதல். ... 23

IV. திருச்சி மேற்றிராசனத்தில் ஊழியம். ... 26
மனோவாதம். ... 28
நோன்பு கொள்ளுதல். ... 32

பாலைவனச் சோலைகள். ... 33
குளித்தலைப் பங்கு ஆரம்பம். ... 33
சீர் பெருகுதல். ... 35
கனவு உருவாகுதல். ... 36

V. **சச்சிதானந்த ஆசிரமம்.** ... 38
சாந்திவன நிலமை. ... 39
எளிமையின் உன்னத வைராக்கியம். ... 40

VI. **சாந்திவனத்தின் நோக்கம்** ... 43
எதிர்ப்பும் மறுப்பும். ... 43
வேதபோதக முயற்சியோ ? ... 44
ஏகாந்தத்தின் தனி இயல்பும் பயனும். ... 45
சன்னியாசத்துவம். ... 47
பாரத மக்களின் கடமை. ... 49
சாந்திவனத்தின் பரந்த விளைவு. ... 50

VII. **சாந்திவன வாழ்வு** ... 52
அடிகளார் படிப்புகள் ... 52
சாந்திவன யாத்திரீகர்கள். ... 52
அடிகளாரின் எழுதுதலும்
உரையாடுதலும். ... 53
தேவாலயம் அமைத்தல். ... 55
பலாபலன்கள். ... 57
இறுதி மனநிலைகள். ... 59

VIII. **பாக்கியமான மரணம்.** ... 62
உடல்நலக் குறைவு ... 62
பரமனின் திருஅடிகளை அடைதல். ... 64
அடிகள் அழியாத சந்ததம். ... 66

**பாப்புமார்கள் பொன்மொழிகள்** ... 69

**ஞாபகக் குறிப்புகள்** ... 72




குளித்தலை பங்கு சுவாமியார்
1948



(நன்றி : சத்தியபோதினி)

மிக. வந். திருச்சி ஆண்டகையும் ஸாந்திவன ஏகாந்திகளும்.




# திருச்சிராப்பள்ளி
# மிகவும் வந்திக்கத்தக்க மேற்றிராணியார் ஆண்டகையின் திருமுகம்

---

"வேதபோதக நாடுகளின் துணையாளர்கள் சபை" யினின்று (Société des Auxiliaires des Missions) இந்தியாவுக்கு வந்த முதற்குருவாக சுவாமி மோன்ஷனன் 1939-ல் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அவர் சிறந்த பண்பாடு கொண்டவர், நிறைந்த அறிவாளி. எனினும் சுமார் பத்து ஆண்டுகளுக்கு அவர் பண்ணைப்பட்டி, குளித்தலை, பஞ்சம்பட்டி முதலிய இடங்களிலுள்ள தமிழரிடையே பங்கு வேலை செய்ய விருப்பம் கொண்டு தமது 30 வருட மறைந்த வாழ்வில் அவர் "அவர்களுக்குப் பணிந்திருந்தாரே" யொழிய வேறு ஒன்றும் செய்யவில்லை என்று கூறப்பட்ட நம் தலைவரைப்போல் தம்மைத் தயாரித்து வந்தார்.

"ஒருவன் தன் தாய்நாட்டை மறப்பது சுலபமல்ல; வேறு மொழியும் பண்பாடும் உலகக் காரியங்களை

மட்டுமன்றி இறைவனின் அரசாட்சிக்கு அடுத்த காரியங்களையும் முழுவதும் மாறிய விதத்தில் புரிந்து உணர்ந்து வாழும் மக்கள் கூட்டத்தினரின் உள மொன்றிய அங்கத்தினராக மாறுவதற்காக ஒருவன் தன் பண்பாட்டையும் தன் தாய் மொழியையும் தன் தாய் நாட்டையும் மறந்து விடுவது சுலபமல்ல" என்று எழுதிவைத்தார் சுவாமி மோன்ஷனுன். தன்னை மறக் கும் இந்த "கடும் போராட்டத்தில்" நேரிடையாக முனைந்திருந்த ஒருவருடைய வார்த்தைகள் இவை. அவரது தாழ்ச்சியாலும் எளிமையாலும் அதனுடன் இணைந்து அவரிடம் விளங்கிய பொறையாலும் சுமுக மாகப் பழகும் குணத்தாலும் அவர் நம் மக்களோடு நெருங்கி உறவாடி அவர்களது உள்ளங்களை கொள்ளைகொண்டார். உடையிலும் பண்பாட்டிலும் இந்தியராகி விளங்கினர்.

இங்ஙனம் தம்மைத் தயாரித்தபின் சுவாமி மோன்ஷனுன் காவேரியின் தென்கரையில் சாந்தி வனத்தில் சச்சிதானந்த ஆசிரமத்தை நிறுவும் துணிச்சலான காரியத்தில் முனைந்தார். அது உண்மையிலேயே ஓர் துணிகரச் செயல் என்று கூற வேண்டும். ஏனெனில் அதில் பல தொல்லைகளையும், கஷ்டங்களையும், குற்றச்சாட்டுகளையும் அவர் சமா ளிக்க வேண்டியதாயிற்று. அதன் உண்மைத் தத்து வத்தை அறியாதார்க்கு இந்த புது வாழ்க்கைமுறை ஒரு விதத்தில் புரட்சிகரமானதாய் தோன்றலாம். ஆனல் அந்தப் புது வாழ்க்கை முறைக்கு எனது மனப்பூர்வமான அங்கீகாரம் பெற்றிருந்தார் என்று நான் அழுத்தமாகக் கூற விரும்புகிறேன்.

சுவாமி மோன்ஷனுனின் திட்டத்தின்படி இந்த எளிய ஆஸ்ரமம் இந்தியத் துறவிகள் சபைகளின் வரலாற்றின் ஓர் புதிய சகாப்தத்தின் துவக்கமாக இருக்கவேண்டி யிருந்தது. அவர் தமது எண்ணங் களையும் இலட்சியங்களையும் சீரிய முறையில் முதலில் இந்திய ஆசீர்வாதப்பர் சபை ஆஸ்ரமம் (An Indian Benedictine Ashram 1951) என்ற ஆங்கிலப் பிரசுரத்தின் மூலமும், பிறகு சச்சிதானந்த துறவிகள் (Ermites du Saccidananda, 1957) என்ற பிரெஞ்சு புத்தகத்தின் மூலமும் வெளியிட்டார். தற்சமயம் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவப் பண்பாடும் சரியான இந்தியப் பண்பாடும் தக்கசமயத்தில் விரவிக் கலப்ப தற்கு முதற்படியாக இந்த ஆஸ்ரமம் அமைய வேண்டும் என்பதே இவர் கருத்து. கிறிஸ்தவமும் இந்தியப் பண்பாடும் பின்னிப் பிணைந்து புது உரு எடுக்கவேண்டுமென எல்லோரும் விரும்புகிறோம். வெகு முன்னதாகவே இவ்வொன்றிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். உண்மையான கிறிஸ்தவ தியான வாழ்வை அடிப்படையாகக்கொண்டு அதேசமயத்தில் பரம்பரை இந்தியத் தவ வாழ்க்கைக் கொள்கைகளில் உன்னத மானவைகளை ஏற்றுக்கொள்ளும் கலப்பற்ற தியான வாழ்வு கொண்ட ஓர் ஸ்தாபனத்தைத் துவக்குவதே இவ்வொன்றிப்பை ஏற்படுத்த உறுதியான நிச்சய மான வழியென சுவாமி மோன்ஷனுனும் அவருடன் சேர்ந்து ஆஸ்ரமத்தை ஆரம்பித்த ஒரு பிரெஞ்சு ஆசீர்வாதப்பர் சபைக் குருவும் திட்டமாய் நம்பியிருந் தார்கள். இதன் மூலம் நாம் இந்தியப் பண்பாட்டை சரியான வழிகளில், நிச்சயமான பாதையில் நடந்து செல்ல உதவியவர்களாவோம் என அவர்கள் எண்ணினுர்கள்.

தமது வாழ்க்கையின் கடைசி காலத்தில் சுவாமி மோன்ஷனுன் தாம் உருக்கொடுக்க முனைந்த திட்டம் சித்தி பெருதுபோல் தோன்றியதையும் அதனை பிறர் புரிந்து கொள்ளாததையும் பற்றி சற்றே மனவிரக்தி யடைந்ததுபோல் தோன்றினர். ஆனல் அவரது அபார ஆசைகளுக்காக ஆண்டவன் கேட்ட கிரயம் அது.

இந்த ஆண்டவரின் தூதுவருடைய பெரும் ஆவல்கள் எல்லாம் ஆண்டவன் அருளால் வெற்றி பெற வேண்டும் என்பதே எமது விருப்பமும் பிரார்த்தனையுமாகும். ஆண்டவர் தாம் குறித்த காலத்தில் சுவாமி மோன்ஷனுனது இவ்வரிய சேவையைத் தொடர்ந்து நடத்த ஊழியர்களை அனுப்புவாரென்பது திண்ணம்.

6—1—59
திருச்சிராப்பள்ளி

✠ **ஜேம்ஸ் மென்டோன்ஸா**
**திருச்சிராப்பள்ளி மேற்றிராணியார்.**



# நூலாசிரியரின் நூன்முகம்.

பரமாரூபியானந்த சுவாமிகளின் ஜீவிய வரலாற்று சுருக்கம் பிரஞ்சு பாஷையில் பத்திரிகைகளில் சில மாதங்களுக்குமுன் வெளியானது. இந்நூல் வேறு சில விரிவுரைகளுடன் இப்பொழுது ஆங்கில பாஷையில் பிரசுரமாயிருக்கிறது. நமது சுவாமிகள் தமிழ் நாட்டில் வசித்தபடியால், தமிழ் மக்கள் அவரிடம் பெரிதும் அன்பு கொண்டிருந்தார்கள். அம்மக்கள் அவருடைய ஜீவிய வரலாற்றைப் புத்தக வாயிலாக வரவேற்கப் பெரிதும் விரும்பினுர்கள். இந்த விருப்பத்தை நிவர்த்திசெய்ய சச்சிதானந்த ஆசிரமத்தின் அபிஷிக்தேஸ்வரானந்த சுவாமிகள் நம்மைப் பெரிதும் வேண்டினுர்கள். மாமுனிவர் பரமஅரூபிஆனந்தசுவாமிகளின் மட்டில் நமக்குண்டான நெருங்கிய அன்பையும் நாம் அவரோடு கொண்ட நீண்ட தொடர்பையும் முன்னிட்டு இப்பேர்ப்பட்ட வேண்டுகோளே பூர்த்தி செய்வது நமது அன்புக்கடமையே !

பிரஞ்சு பாஷையில் வெளிவந்த நூல்களே அனுசரித்து, சற்று விரிவாக்கி, தமிழில் மொழிபெயர்த்து தமிழ் மக்களுக்கு நாம் வழங்கி இருக்கின்றேம். இவ்வரலாற்று நூல் மக்கள் உள்ளத்தில் பதிந்து கிறிஸ்துவ சந்நியாசத்தின் அவசியத்தையும் மேன்மையையும் நன்மையையும்

மக்கள் கண்டுணர நல்குமென்று நாம் நம்புகிறோம். இந் நூலை அன்பர்கள் அனைவரும் ஆர்வத்துடன் படித்துப் பார்க்கும்படி நாம் வேண்டுகிறோம்.

திராவிட இந்தியாவின் ஆன்மீக நலத்திற்காக பாடு பட்ட ஆத்தும தீரர் சுவாமி பரம அரூபி ஆனந்தர். உலகத்தைத் துறந்து தவயோகத்தைப் பூண்ட இந்தியமய சந்நியாசி அவர். நமக்கு இன்ப வழியைக் காட்டின யோகச்சுடர் அவர். நமது இருதயங்களில் ஞான ஒளியை வீசின தவ முனிவர் அவர். இங்கு அவரைப்பற்றி அதிகம் எழுதத் தேவையில்லை. இந்நூலில் அவரைப்பற்றி அதிகம் காணக்கிடக்கின்றது : விரித்துப் படியுங்கள்.

இந்நூலை அச்சிட்டுப் பரப்புவதற்கு பெரிதும் பொரு ளுதவி புரிந்த நமது அடிகளின் பக்தர்களுக்கும் இன்னும் பிற பல ஒத்துழைப்பாளர்களுக்கும் நமது நன்றி உரித் தாகுக.

நமது அடிகள் பரமஅரூபி ஆனந்தம் நிறுவின சச்சிதானந்த ஆசிரமத்தின் யோகச்சுடர் அணையாமல் பிரகாசிக்கும்; அநேக உண்மைத் துறவிகளின் இருதயங் களை காந்தம் போல் வசீகரிக்கும்; அவர்களைத் தேவ சந்நி தானத்தில் அமிழ்த்தி மூழ்கடித்து இறைவனுக்கு இடை விடாத ஆராதனை செலுத்தும்படி துணைபுரியும்.

சச்சிதானந்த ஆசிரமம்,<br>சாந்திவனம்,<br>*18—11—58.*

சுவாமி ஆரோக்கியநாதர்.

PATER FILIUS
अहं
SPIRITUS

# ஆசீருரை.

ஹேவிளம்பி-௵ புரட்டாசி-மீ பகுள பக்ஷ துதியை குருவாரதினத்தில் ஞானகுரு ஸ்ரீலஸ்ரீ பரமாரூபியானந்தம் சுவாமிகள் சமாதியடைந்தார். அவருடைய உயிர் நண்பர் சுவாமி ஆரோக்கியநாதர் எழுதின சுவாமிகளுடைய வரலாற்றுச் சுருக்கம் இறை திருவருளால் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதைப் பார்த்து, நம்முடைய உள்ளத்தில் அளவில்லா மகிழ்ச்சி பொங்குகிறது. ஏனென்ருல், தோபியாஸ் ஆகமத்தில் நாம் வாசிக்கிறபடி ராஜ ரகசியங்களை மறைக்க நன்ருயிருந்தாலும் இறைவன் தம் அடியார்களில் பொழிந்த அருஞ்செயல்களை வெளிப் படுத்துவது தேவபக்தர்களின் கடமை. அதற்குமேலே, கிறிஸ்து பெருமான் கட்டளையிட்டபடி விளக்கைக் குதிருக்குள்ளே மறைக்காமல் எல்லோரின்மேல் ஒளி பிரகாசிக்குமாறு உயர்ந்தவிடத்தில் வைக்கத் தேவையாய் இருக்கின்றது.

நமது அன்புமிக்க குருநாதர் இளமைப் பருவத்தி லிருந்து அருள் பெருஞ்செல்வன் உலக காரியங்களைக் கவனிக்காமல், ஞானக்கண் திறந்து, அந்தர்முகமாகி, எந்நாளும் உள்ளத்தை நோக்கிக் கவர்ந்திருந்தார். இவ் விதமாக திவ்விய ஞானம் பெற்றிருந்ததினுலே நம்முடைய அடிகள் இரவிலும் பகலிலும் உள்ளத்துள்ளவரின் மறைகளை ஆராய்ந்து கொண்டிருந்தார். உள்ளத்து சன்னிதியில் அவர் இடைவிடாமல் தியானத்தில் ஆழ்ந்து,

தன்னை மறந்து, தனக்கும் மறைந்து, அமைதி நிறைந்தவ ராகவும் பூர்ணனந்தமுள்ளவராகவும் அமர்ந்திருந்தார்.

பரம பிதாவின் உட்சன்னிதியில், தேவ புதல்வனோடு ஒன்றித்து, பரிசுத்த ஆவியின் அன்பில் அமிழ்ந்து, எப்பொழுதும் அமர்ந்திருக்கிறது மனுஷர்களுடைய கடமையும் பாக்கியமும் என்பது அம்மாத்துறவியின் உத்தம உபதேசமே.

சொற்பொழிவு வழியாகவும் நூல் வழியாகவும் அந்த உபந்நியாசத்தை அடிகள் அருளியதைவிட அவர் வாழ்விலிருந்து அருமையான மாதிரி இவ்வுபதேசம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

உட்சன்னிதியில் உறையாதவன் வெளியே என்ன செய்தாலும், அது கடவுள் சேவைக்கு வீண். உட்சன்னிதியில் பக்தியாக அமர்ந்திருக்கிறவரின் சேவை மனித கண்களுக்கு எவ்வளவு சொற்பமாய் தோன்றினாலும், அது அளவில்லாத நித்திய பலனாய்விடும்.

அந்த ரகசியத்தைப் பாரத ரிஷிகள் பண்டைய காலத்திலிருந்து உணர்ந்தார்கள்.

அதே ரகசியத்தை யேசுபகவான் மூலமாகவும் திருச்சபை மூலமாகவும் பரம அரூபி சர்வேசுரன், நவீன முறையில், உலகத்திற்கு வெளிப்படுத்தினார்.

தேவ கிருபையினாலே நமது குருநாதரின் உட்கண்களுக்கு சச்சுருவாய் தோன்றினது இம் மறையே!

அவருடைய ஆசீர்வாதத்தினாலே அடியார்களின் உள்ளத்துள் இவ்வொளி பிரகாசிப்பதாக!

இந்நூலை தயாரிப்பதற்கு உதவி செய்த அனைவோருக்கும் இதை வாசிக்கும் ஏனையோருக்கும் ஆசிர் பெருகுக!

**சாந்திவன ஆதினத்தில். சுவாமி அபிஷிக்தேஸ்வரானந்த**

விளம்பி-ஹு தை-மீ அ-ம்வ

# கடவுள் வாழ்த்து

எப்பொருளும் கடந்தோனே!
எவ்விடத்தும் நிறைந்தோனே!
பன்னுமம் பூண்டோனே!
நின் ஒப்பாம் நாமம் இலோய்!
வாக்கிறந்த மறையோனே!
எவ்வுரைதான் நினை ஏத்தும்?
மனம் கடந்த சின்மயமே
எவ்வுளம்தான் எண்ண ஒணும்?

எம்மொழியும் நினை எய்தா
எம்மொழிக்கும் ஆதியனே,
எண்ணம் ஒன்றும் நினை எய்தா
எனினும் எவ் எண்ணமும் நீ!

உயிருளவும் உயிரிலவும்
வாயுளவும் வாயிலவும்
உணர்வுளவும் உணர்விலவும்
ஆயபல பொருள்யாவும்
நேயமுற நினைந்திசைக்கும்
மௌனகுண இசைமூலம்
மகிழ்ந்துன்னை வணங்கிடுமே!

ஆசைவைப்ப தெல்லோரும் உன்மீதே!
அசைந்திடுவ தெப்பொருளும் உனைநோக்கி!

ஆதியும் அந்தமும் இல்லா இறைவா!
அனைத்துக்கும் ஆதியாய் அந்தமாய் நிறைவாய்!
ஏகனே ஏகனல்லாய் ஏகன் அநேகனே!
சர்வனே சர்வனல்லாய் சர்வத்துள் ளும்உறைவாய்!
உள்ளதுமாய் அல்லதுமாம் உண்மையனே!
உள்ளவெலாம் உன்வயினே உள அம்ம!

எப்பொருட்கும் தோற்றுவாய் ஆவதுவும்
நீயன்றோ?
எப்பொருட்கும் எல்லையதாய் இருப்பதுவும்
நீயன்றோ?

விண்ணவரும் காணவொண்ணு வியன் வான வர் முதல்வா!
மண்ணவரின் நல்உறவாய் மண்ணுலகில் மன்னிடுவாய்!
எப்பொருட்கும் உள்ளுறைந்தும் யாவும் கடந்தவனே!
உள்ளம் தனைக்கடந்தும் உள்ளத்துள் உள்ளவனே!

**நாசியாஞ்சு** மேற்றிராணியாரான
புனித **கிரேகோரியாரால்**
கிரேக்க மொழியில் இயற்றப்பெற்ற
கடவுள் வாழ்த்து.

மொழிபெயர்ப்பு :
**திருவாசகமணி**



நித்திய அமர பிதா தன்
தூய மகிமை மகிழ்ச்சி ஒளி
நிர்மல நிரந்தர ஆனந்த
பகவான் ஏசு கிறீஸ்துவே.

கதிரவன் மறையும் நேரம் வந்து
மாலை சோதிதனைக் கண்டு
பிதா சுதனை புகழ்ந்து பாடி
பரிசுத்த ஆவியைப் போற்றிடுவோம்.

சதா காலமும் ஸ்துதிக்குரிய
சுகிர்ந்த குரலால் வாழ்த்தத்தகும்
உம்மை தெய்வப் புதல்வனென
உயிர் தந்த முதல்வனென
உலகம் இன்பக்கடல் மூழ்கி
என்றும் செய்யும் அஞ்சலியே.

(**ஸ்ரீ தனசாமி பிள்ளை** அவர்களால் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட **ஃபோஸ் இலாரோன்** என்ற மாலை ஜோதி கீதம்—57-ம் பக்கத்தில் பாருங்கள்.)

---

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே, கைதொழுது
காண்பார்க்குங் காணலாங், காதலாற் காண்பார்க்குஞ்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே, தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன்.

**(கா. அ.)**

சீரெல்லாமுள்ளுடையை தீதெல்லாநீத் தொளியை
நேரெல்லாம் வெல்வலியை நேமிக்கினியை நீ
யாரெல்லா மென்பரடி கேளிது மெய்யேற்
பாரெல்லாமுன்னைப் பணியாவாறென்னே.

எண்ணுள்ளே யடங்கலின்றி யேந்தமாட்சி பூண்டுவான்
விண்ணுள்ளே பொலிந்துவந்த விண்ணவர்க்கு வேந்தனே
புண்ணுள்ளே மருந்துநீவிப் போனவாட்டை மீட்கவோ
மண்ணுள்ளே யெழுந்துவந்து மண்ணனென்று தித்தனை.

நீர்பாய் உலகிற் குயிரோய்நீ
நிமிர்வீட் டுலகிற் குயிரோய்நீ
சீர்பாய் பாவிற் குரையோய்நீ
திறன்கொண் டாள்வார்க் கடலோய்நீ
ஏர்பாய் இரவிக் கொளியோய்நீ
எம்மே லிரங்கிப் பிறந்தனைநாஞ்
சூர்பாய் துகளற் றுய்வதற்குன்
துணைத்தாள் தொழும்பண் புரையாயோ.

—வீரமாமுனிவர்

## தவத்திரு.

# பரம அரூபி ஆனந்த அடிகளார் நினைவு அஞ்சலி

(ரம்போலா மாஸ்கரேனஸ்)

*1*

*தலைப்பட்டார் மெய்த்தவத்தார் என்னும் சொல்லைத்*
*தாபிக்க அவதாரம் தரித்த சீரான்*
*கலைப்பட்டார் கலைவளத்தைக் காணும் வண்ணம்*
*கங்குல்பகல் இங்குழைத்த கரும வீரன்*
*வலைப்பட்ட வையகத்தைக் காக்க வேண்டி*
*மாதவத்தைக் கேடயமாய் மனத்தில் எண்ணி*
*அலைப்பட்ட காவேரி ஆற்றோரத்தில்*
*ஆச்சிரமம் தனைஅமைத்த அமலன் அம்மா.*

*2*

*அன்னவனும் நன்னயனைப் பரமா ரூபி*
*ஆனந்தம் எனும்பெயரால் அழைப்பார் இந்த*
*மன்னவனை முகமுகமாய்க் கண்டார் தூய*
*வானவனோ இவன்என்ன வழுத்தா நிற்பார்*
*இன்னவனின் மதுரமொழி கனியோ தேனோ*
*இதழரும்பும் குறுநகைக்கிங் கிணையுண் டாமோ*
*முன்னவரும் பின்னவரும் வியந்து போற்றும்*
*முதிர்துறவை எவர்இவன்பால் மொழிந்தார் கொல்லோ.*

3

போனவரை மீட்கவந்த புனித நாதன்
புல்லணையை நல்லணையாய்ப் பொருந்தி ஏனை
ஆனினமும் வேசரியும் தோழ ராக
அமைத்ததனை விளக்கியபோல் அறத்தின் மிக்கான்
வானரமும் நச்சரவும் நரிஓ நாயும்
வண்டுதும்பி விஷப்புழுக்கள் வதியும் காட்டைத்
தான்விழைந்து நாள்கழிக்கப் புகுந்தா னுகில்
தவமுனிவன் மனநிலையைச் சாற்றும் பாலோ.

4

பார்த்தவர்கள் அதிசயிக்கும் பரம யோகி
பாலர்கட்குள் இளைஞரது பசுமை யுள்ளம்
சீர்த்தமுகம் கூர்த்தமதி தெருளார் நோக்கம்
சிந்தையிலும் செய்கையிலும் தீமை சேரான்
ஆர்த்தகுரல் அரட்டல்உரை அணுவும் காணுன்
அதிர்ச்சியிலும் அசையாத அசலம் போல்வான்
போர்த்தவெலாம் காவியுடை பசித்தா லன்றிப்
பொலன்மிக்க நல்லுணவும் புசித்தல் வேண்டான்.

5

அரண்மனையில் வாழ்பவரித் துறவி யாரின்
ஆச்சிரமம் புகுவரெனில் அங்கே வெற்றுத்
தரையதனில் பாய்விரித்து பாய்மேல் இந்தத்
தவமுனிவன் வீற்றிருக்கும் தெளிவு தேர்வார்
மரஅணையோ ஆசனமோ கட்டில் மெத்தை
மற்றையநாற் காலிகளோ மேசைபோன்ற
ஒருபொருளும் இல்லாது கிடுகு வேய்ந்த
ஒண்குடிசை மிளிருகின்ற உயர்வு காண்பார்.

6

மழிக்கின்றார் நெடுந்தாடி வளர்க்கின் றார்கள்
மதுபானம் அபின்கஞ்சா மாந்து கின்றார்
விழிக்கின்றார் இரவுபகல் கூத்துப் பார்த்து
வீண்காலம் போக்குகின்றார் வேலை இன்றிக்
கழிக்கின்றார் சிற்றின்ப நூலுள் தங்கள்
காலமெல்லாம் போக்குகின்றார் கடவுள் பக்தி
பழிக்கின்றார் இன்னவரும் துறவி என்னப்
பாராட்டப் பெறுகின்றார் பழிவே றுண்டோ?

7

இந்நாட்டில் எல்லாம்வீண் கோல மென்ன
ஏளனம்செய் பிறநாட்டார் இனிது கண்டு
தந்நாட்டும் மதித்திடநம் கலைச்செல் வத்தை
சவிஸ்தார மாய்விரித்துத் தகுதி வாய்ந்து
பொன்னான வழிவகையை ஒவ்வொன் றாகப்
பொறுக்கிஎடுத் தன்னவர்க்குப் புரியும் வண்ணம்
சொன்னானைக் கண்திறக்க வைத்திட் டானை
துரிதத்தில் இழந்தனம்யாம் துயரம் அந்தோ.

8

சரித்திரத்தில் காணாத தறுக ணாளர்
தானாண்மைக் காரர்களும் தங்கி எம்பால்
சிரித்துறவு கொண்டாடி இடுக்கண் செய்யும்
சிதடர்களும் கயவர்களும் திரியும் நாளில்
தரித்திரத்துள் தரித்திரத்தை அநுப வித்து
தவத்தாலும் ஜெபத்தாலும் தகைமை குன்றா
உரித்தொடெமக் கிதுகாறும் உதவி வந்த
உறுதுணையை இழப்பதெனில் சகிப்பும் உண்டோ?


9

இத்தகைய தவமுனிவன் எமைவிட் டேக
எங்ஙனம்யாம் உய்குவமோ இவனைப் போலும்
உத்தமனை சத்தியனை மக்கள் தங்கள்
உயிராக நினைந்தவரை ஊக்கி வந்து
நித்தியமும் அன்னவரின் மீட்புக் காக
உழைத்தவனை தன்னிடத்தே அழைத்துக் கொண்ட
அத்தகைய கடவுளனே அவன்நற் ருளில்
அநுதினமும் சாந்தியினை அளிப்பான் மன்னே.





1928-ல் ஓர் ஓவியரால் (அலீஸ் கோன்)
வரையப்பட்ட சாமியாரின் படம்.



அடிகள் பலவித தோற்றங்களில்.

# சுவாமி
# பரம அரூபி ஆனந்தம்.

---

## தோற்றுவாய்

1939-ம் வருஷம் மே மாதம் மேலை நாட்டுக் குருவானவர் ஒருவர் கப்பல் மூலம் வந்து, பம்பாய்த் துறைமுகத்தில் இறங்கினர். தென்னிந்தியாவை அடைவதே அவரது பிரயாணத்தின் குறிக்கோள். வரும்வழியில் அஜந்தா, எல்லோராவிலுள்ள பௌத்த, சமண, சைவக் கலைகளடங்கிய பழங்காலக் குகைக்கோயில்களைக் கண்டு மகிழ்ந்தார். தென் திசைநோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார். ஜூன்-மீ முதல் நாள் (பிரமாதி ஷு, வைகாசித் திங்கள் 18-ம் நாள்) இஸ்பிரித்து சாந்து திருநாளுக்குப் பின் வரும் வியாழக்கிழமையன்று, திருச்சிநகரை யடைந்தார். திருச்சிராப்பள்ளி மேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க ஜேம்ஸ் மென்டோன்சா ஆண்டவரவர்களை அணுகித் தமது வணக்கத்தைச் செலுத்தினர்; ஆண்டவரவர்களுக்கடியிலுள்ள சுதேச குருக்களோடு சேர்ந்து, வேத போதக சேவை செய்யத் தம்மைக் கையளித்தார்; ஆண்டவரவர்களும் அக்குருவானவரை அன்போடு தம் மேற்றிராசன ஊழியராக ஏற்றுக்கொண்டார்கள். மிகவும் வந். ஆண்டவரவர்களின் கனிந்த வரவேற்பினுல் மகிழ்ந்த புதிய குருவானவர், மேற்றிராசன இல்லத் தாழ்வாரத்தில் தனியே உலாவிக்கொண்டிருந்தார். அப்பொழுது மணி காலை 11—40 இருக்கலாம். திடீரெனத் தம்மை நோக்கித் தமிழ்க்குருவானவர் ஒருவர் விரைந்தோடி வருவதைப் பார்த்து, வியந்தார். வந்ததும் வராததுமாய் இருக்க அத்தமிழ்க் குருவானவர் பிரெஞ்சு

மொழியிலேயே தம்மிடம் பேசுவதைக் கேட்டதும், எல்லையற்ற மகிழ்ச்சி யடைந்தார். அது முதல், இருவரும் இணைபிரியா நண்பராயினர். அந்நட்புறவு ஒருவருக் கொருவர் சிறந்த பயனையும் விளைவிக்காமலில்லை : தமிழ்க் குருவானவர் பிரெஞ்சுக் குருவானவருக்குத் தமிழ்மொழி யையும், திராவிட இனத்தவரின் பழக்கவழக்கங்களையும் சிறிது சிறிதாகப் புகட்டலானார்; அவரோவெனில், இவருக்கு பாரத நாட்டின் கலைகளையும், அதன் ஞானச் செல்வங்களையும் அங்கீகரித்து மதிக்கும் மனப்பான் மையை நன் முறையில் ஊட்டலானார்.

இங்ஙனம் ஆறுமாதங்கள் உருண்டோடின. புதிய சுவாமியார் ஒரு கிராமத்திற்கு உதவிப் பங்கு குருவாக அனுப்பப்பட்டார். கர்த்தர் பிறந்த சுபநாள் வந்தது. பக் கத்துக் கிராமமாகிய சின்னாண்டிபட்டியில், நடுச்சாமப் பூசையில் புதிய குருவானவர் தமிழில் தமது முதல் பிரசங் கத்தைச் செய்து மகிழ்ந்தார்.

புதிய குருவானவர், பல வகைகளில் புதுமையான வராகவே விளங்கினார். தம்மிடமிருந்த அற்ப, சொற்ப பணம் முழுவதையும் தாராளமாக ஏழைகளுக்கு வழங்கு வது அவருக்கு வழக்கமாகிவிட்டது. தமக்கென ஒரு சவர்க்காரம் வாங்கவேண்டுமென்றாலோ, திருச்சிராப் பள்ளிக்குப் போகவேண்டியிருந்தாலோ, அவர் தமது பங்கு சுவாமியாரிடம் கையேந்தி நிற்கவேண்டியிருந்தது. இப்புதுமை மனிதர் யாரோ? எங்கிருந்து வந்தாரோ? யார் பெற்ற பிள்ளையோ?

# I. பிரான்ஸ் தேசத்தில் அடிகளாரின் தோற்றம்.

**பிரான்ஸ்** தேசத்து **லயன்ஸ்** அதிமேற்றிராசனத்திலிருந்து, திருச்சிராப்பள்ளி மேற்றிராசனத்துக்கு வந்து சேர்ந்தவர், இந்தப் புதிய குருவானவர். லயன்ஸ் அதிமேற்றிராணியாரான மே. த. கரிதினல் **ஜெர்லியேர்** ஆண்டவர் இவரை இந்தியாவுக்குப்போக எப்படி அநுமதிப்பது என்று வெகுவாகத் தத்தளித்துக்கொண்டிருந்தார். ஏனெனில், பிரெஞ்சு நாட்டுக் குருக்களுக்குள்ளே, இவர் முதிர்ந்த, சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்தார்; நாவன்மைமிக்கபேச்சாளர்; நடைமுறையறிவிற் சிறந்த போதகர்; எதிர்பாராத நிலையில், ஆச்சரியமான முறையில் பற்பல புதிய புதிய விஷயங்களை அடுக்கடுக்காகக் கூறிக் கேட்போரின் உள்ளத்தைத் தொட்டுத் தட்டியெழுப்பி உணர்த்தவல்ல அரிய வேதசாஸ்திரி; ஞானக்காரியங்களில் தமது வழிகாட்டுதலை ஆவலோடு நாடித்தேடுகிறவர்களுக்கு அருமையான ஆத்துமகுரு; கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவர்களல்லாதவர்களுமான அறிஞர்களுக்கு, அசாதாரணமான ஆலோசனையாளர்; அவரைச்சந்திக்கும் யாவருக்கும் நுணுநுணுக்கமான அன்புமிக்க உண்மைச் சிநேகிதர். இத்தகையவரை மனதாரப்போய் வாரும் என்று எப்படிச் சொல்லுவது! ஆயினும், வேறு வழியுமில்லை.

*1895*-ம் ஆ ஏப்ரல்-மீ *10*-ம் உ பெரிய புதன் கிழமையன்று பிறந்தவர் இந்த நமது புதிய குருவானவர்! அந்நாளைக்குறிப்பிட்டு இவர் எப்பொழுதும் பெருமையாய்ப் பேசிக்கொள்வார். பிரான்ஸ் நாட்டில், **போஜோலே** என்னும் பகுதியில் **ஃப்லெரி** என்னும் கிராமத்தில், திராட்சை பயிரிடுவோர் குடும்பத்திலே இவர்

தோன்றினார். இவரது தந்தையின் குடும்பப் பெயர், **மோன்ஷனன்.** இவருக்கு ஞானஸ்நானம் கொடுத்த போது **ஜூல்** எனும் நாமம் இவருக்குச் சூட்டப்பட்டது. இளம் வயதிலேயே இவர் தமது ஊரைவிட்டுப் பிரிந்தாலும், வசீகரமான தங்கள் சொந்த வீட்டைப்பற்றி உயர்வான நினைவே இவருக்கிருந்துவந்தது. வீட்டுத்தோட்டத்திலுள்ள இலையடர்ந்ததோர் மரத்தடியை இவர் நினைத்துக்கொள்வதுண்டு. அந்த மரத்தின் கிளைகளுக்குள்ளே சென்று மறைவாக அமர்ந்துகொண்டிருப்பது, இவருக்குப் பழக்கமாம். ஒரு பொழுதும் மறக்க முடியாத சாந்தியும் ஆனந்தமும் பூரணமும் அங்கு இவரால் அநுபவிக்க முடிந்ததாம். தண்ணீர்ப்பள்ளி **சாந்திவன சச்சிதானந்த ஆசிரம** வாழ்வுக்கு வித்து இவ்வாறுதான் இடப்பட்டதுபோலும்!

நமது ஜூல் மோன்ஷனன் இளமையிலிருந்தே வியாதியால் பீடிக்கப்பட்டார். வாழ்நாள் முழுவதும் அவரைத் தொல்லைப்படுத்திய இளைப்பு வியாதி, அவர் பிறந்த 14-வது மாதத்திலேயே அவரைப்பற்றிக் கொண்டுவிட்டது. இடையறாத கவலையோடு பாதுகாத்து வந்த அன்பான தம்தாயின் அரிய கவனிப்பு இல்லாவிட்டால் அவர் பிழைத்திருக்கவே மாட்டார். இத்தகைய மென்மைவாய்ந்த உடல்நிலையோடு கூடிய தம்மகன் அயல்நாடு செல்லத்துணிந்தபோது, அந்தத்தாயின் உள்ளம் எவ்வளவாகத் துன்பப்பட்டிருக்கும்! இவரும் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்! இந்தியாவுக்கு வந்த பின்னர், இருவரும் கடிதங்கள் மூலமாகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். தாயாருக்கு வயது தொண்ணூறு ஆனது. தாம் இந்த உலகத்தை விட்டுப் பிரியுமுன்னர் தம்மகனைக்கண்டு தமக்கு அவர் இறுதி ஆசிர் அளிக்க வேண்டுமென்பது, அந்த அம்மாளின் ஆசை. ஆனால் ஆண்டவர் திருச்சித்தம் வேறாக இருந்தது: தமதன்புள்ள

தாயாருக்கு மோட்சத்திலே தக்கதோர் இடம் தயார் செய்ய, மகன் முன்னமேயே பரமபிதாவிடம் செல்லும்படியாயிற்று! ஆண்டவன் வழிகளை அளவிட்டறிபவன் யார்?

## குரு பட்டாபிஷேகம் பெறுதல்

1922-ம் ஞூ, ஜூன் மீ 29-ம் உ, அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாளன்று, லயன்ஸ் நகர் மேற்றிராசனக்கோவிலில், மோன்ஷனுன் சுவாமியார் குருப்பட்டம் பெற்றார். அங்கேயே, உதவிப்பங்கு குருவாக, பத்து ஆண்டுகளாகச் சிறந்த தொண்டாற்றினார். அவரது படிப்புத்திறமையைக் கண்ட சிரேஷ்டர்கள், ஒரு கலாசாலைப் பேராசிரியராக்கும் கருத்துடன் மேற்படிப்புக்கு அனுப்ப ஆவலாயிருந்தார்கள். ஆனால், அவரோ ஏழைகளோடும், பாட்டாளி மக்களோடுமே தங்கியிருக்க வெகுவாக விரும்பினார். அவர் விருப்பத்தை மதித்து ரொக்கமாரி (Rocamarie) என்னும் ஊருக்கு உதவிப் பங்கு குருவாக அவரை அனுப்பிவைத்தார்கள். அந்த ஊர், நிலக்கரிச்சுரங்கம் உள்ள இடமாகும். அங்கே அவர், தொழிலாளருடன் சாதாரணமாகவும், அன்பாகவும் கலந்து, பழகலானார். பின்னர் அவர் மேலும் சில பங்குகளுக்கு உதவிக்குருவானவராக நியமனம் செய்யப்பட்டார். பிறகு ஒரு சில கலாசாலைகளில் ஆசிரியராகவும், ஆத்துமகுருவாகவும் பணியாற்றினார். எங்கே இருந்தாலும், அவருடைய சேவையானது மிகுந்த ஞானநன்மைகளை விளைவித்தது என்பதற்கு ஐயமில்லை. அவருடைய பக்திவைராக்கியம் எப்படிப்பட்டதென்றால், தமது பதவிக்குரிய ஊழியத்திற்கும் மேம்பட்ட தவக்கோலம் கொள்ளச் செய்துவிட்டது.

## 6

## கலையுள்ளம்.

மோன்ஷுன் சுவாமியார், தமது அந்தஸ்தின் கடமைகளை இவ்வளவு பிரமாணிக்கமாகச் செய்துவந்தாலும் சங்கீதம், ஓவியம், இலக்கியம், மனித இயல், விஞ்ஞானம், கணிதம் முதலான கலைகளில் அடைந்திருந்த பாண்டித்தியம், எவருமே வியக்கத்தக்கதாயிருந்தது. முந்தினவாரத்திலே, பாரிசிலோ அல்லது ஜெனேவாவிலோ பெயர் பெற்ற பண்டிதர்களுடனே யாவரும் பேசிப்புகழும் வண்ணம் பேசிக்கொண்டிருப்பார்; மறுவாரத்திலே ஏகாந்திகளுடன் ஏகாந்தியாகக் கலைகளிலும், சாஸ்திரங்களிலும் புத்தம் புதிய கருத்துக்களைப்பற்றி அவையாவும் மிக எளிதானவை போலத் தோன்றுமாறு, இயல்பாக உரையாடுவார். எனினும், யாவற்றுக்கும் மேலாக அவரைப் பெரிதும் ஆட்கொண்டது, தத்துவ சாஸ்திரமே! சிலகாலம், மாணவர்களுக்குத் தத்துவசாஸ்திரம் கற்பித்தும் வந்தார். தத்துவ சாஸ்திரத்திலே அவர் எவ்வளவு மூழ்கியிருந்தாரென்ருல், உண்மையில் அவரை ஒரு கிரேக்கக் கலை உள்ளம் படைத்தவர் என்றே கூறும்படியாயிருந்தது. அந்தப் பழங்காலக் கிரேக்க அறிஞர்களைப் போலவே, மனிதனுடைய அதிமுக்கிய அலுவல் சிந்தித்தலும், தியானித்தலும் என்று எண்ணுபவர் அவர். ரூபிகரமான அந்தச் சிந்தனைப் பெருங்கடலிலே அவர் சதா நீந்திக்கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. அதனுல், தத்துவ சாஸ்திரத்துறையிலே நவீனகாலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை அவர் அறியார் என்பதுமில்லை. பழமையிலே ஆழ வேரூன்றி நின்ருலும், புதுமை மலர்ச்சியையும் அவர் புறக்கணித்தவரல்லர். எனவே, தத்துவ சாஸ்திர மனப்பான்மை அவர் சுபாவத்தோடு இரண்


டறக்கலந்து நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்ததென்னலாம். பிற்காலத்தில், சாந்திவனத்தின் ஏகாந்தத்திலே முதலாய், சகலவிதமான புதிய நூல்களையும் அதிக ஆவலாகப்படித்த வண்ணமிருந்தார்.

## தீவிர ஆன்மசேவை

கலைகளிலும், சாஸ்திரங்களிலும் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தாலும், நமது சுவாமிகளுக்கு, ஆத்துமங்களிடத்திலே அளவிறந்த ஆர்வம் உண்டு; ஆன்ம சேவையே அவரது ஏகதாகம். தத்தம் ஆத்ம சாந்திக்காகவும், அறிவொளிக்காகவும் எத்தனையோ மாணவரும், மாணவியரும், லயன்ஸ் நகரிலிருந்த நம் சுவாமிகளின் சிறிய அறைவீட்டை நாடித்தேடி வந்தவண்ணமிருந்தனர். வழிதவறிச் சிதறியலைந்தவர்களாய் அந்தச் சிறிய அறையையடைந்து மீண்டும் நல்வழியையறிந்து இறைவனருளுக்குகந்தவர்களானோர் எத்தனையோ பேர்! அறியாமையிருளில் மூழ்கித்தவித்து, அங்கே கிறிஸ்தவ நெறிமுறையின் ஞான ஒளியையறிந்து மகிழ்ந்தவர் எத்தனையோ பேர்! தேவ அழைத்தலைத் திட்டவட்டமாக உணர்ந்து அதற்கு செவிசாய்த்தவர் எத்தனையோ பேர்! கிறிஸ்து நாதருக்குச் சாட்சியம் கூறுவோராய்த் தொலைதூர நாடுகளுக்குச் செல்லவும் துணிவுகொண்டோர் எத்தனையோ பேர்! அவர்களுள் இல்லறவாசிகளுமிருந்தனர்; துறவறத்தாரும் இருந்தனர். சிலர் தத்தம் சொந்த நாடுகளிலே தங்கிவிட்டனர்; மற்றும் சிலர் கடல் கடந்து, இந்தியா, சீனு, ஆப்ரிக்கா, இஸ்லாமிய நாடுகளுக்குச் சென்றனர். ஜீவியபுத்தகத்தின் பொன்னேடுகளிலேதான், இந்த விவரத்தை யெல்லாம் நாம் அறியலாகும்!

## கிறிஸ்துவின் சம்பூரணத்தைக் குறித்து நோக்குதல்

சங்கைக்குரிய மோன்ஷஞன் சுவாமிகள் யாவரையுமே அன்புடன் வரவேற்ருலும், ஒருசிலரே அவரது விசேஷ வசீகரத்தால் கவரப்பெற்ருர்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் யாரென்ருல், திருச்சபையிலே கிறிஸ்துநாதரின் சம்பூரணத்தை, முழுநிறைவை நோக்கி நடந்துசெல்லுவோர் எனலாம். அவர்களுள் சிலர், கிறிஸ்து பெருமானே தங்கள் கதியும், யாவும் எனத் தெரிந்துகொண்டவர் ஆவர்; வேறு சிலர் அதனைத் தெளி



வாக அறியாமலுமிருந்தனர். என்ருலும், **பரமாரூபியின் ஏவலினுலேயே அறிந்தோரும், அறியாதோருமான யாவரும் நடப்பிக்கப்படுகின்றனர் என்ற உண்மையை** நமது சுவாமியார் நன்குணர்ந்திருந்தார் எனலாம். பிறரை அன்புடன் வசீகரிக்கும் விசேஷவரம் அவர் பெற்றிருந்தார் போலும்! திருச்சபையில் கிறிஸ்துநாதரின் சம்பூரணத்தை, பரமாரூபியின் இந்த ஞான அலுவலை, உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவர் தீவிரமாக உணர்ந்தார். சத்திய திருச்சபை காணக்கூடிய

வெளி அடையாளங்களைக் கொண்டது என்பது, உண்மையே என்றாலும், இந்த வெளிவரம்பிற்குப் மேலாக, ஒருவகையில் அதற்கும் அப்பால், பரமாரூபியின் செயலை அவர் தமது அகக் கண்களால் நன்கு ஊடுருவிப்பார்க்கலானார். உலகக் கொந்தளிப்புகளிலும், நாசம் மிகுந்த கோரக்காட்சிகளிலும், தனிப்பட்ட நாடுகளின் மாறுதலமைந்த நிகழ்ச்சிகளிலும் கூட பரமாரூபியின் திருச்செயலை அவரால் காணமுடிந்தது. ஏன் கூட தனிமனிதர் ஒவ்வொருவரது வாழ்க்கைப் போக்குக்கும் அடிப்படையில் பரமாரூபியே காரணமாய் இருப்பதை அவர் நிதரிசனமாக உணர்ந்தார்.

இதிலே நாம் வியப்படைவதற் கொன்றுமில்லை. கிறிஸ்துநாதர் ஒருவரே சர்வத்துக்கும் பரமகதியானவர் அன்றோ? அர்ச். சின்னப்பர், எபேசியருக்குத்தாம் எழுதின நிருபத்தில் வெளியிடும் இந்த உண்மை, சங். மோன்ஷுண் சுவாமிகளுக்கு, விசுவாசசத்தியத்துக்கும் மேற்பட்டதாகப்பட்டது எனலாம். ஏனெனில் ஒவ்வொருநாளும் ஒவ்வொருகணமும் இந்த உண்மையைத் தமது இருதயத்தின் ஆழத்தில் அநுபவித்துக் கிறிஸ்துவின் இயல்பைச் சுவைத்துக்களித்தார் எனலாம். இந்த உறுதியான விசுவாசம் அவருடைய அகப்புறப்புலன்களிலெல்லாம் நன்கு ஊறிப்போயிருந்தது. தமக்கிருந்த அந்த அறிவிலே, உணர்ச்சிமிகுதியிலே யாவரும் பங்கு பெறுமாறு எல்லாவகையான முயற்சிகளையும் சலியாது மேற்கொண்டார். 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது ஆன்றோர் அநுபவமொழியன்றோ! தனியாக அவருடன் உரையாடும் பொழுதெல்லாம் இந்த உண்மை அரும்பிமலர்ந்து பரிமளித்ததுடன், அவரது அறிவொளியூட்டும் சொற்பொழிவுகளிலும், இவ்வெண்ணம் சதா ஊடுருவிப் பாய்ந்துவந்த வண்ணமிருந்தது. தத்துவசாஸ்திரப் பிர

சங்கங்களின்போது, இது அலைமோதியெழும் அருவி போலப் பீறிட்டுப்பாய்ந்தது. ஆலயச்சடங்கு ஆசாரங்களிலும் இது அபரிமிதமாகத் தோற்றமளித்தது. வேதாகம போதகங்களில் பொங்கியெழும்பி வழிந்தோடினது. அதுமட்டுமா? அவரது தேஜஸ்மயமான தோற்றப் பொலிவிலேயே அது சுடர்விட்டுப் பிரகாசித்தது. சுருங்கச் சொல்லின், இவ்வுண்மையே அவரது வாழ்க்கையின் அடிப்படை இரகசியம் எனலாம்.

## பாட்டாளி மக்கள்மேல் பரிவு

உலகத்திலும், உலகசரித்திரத்திலும் **கிறிஸ்தவ மதிப்பீடு** என்பதொன்று ஊடாடுகின்றது என அவர் நன்கறிந்திருந்தார். ஆதலால், தொழிலாளர் முன்னேறிச் சென்றுகொண்டிருப்பதை மிக்க ஆர்வத்துடன் அவர் கவனித்துவந்தார். **கிறிஸ்தவ மதிப்பீடு** என்பதென்ன? கிறிஸ்துநாதர், பிதாவின் மூல பிரதிபிம்பம். எனவே, இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும், கிறிஸ்துவின் சாயல்; அதனுலேயே ஒவ்வொரு மனிதனும் பிற ஒவ்வொருவனுடையவும் சாயலாகவும் விளங்குகிறுன். ஆகையால், சகலரும் பரம பிதாவின் மக்கள்; கிறிஸ்துநாதரின் சகோதரர்கள். இந்தக் கிறிஸ்தவ மதிப்பீடுதான் உலகின் சகல ஜாதி ஜனங்களையும் **சமநிலையிலும், சம மகிமையிலும், சம செல்வாக்கிலும்** சமப்படுத்தத் தூண்டுகிறது.

திருச்சபையோ, ஒரு தெய்வீக ஸ்தாபனம். ஆயினும் அது ஜனசமுதாயத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த சமுதாய சம்பந்த அளவில், சமுதாய நீதியைச் சகலரும் தம்மில் சமமாக சுகித்தனுபவிக்கும்படியாகக் கிறிஸ்துநாதர் வற்புறுத்துகின்றுர். ஆனுல், உலகத்திலோ, இடைவிடாது அமைதியின்மையே நிலவுவதைக்

காணுகிறோம். அமைதியற்ற இந்த நவநாகரிக யுகத்திலே, திட்டவட்டமான இலட்சியவாழ்வு, குறிக்கோள் ஒன்று, இன்றியமையாத தேவையாகும். இதனை இளமையிலேயே எவ்வாறோ நன்குணர்ந்து கொண்டுவிட்ட நமது அடிகளார், பள்ளி மாணவராயிருந்த காலத்திலேயே, தம் மைத்துனனோடு சேர்ந்து, இத்தகைய இலட்சிய வாழ்வை ஜன சமூகத்தில் புகுத்தும்படி, வெகுவாகப் பாடுபட்டார். தமது ஆயுள்நாள் இறுதிவரை, தமது ஆசிரமத்தின் ஏகாந்தத்தில் சஞ்சரித்த காலத்திலும், தம்மால் இயன்ற வரையில் பொதுவுடைமைக் கொள்கையிற் பொதிந்துள்ள எண்ண வளர்ச்சியையும், அதன் தீவிர விஸ்தரிப்பையும், கிறிஸ்தவக் கோட்பாடுகளை எதிர்கொண்டு அது மோதுவதையும் பற்றி மென்மேலும் அறிந்துகொள்ள மிகவும் ஆவல் கொண்டிருந்தார். பொதுவுடைமைக் கொள்கையிலுள்ள சில நல்ல அம்சங்களைத் திருச்சபைக் கொள்கைகளிலே புகுத்த வேண்டுமென அவர் எவ்வளவோ கவலை கொண்டிருந்தார்! இதுவே, பாட்டாளி மக்கள் மீது அவர் மிக்க பரிவு கொண்டிருந்ததன் உண்மைக் காரணமாகும்.

## அனைத்திலும் அணைகடந்த அன்பு


கிறிஸ்தவர்களிடையேயுள்ள பிரிவினைகளை ஒழிக்கவும், எல்லோரும் திருச்சபையிலே சேரும்படி செய்யவும் அக்காலத்தில், சங். குத்திரியேர் சுவாமிகளால், பிரான்ஸ் நாட்டில் தொடங்கப்பெற்ற சங்கத்திற் சேர்ந்து, நமது சுவாமியார் மிக ஊக்கத்துடன் உழைத்தார். கிறிஸ்துநாதர் யூத குலத்திலே பிறந்திருப்பதால் யூதர்கள் நம்முடைய குருவானவருக்கு அதிக பிரியமுள்ளவர்கள். அவர் யூத கிறிஸ்துவ சங்கங்களில் அநேகமுறை கலந்து கொண்டார். அச்சங்கங்களில் தாவீதுராஜா இயற்றின சங்கீதங்களைப் பாடினர். அதன்பின் எபிரேய பாஷை

யில் "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்ற மந்திரத்தைக்கூட ஜெபிப்பார்.

இஸ்லாமியமும் அவருக்கு அதிக விருப்பமாக இருந்தது. அது வைராக்கியம் நிறைந்த ஓர் பூந்தோட்டமாக அவருக்குக்காட்சியளித்தது. அப்பூந்தோட்டம் பரமபிதாவின் தனித்து நிற்கும் சுயம்பு தத்துவத்தை பிதாப்பிதாக்களுக்கு சூஃபி என்னப்பட்ட இஸ்லாம் ஞானிகளுடைய இரகசியமான கொள்கையை வெளிப்படுத்துகிறது. அந்த ஞானிகளில் முதன்மையான அல் ஹல்லாஜ் என்பவரை அவர் பெரிதும் மதித்தார். அவர் அநேக தடவை வட ஆப்பிரிக்காவுக்கும், அல்ஜீரியாவுக்கும், மொரோக்கோவுக்கும் பிரயாணம் செய்தார். எல் அபியோது வரையிலும் அவர் சென்றூர். அந்த இடத்தில் உலக பிரபல்யமான கனம் சார்ல்ஸ்தெஃபூக்கோ சுவாமியார் ஒரு காலத்தில் அரிய தொண்டாற்றினூர். அப்பொழுது கனம் தெஃபூக்கோ சுவாமிகளின் கருத்துக்கிசைய சந்நியாசிகளின் ஓர் புதுச்சபை உருவாக்கப்பட்டிருந்தது. இராபாத் என்ற ஊரில் கிளாரிஸ் என்ற ஓர் மடம் இருந்தது. இந்த மடத்தின் ஸ்தாபனத்திலும் வளர்ச்சியிலும் அதிகக் கவனம் செலுத்தினூர். ஏனென்றூல் அங்கு கிறிஸ்துவ மதத்தில் இஸ்லாமிய மலர்ச்சியும் பூர்த்தியும் மிளிர்வதற்காக தியான ஜீவியத்திலேயே அந்த சபைக் கன்னியாஸ்திரிகள் ஈடுபட்டிருந்தார்கள். அவ்வித நோக்கத்தை ஏன் இந்தியாவில்கூட நிறைவேற்றக் கூடாது என்பது அவர் கருத்து.

சீனூ காரியங்களிலும் அருமையான ஓர் நண்பரினூலே அறிமுகப்படுத்தப்பட்டார். நமது குருவானவர் இந்தியாவுக்கு தன் ஜீவியத்தை அர்ப்பணம் செய்ய ஆசைப்பட்டது போல அந்த நண்பரும் தன் ஜீவியத்தை சீனூவுக்கு அர்ப்பணம் செய்ய தீர்மானம் செய்திருந்தார். பிறகு அவர்

சீனுவுக்குச் சென்ருர். ஆனுல் சில ஆண்டுகளுக்குப்பின் கிறிஸ்துவ மதத் துவேசத்தால் அந்த நண்பர் சீன தேசத் திலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டார். இந்த இடை வேளேயில் இவர்கள் இருவரும் சீன மாணவர் களே வரவேற்று அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர் களுக்கு உதவி செய்தார்கள். அவர்கள் வேதத்தைப் பற்றித் தர்க்கிக்கவில்லே. ஆனுல் அவர்கள் அன்பின் மூலமாய் அவர்களே வசீகரித்தார்கள். அவர்களில் சீன தேசத்து புத்தமத சீடர் ஒருவர் அவர்களிடம் கிறிஸ்துவ மதத்தைப்பற்றி அறியக்கேட்டார். அவருடைய நோக் கம் என்ன வென்ருல் தன் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து சுதேச சீனுவுக்கு விரோதமான அந்த கிறிஸ்துவ கொள்கையை அதிக பலனேடு எதிர்த்துத் தள்ளக்கூடு மென்ருர். அப்படியே அவருக்கு கற்றுக்கொடுக்க சம்மதித் தார்கள். இருபது வருஷத்திற்குப்பின் அந்த புத்த ருடைய ஊக்கமான சீடர் கிறிஸ்துநாதருடைய குருவாக பட்டாபிஷேகம் பெற்ருர்.



## II. அடிகளாரை இந்தியாவுக்கு அழைத்தல்

இந்தியாதான் கனம் மோன்ஷுனன் சுவாமிகளை மற்ற நாடுகளைவிட அதிகமாக வசீகரித்தது. நமது சுவாமியாரையும் இந்தியாவையும் ஓர் இயற்கை சம்பந்தம் இணைத்திருப்பதுபோல உண்மையாகத் தோன்றும். முற்பிறப்பில் ஓர் இந்தியாவாசியாக அவர் பிறந்திருக்கலாம் என்று இந்து சிநேகிதர்கள் சொல்லுவது வழக்கம். அவர் முற்காலத்தில் ஓர் பெரிய ஆசாரியாருடைய சீடனுகவோ அல்லது காவேரி நதிக்கரையிலோ, அருணுசல சாரலிலோ, ஓர் ஏகாந்தியாக எழுந்தருளினுரோவென்று இந்து உலகம் அவரைப் போற்றும். ஜனங்கள் எப்படி நினைத்தாலும் அழைத்தல் என்ன என்பது கிறிஸ்தவர்களுக்கு சந்தேகம் இராது. இங்கு அழைத்தலைப்பற்றி ஒரு விஷயம் குறிப்பிட்டுச் சொல்லுவது அவசியம். அதாவது அழைத்தலானது சிக்கலான வம்சவாரியையும் எல்லாவிதப் படிப்பையும் அழைத்தலுக்கு சாதகமான விசேஷ சூழ்நிலைகளையும் தாண்டி நிற்கிறது. இன்னமும் அழைத்தலானது இயற்கையைக் கடந்தது. அது இயற்கைக்கு மேலானது, கடவுளால் நித்தியத்தில் அழைத்தலானது நிச்சயிக்கப்பட்டதென்பதாம். சேசுநாதர் விண்ணுலகை விட்டு மண்ணுலகில் நரனுய்ப் பிறந்தார். எதற்காக? நரனை தேவனுக்க.

இந்த அலுவல் உலகத்தில் ஒவ்வொருநாளும் விருத்தியடைந்து கொண்டே போகிறது. சத்திய திருச்சபையில் மனிதனை தேவனுக்குகிற அலுவல் பரிணமித்துக்கொண்டே செல்லுகிறது. இந்த தெய்வீக பரிணமமானது சேசுநாதர் சாவிலிருந்து உயிர்த்ததில் அடங்கி இருக்கிறது. உலகமெல்லாம் சேசுநாதரோடு பாவத்திலிருந்தும் பிசாசின் அரக்க அதிகாரத்திலிருந்தும் சாவி

லிருந்தும் விடுதலையாகி திரும்ப புத்துயிர் பெற்று உயிர்க்க வேண்டும். இந்த புத்துயிர் பெற்று உலகம் உயிர்க்கும் வேலையை பரிசுத்த ஆவிதான் சேசுவின் மூலமாக சேசு விடம் நடத்துகிறார். நித்தியத்தில் சர்வேசுரன் சகல காரி யங்களையும் நிரூபித்திருக்கிறார். நித்தியத்தில் நிரூபித்திருக் கிற காலம் உலகத்தில் ஏற்படவே சகல ஜாதி ஜனங்களை யும் திருச்சபையோடு கிறிஸ்துவ சம்பூரணத்தின் ஐக்கியத் தில்சேர்ந்து கிறிஸ்துவ உருவடைய பரிசுத்த ஆவி மானி டர்களை அழைக்கிறார். இந்த மானிடர்கள் தேவன் நித்தி யத்தில் நிரூபித்திருக்கிற கதியை அடைவதற்கு சாதக மான வெளிப்படையான சூழ்நிலைகளோ இரண்டாவ தான உபகாரணங்கள்.

மனித ஆத்துமம் கடவுளின் ஜீவியத்தில் பங்கடைந் திருக்கிறது. மனிதன் ஆரம்பத்தில் உண்டாக்கப்பட்ட போது அவனில் தேவ சீவியமும் இயற்கை சீவியமும் ஒன்றாய் இருந்தன. ஏனெனில் கடவுள் மனிதனைப் படைக்கும்போது அவனை தன் சாயலாகப் படைத்தார். சேசுக்கிறிஸ்து ஆதியில் வார்த்தையாய் இருந்தார். வார்த்தை தேவனாகவுமிருந்தார். அந்த வார்த்தை பிதா விடமிருந்து நித்தியத்திற்கும் பிறக்கிறது. அந்த வார்த்தை பிதாவின் சாயல். அந்த சாயல் பிதாவின் அசல் சாயல். மனிதனோ பிதாவின் திட்டத்தில் நித்தி யத்திலும் இருக்கிறான். ஆகையால் சேசுக்கிறிஸ்துவான சுதன் பிதாவிடமிருந்து நித்தியத்தில் பிறக்கும்போது அந்த சுதனோடு மனிதனும் நித்தியத்தில் திட்டம் செய்யப் பட்டு காலத்தில் பிறக்கிறான். ஆகையால் பிதாவிட மிருந்து நித்தியத்தில் பிறக்கிற சுதன்பிறப்பிலேயே மனித னுடைய பிறப்பும் அழைப்பும் அடங்கி இருக்கின்றன. இந்த திவ்விய திட்டத்தில் எல்லோரும் அழைக்கப்பட் டிருக்கிறார்கள். ஆனால் சில பேருக்கு தேவ அனுக்கிரகத் தினாலே முக்கியமான அழைத்தல் உண்டு. சகோதரர்கள்

பரம கதியை அடைவதற்கும் உலக முழுதும் திருச்சபைக் குள் கிறிஸ்துநாதரின் சம்பூரணத்தைப் பெறுவதற்கும் விசேஷமான வகையில் உழைக்க பரம பிதாவிடமிருந்து ஆணை வாங்கினர்கள். அவ்வாறே 16வது நூற்றூண்டிலே **அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார்** இந்தியாவுக்கு வேதபோதக அலுவலுக்காக அழைக்கப்பட்டார். அதேபோல தமிழ் நாட்டிற்கு **ராபர்ட்தெநோபிலி** தத்துவ போதகர் வேத போதகத்திற்காக அனுப்பப்பட்டார். அதே காலத்தில் கனம் ரிச்சி சுவாமியார் சீனுவில் வழிகாட்டினர். நம்மு டைய காலத்தில் **வின்சென்ட்லெப்** என்பவர் ஓர் முன் னேடியாக சுதேச ஞான அதிகார வரிசைக் கிரமத்தை ஆரம்பித்து வைக்க தேவ கிருபையால் தெரிந்தெடுக்கப் பட்டார். நமது நூற்றூண்டிலேயும் இஸ்லாமிய மண் டலம் சேசுநாதரின் திவ்விய ஒளியை அறிய தயார் செய் வதற்காக தியானம் மௌனம் நிறைந்த சீவியம் நடத்த தேவபராமரிப்பால் சார்ல்ஸ் தெஃபூக்கோ ஸஹாராவுக்கு அனுப்பப்பட்டார். அந்த விசேஷமான தேவ அழைப்பு களில் நமது சுவாமியாருடைய அழைப்பும் ஒன்றல்லவா !

## அழைத்தலின் பக்குவமாகுதல்


கனம் **மோன்ஷுன்** சுவாமிகள் புத்திசாதுர்ய முள்ளவர். படிப்புகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். இவைகளுக்கு மேலாக அவர் தேவ அருளினல் தேர்ந் தெடுக்கப்பட்டவர். அந்த விசேஷமான தேவ அழைப்பு களில் நமது சுவாமியாருடைய அழைப்பு ஒன்றல்லவா ? ஆழ்ந்த சிந்தனை சிறந்த ஞானமுள்ளவர். முன் சொன்ன பெரியார்களைப்போல மேலான கருத்துடன் வேதபோதக அலுவலில் உழைக்க அவர் இந்தியாவுக்கு வந்தார். இவ்வித ஆச்சரியமான அவருடைய தேவ அழைத்தல் இந்திய திருச்சபையிலே நிதரிசன ரீதியில் வெளிப்படுத்தப்

பட்டது. அவர் வேதபோதக அலுவலுக்காக பக்குவமடைந்திருந்தார். இயற்கையாகவே அவருடைய ஆத்மா சதா சிந்திக்கும் ஸ்திதியில் இருந்தது.

திருச்சபையின் பழங்கால பிதாப்பிதாக்களின் நூல்களாலும் முக்கியமாக மத்திய கால ஞானிகளின் கிரந்தங்களினுலும் போஷிக்கப்பட்டிருந்தார். அது காரணமாக பண்டைய பாரதத்தின் தத்துவ சமய ஸ்தாபனங்களுடைய அடிப்படையான தத்துவங்களாகிய சிந்தனைகளின் ரகசியங்களைக் கண்டுபிடிக்கக் கூடுமானவராஞர்.

## திருச்சபைக்குள் இந்தியா அழைக்கப்படுதல்

ஆழ்ந்த அறிவுடன் இந்தியாவின் வைதீகத்தினுடைய முக்கிய இரகசியத் தத்துவங்களை முழுதும் அவர் எடுத்துக் காட்டவும் கூடும். அவசியமாஞல் காலாகாலத்தில்



மனிதனுடைய போதுமான சாதுரியமின்மையால் ஏற்படும் அரைகுறையான வெளியீடுகளை அவர் விளக்கக் கூடும்.

இந்தியாவை அவர் நினைக்கும்போதெல்லாம் அவருடைய ஆச்சரியம் மட்டுக்கு மீறிக்கொண்டே போனது. இந்தியாவிலோ பழங்கால மதிப்புக்குரிய அநேக இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன. அந்த இரசியங்களை ஆராய்ந்து எடுக்க வேண்டும். அந்த இரகசியங்கள் தேவ அழைத்தலைக் கொண்டிருக்கின்றன. ஒரு நாள் இந்திய திருச்சபையிலே அந்த இரகசியங்கள் விளக்கப்பட்டு அர்த்தம் கூறப்படும். அப்பொழுது இந்தியா கிறிஸ்து மயமாக மாறி மின்னும். இவ்வித இந்திய அழைத்தலை எதிர் கொண்டு ஏற்றுக்கொள்ள தீவரித்தார் கனம் மோன்ஷுஞன் சுவாமிகள்.


திருச்சபையானது தன் ஏவலாளர் மூலமாக கிறிஸ்துவ சுப செய்தியை உலகத்திற்கும் இந்தியாவுக்கும் அனுப்புகிறது. ஆனால் இந்தியா இன்னும் அச்சுப செய்திக்குச் செவி சாய்க்கவில்லை. ஏன்? பிதாவின் அதி உன்னத சந்நிதானத்தில் வார்த்தையானவர் மணவாளனாய் விளங்குகிறார். அந்த மணவாளனான வார்த்தையோடு இந்திய மயமான ரீதியில் கிறிஸ்துவின் ஏவலாளர் ஆத்மா முதலில் லயிக்க வேண்டும். அப்பொழுது உள் இரகசியங்களை பக்தியாய் கிரகிக்க வேண்டும். இப்படி குருமார் செய்தாலொழிய இந்தியா கிறிஸ்துவத்திற்குத் தன் கதவைத் திறவாது. கடவுள் சர்வ வல்லபமுள்ளவர். அவர் சகலத்தையும் ஆக்கவும் அழிக்கவும் கூடும். அவர் இந்தியாவைத் தன் வல்லபத்தால் மனந்திருப்புவார் என்று போதிப்பதால் இந்தியா மனந்திரும்பாது. அனாதை மடங்கள், தொழிற்சாலைகள், வைத்திய விடுதிகள், பாலர் விடுதிகள், கல்வி ஸ்தாபனங்கள் முதலிய அநேக பரோபகார ஸ்தாபனங்களைத் திருச்சபை நிரூபிக்கிறது. இவைகளெல்லாம் நல்லவைகளே. இருந்தாலும் இவைகள் இந்திய மக்களை மேலெழுந்தவாரியாக மட்டுந்தான் கவருமே தவிர ஆன்மார்த்தரீதியில்

அவர்களை வசீகரப்படுத்தமாட்டார். பரிசுத்த ஆவியான வர் உலகமக்களைத் தேற்றுகிறவர். அவர்களுக்கு அமைதி யை அளிக்கிறவர். அவர் பரிசுத்த திருச்சபையை உலக கொந்தளிப்புகளின் நடுவிலே அமைதியாய் நிலைநாட்டு கிறார். அவருடைய அமைதிசெய்யும் அலுவல் பகிரங்கமாக உலகில் தோற்றமளிக்கிறது. தியானத்தில் அந்த அமைதி செய்யும் பரிசுத்த ஆவியை கண்டடையலாம். அந்த பரி சுத்த ஆவிதான் இந்திய ஆன்மார்த்த சீவியத்தை அடிப் படையோடு ஆழ்ந்து அசைத்து ஞான அசமந்தத்தி லிருந்து தட்டி எழுப்புவார். அப்போது இந்தியா கிறிஸ்தவ சுபசெய்திக்கு செவி சாய்க்கும்; உயிர்த்தெழுந்த சேசுவோடு புத்துயிர் பெற்று உயிர்க்கும். அப்போது தான் இந்தியா தன் தேவ அழைத்தலைக் கண்டுபிடித்து நடக்கும், இந்தியா கிறிஸ்துவ மயமாகமாறும். ஆகையால் ஆழ்ந்த தியானத்தின் அமைதியிலிருந்து பரிசுத்த ஆவி யைக் கண்டடைந்து அவருடைய ஏவுதலுக்கு இணங்கி இந்தியா கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்.

## நமது அடிகளின் உன்னத கனவு

படிப்படியாக இந்தியா தன் அந்தராத்மாவில் பரமா ரூபியைக் கண்டடைந்து அவருடைய சக்தியால் கிறிஸ்துவ ரூபத்தை உருவாக்கித் தரிக்கிறது. தேவதூதர்கள் போல் விளங்கும் கிறிஸ்துவ குருக்கள் ஏன் இந்த பரமாரூபியின் அலுவலில் ஈடுபடுகிறதில்லை? இந்த திருநாடாகிய இந்தியா வில் அவருடைய ஞான வேலையில் ஏன் பங்கு எடுக்கிற தில்லை? ஆனால் தாயாகிய சத்திய திருச்சபையின் மடியிலே இந்துக்கள் மத்தியிலே அந்தராத்மாவில் வாசம் செய்யும் தம திரித்துவத்தை ஆழ்ந்த தியானத் தில் வழிபட்டு தம திரித்துவத்திற்கு சாட்சியம் சொல் லும் ஒரு சில மௌன மதப்பிரசங்கிகளைப் பற்றிதான் இங்கு குறிப்பாகச் சொல்லப்படுகிறது. கூடுமான

மட்டும் பல இந்திய நிபுணர்களோடு கலந்து ஆராய்ச்சி செய்து இந்திய மயவடிவத்திலே கிறிஸ்துவ தியான சீவியத்தை உருவாக்கவேண்டும். நம்முடைய இருதயங் களில் புதைந்து கிடக்கிற இந்திய மய ஞான உணர்ச்சி யைத் தட்டி எழுப்பவேண்டும். அப்படிச்செய்தால் கிறிஸ்துவமதம் உறுதியாய் இந்தியாவில் வேர் ஊன்று வதற்கு அது ஓர் அஸ்திவாரமாய் இருக்கும். இதுதான் கனம் மோன்ஷுன் சுவாமிகளின் நோக்கம். அவரு டைய கருத்துப்போல அவரே இந்திய மய ரீதியிலே தியானத்தை முயற்சித்து ஆரம்பித்தார். பிறகு பலரை அதில் பழக்கி சேர்க்கலாம் என்றூர். ஆயிரக்கணக்கில் இவ்வித தியானசபை கிறிஸ்துவ மதத்தில் பரவலா மென்ற நம்பிக்கை அவருக்குண்டு. இவ்வித தியான சபை சுதேசத்தில் உருவாகிறது, பரம்பரையில் வேர் ஊன்றுகிறது. இந்து சந்நியாசிகளின் ஞான ஆராய்ச்சி களை மறு உருவாக்கி, கண்ணுடிபோல கிறிஸ்துவ அர்த் தத்தில் பிரகாசிக்கச் செய்கிறது. இந்தியாவின் நாற்றிசை களிலும் இந்த ஞான ஒளி ஊடுருவிப் பரவுகிறது. ஆகையால் இச்சபையில் பலர் இயற்கையாகவே சேர் வார்கள். இதுதான் கனம் மோன்ஷுன் சுவாமிகளின் கனவு.



# III. இந்தியாவுக்கு வருகை

1932 - ஆம் ஆண்டில் நமது சுவாமியார் கடின வியாதியினால் பீடிக்கப்பட்டு சாகுந்தருவாயிலிருந்தார். அவஸ்தை பூசுதலும் பெற்றார். அப்பொழுது கடவுள் தனக்கு ஆயுள்கொடுத்தால் அந்த பாக்கி வாழ்நாளை இந்திய தேசத்தில் ஆண்டவருக்கு ஆழ்ந்த ஞான அலுவலில் அர்ப்பணம் செய்ய வைராக்கிய வாக்குறுதி யெடுத்தார். அந்த நற்காரியத்திற்காக ஒரு கால்நூற்றாண்டு காலம் அவருக்கு ஆண்டவர் அளித்தார். அதற்காக அவர் சமஸ்கிருத பாஷையையும் இந்திய வேத புராணங்களையும் பலவித தத்துவ சாஸ்திரங்களையும் அதிக ஊக்கமாக ஆழ்ந்துபடிக்க ஆரம்பித்தார். தன் அதிமேற்றிராணியார் அங்கீகாரத்தின் மேல் **வின்சென்ட் லெப்** சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் சபையில் சேர்ந்தார். அந்த சபை என்னவென்றால் வேதபோதக நாடுகளில் சுதேச மேற்றிராசனங்களில் உதவிபுரியும் குருமார் சபையாம். Society of Auxiliaries of Missions (S. A. M) அதன் நோக்கமென்னவென்றால் சுதேச மேற்றிராணிமார்கள் அடியிலே சுதேசசுவாமிமார்களுடன் ஒன்றித்து உழைக்க மேல்நாட்டு குருமார்களை தயாரிப்பதுதான். அந்தசபையில் அவர் பிரவேசித்து தான் ஆசித்தபடி தியானத்திற்கும் படிப்பிற்கும் தகுந்த இந்திய மய ஜீவியத்திற்காக தன்னை ஏற்றுக்கொள்ளும் மேற்றிராணி ஆண்டவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். தேவ பராமரிப்பானது அவருடைய கருத்தை நிறைவேற்றினது. மதுரை வேத போதக பகுதியிலிருந்து பிரான்ஸ் தேசத்துக்கு ஓர் திராவிட வகுப்பைச் சேர்ந்த சேசுசபை குரு சென்றிருந்தார். அவரோ சமஸ்கிருத பாஷையிலும் இந்திய தத்துவங்களிலும் மூழ்கி படித்து பாண்டித்தியம் பெற்றவர். அவர் பகவத்

கீதையில் கடவுளைக்குறித்து எழுதப்பட்டவைகளைப் பற்றி ஓர் வியாசம் அப்பொழுதுதான் எழுதியிருந்தார். அவர் தான் பின் திருச்சியில் நிறுவப்பட்டிருக்கும் குரு மடத்திற்கு பரிசாரகராக நியமிக்கப்பட்டவர். அவரைத் தான் நமது சுவாமிகள் தன் வழிகாட்டியாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அவர் அவரை திருச்சி மேற்றிராசனத்திற்கு வரவழைக்கக் காரணமாயிருந்தார். திருச்சி மேற்றிராசனம் அப்பொழுது தான் சுதேச குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது முதல் மேற்றிராணியாராக நியமனம் செய்யப்பட்டவர் மிகவும் வந்திக்கத்தக்க **ஜேம்ஸ் மென்டோன்ஸா** ஆண்டவர். அவர் நம் சுவாமிகளை மிக அன்போடு ஏற்றுக்கொண்டார். இவ்விதமாக 1939-ம் ஆடு கோடைகாலத்தில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டைப் போலிருந்த இந்தியாவில் நமது சுவாமிகள் காலடிவைத்தார்கள்.

## முதல் அநுபவம்.

சந்தேகமில்லாமல் அவர் கனவில் நினைத்தபடி இந்தியா அவருக்கு தன் நோக்கத்திற்கு இணங்கி நினைத்தபடி தோற்றமளிக்கவில்லை. இருந்தாலும் அவர் ஓர் மாறுத மனோவாதியாய் இருந்தார். ஒவ்வொரு கிறிஸ்துவ குருவும் முக்கியமாக இந்திய உபநிஷடம், தேவாரம், பிரபந்தம் மற்றும் சங்கராச்சாரியார் முதலானவர்களுடைய நூல்களை வாசித்து இரசித்து இருக்கிறார் என்று எதிர்பார்த்திருந்தார். அவர்கள் ஒவ்வொருவரும் பழங்கால கட்டிடங்கள், சிற்பங்கள், முதலியவைகளை அவர்கள் பார்த்து மகிழ்ந்து மெச்சுகிறார்களென்று எதிர்பார்த்தார். தஞ்சாவூர், மஹாபலிபுரம், முதலிய க்ஷேத்திரங்களிலுள்ள அபூர்வமான கலைகளை கிறிஸ்துவக் கலைகளில் புகுத்த எல்லோரும் கவலையாக இருந்தார்களென்று நமது சுவாமியார் நினைத்துக்

கொண்டிருந்தார். அவர் இந்தியாவுக்கு வருமுன் ஒரு நாள் லயன்ஸ் பட்டணத்தில் கும்பகோண மேற்றிராணியாரை தன் இல்லத்தில் ஏற்றுக்கொண்டார். தமிழ் நாட்டின் சங்கதிகளை பிரியமாக கேட்டார். தன் பீடத்தில் ஓர் புது மேற்றிராசன ஆலயம் கட்டப்போவதாக ஆண்டவர் சொன்னபோது நமது சுவாமியார் சொன்னதாவது "அந்த ஆலயம் பல்லவ கலைமாதிரியோ அல்லது விஜயநகர் ஆல்யக் கலைமாதிரியோ, கட்டப்போகிறீர் என்று கேட்டார்."

## மேற்கொண்டு உட்புகுதல்

இந்தியாவில் தான் அனுபவித்தவைகளை ஞாபக மூட்டிக்கொண்டு இந்தியாவுக்கு புதிதாக வருபவர்களின் அனுபவம் மூன்றுவிதமாக ஒன்றன் பின் ஒன்ருக மாறுகிறது என்று அவர் சொல்லுவது வழக்கம். ஆரம்பத்தில் உற்சாகம் நிறைந்தகாலம். இதில் பிரதி அபிஞ்ஞாவென்ற சகலத்தையும் அங்கீகரிக்கும் ஞானம் உதிக்கும். உண்மையில் ஏற்கனவே மனதில் உருவான ஆச்சரிய ரூபக நிலைதான் இது. அதன்பின் ஏமாற்றங்களையும் மாயைகளையும் கொண்ட ஆபத்துக்குரியதும் மன அங்கலாய்ப்புக்குரியதுமானபடி தோன்றும். அதாவது இந்து பாரம்பரியத்தின் செல்வாக்குகளுக்கு முன்னும் பெருமைகளுக்கு முன்னும் திருச்சபை பரிதாபகரமாயும் ஒளியற்றதாயும் இருப்பதாக தோற்றமளிக்கும். இந்தியாவின் திருச்சபைக்குள் இறுதியான தேவ அழைத்தல், எவராலும் கண்டுபிடிக்கப்படாத ஓர் முத்திரை போல மொத்தத்தில் போட்டு எவராலும் திறவாமல் பூட்டுகிறது என்று தோன்றும். இந்து சமயங்களின் புறத்தோற்றங்களைக்கடந்து அவைகளின் அகத்தில் புதைந்து கிடக்கும் இரகசியங்களை எவ்வளவு சொற்பப்பேர் பரிசீலனை செய்கிருர்கள்! திருச்சபையின் மேல்நாட்டுப்

புறத்தோற்றத்தை உரித்துவிட்டு விடவும் அந்நிய ஆட்சிகளின் சமரசங்களை உதறித்தள்ளிவிட்டு விடவும் எவ்வளவு அதிகம் பேர் அரோசிகப்படுகிறார்கள்? இந்து உலகத்திலும் குறைகள் இருப்பதாக ஒருநாள் தோன்றும். அதன் ஜாதிபேதம், அதன் மட்டுக்கு மிஞ்சின பெருமை இணக்கமில்லாத வெளிச்சடங்காசாரங்கள், கிராமங்களில் ஆராதனை முறையில் சில சமயங்களில் காட்டுமிராண்டித்தனம், மதப்பெயரால் பசப்பாளர்களின் மதமுகமூடிகள் காணக்கிடக்கின்றன. ஆனால் இந்த மதமயக்கம் கொஞ்சகால மட்டும்தான் முற்றி பிறகு தெளியும். நல்ல பயன்தரக்கூடிய அனுபவமும் ஜெபத்தின் வல்லமையும் அவ்வித மயக்க நிலையைக் கலைக்கலாம். உலகத்திலோ தோற்றங்களும் வெறும் மாயைகளும் மலிந்து கிடக்கின்றன. இவைகளுக்கப்பால் பரிசுத்த ஆவிநிலைத்திருக்கிறார். அவர்தான் சகலத்தையும் பிரிக்காமல்-ஒன்று சேர்க்கிற அகண்டர். அவர்தான் இந்த உலகலீலையை நடத்துகிறவர். எனவே இந்த உலகலீலைக்கப்பால் பரிசுத்த ஆவி உலக ஒருமையையும் மானிட ஆத்ம நிலைமையையும் ஏற்படுத்துகிறார். உலகம் ஒருநாள் முதிர்ந்து சம்பூர்ணத்தை அடையவேண்டுமல்லவா? ஆகையால் பரிசுத்த ஆவி திருச்சபையிலும் இந்தியாவிலும் மானிடர்களின் மூலமாகவும் அவர்களுடைய தற்சமய சாத்தியங்கள் மூலமாகவும் உலக சம்பூரணநிலைக்கு உலகத்தை தயார் செய்கிறார் என்பதற்கு சந்தேகமில்லை. இதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுவது அநேகருக்குக் கடினமாக இருக்கும். ஆனால் ஏற்றுக்கொள்ள கடினமாயிருந்தாலும் அந்த உண்மையை நிராகரித்துத் தள்ளிவிடமுடியாது. உலகத்தின் சர்வதேச நாடுகளோடு இந்தியாவும் உலகத்தின் பரமகதியாகிய சேசுநாதர் யுகங்களின் முடிவில் தன்னுடைய சம்பூரணத்தில் மகிமையாக எழுந்தருளிவருவதை நோக்கி இந்தியா

நடந்து போகிறது. அந்நாளில் பூர்த்தியான திருச்சபையில் இந்தியா கிறிஸ்து அரசரின் மணவாளியாக ஒளிரும். நெடுங்காலமாக இந்தியாவுக்குள்ளே புதைந்துகிடந்த விலைமதிக்கப்படாத முத்துக்கள் அப்பொழுது மணவாளியாகிய கிறிஸ்து இராசாவின் கிரீடத்தில் நித்தியத்திற்கும் பிரகாசிக்கும். சூழ்நிலைகளோ மாறிவிட்டன. குறைவான படிப்பு பூர்த்தியாகி வருகின்றது. மானிட பரிணாம அளவு கட்டுக்கு மீறிவிட்டது. மேல்நாட்டு அதிகார நுகத்தடியின் பாரத்தை இனி தாங்கமுடியாது. அதனால் பல மோதல்கள் ஏற்படுகின்றன. ஆனால் அவைகளை சமாளிக்க இப்போது திறன் உண்டாகிவிட்டது. ஆகையால் இந்தியா தைரியமாக சேவை செய்யும். பொறுமையாய் பொதுநல அலுவலில் ஈடுபடும். இந்தியாவின் முன்னேற்ற கட்டிடங்களுக்கும் திட்டங்களுக்கும் மெதுவாக கற்களை சேகரிக்கும். இந்த தெரிந்தெடுக்கப்பட்ட கற்கள் எப்போதைக்கும் பண்பற்ற விதமாய் அஸ்திவாரத்தில் அமிழ்ந்தி அசட்டை செய்யப்பட்டு கிடந்தன. இப்போது தன் மத பொருளாதார சமுதாய கட்டிடங்களை கட்ட ஆரம்பித்துவிட்டது. இது நல்ல சந்தர்ப்பம். இந்தியாவில் திருச்சபையை இந்தியாவோடு சரிக்கட்டுதலுக்கு உடனடியாகத் தயார் செய்யலாம். இந்தியா மறுமலர்ச்சி அடையவும் திருச்சபை திட்டமான வளம் அடையவும் உடனடியாக வேலை செய்ய இப்போது அரியதோர் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.



# IV. திருச்சி மேற்றிராசனத்தில் ஊழியம்

பின் வருமாறு பிரான்ஸ் தேசத்திலிருந்து கனம் மோன்ஷுன் சுவாமிகள் திருச்சி மேற்றிராணியாருக்கு எழுதினார்கள். "கீழ்த்தரமான சாதாரணவேலை எனக்கு மிகவும் பிரியம்" அவர் ஆசித்ததுபோல் அவருக்கு சாதாரண வேலைதான் கொடுக்கப்பட்டது. திருச்சி மேற்றிராசனத்தில் அவர் 10 வருஷம் ஊழியம் செய்தார். பண்ணைப்பட்டி பேரூர் உடையார்கள், பஞ்சம்பட்டி வன்னியர்கள், லாலாப்பேட்டை ஆசாரியார்கள், குளித்தலை மேலக்கட்டளை ஹரிஜனங்கள் முதலியவர்கள் அவருடைய ஞான உதவியை அடைந்தார்கள். பாரீஸ் பட்டணத்திலும் லயன்ஸ் பட்டணத்திலும் உள்ள கலைஞர்களுடன் எப்படி அவர் புழங்கினாரோ அப்படியே அவர் இந்த ஏழை மக்களோடு வெகு நெருங்கி அன்னியோன்னியமாய் புழங்கினார். பொது மக்களை வசீகரிக்க ஓர் சுருக்கமான சூட்சமம் அவருக்கு உண்டு. அதுதான் அன்பு என்று ஒரு சினேகிதருக்கு எழுதினார். பிறரை அன்போடு எப்பொழுதும் வரவேற்பார். குழந்தைகளுக்கு ஞான உபதேசம் கற்றுக்கொடுத்தார். ஞாயிற்றுக்கிழமைகளிலே பூசையில் பிரசங்கம் செய்தார். மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து கிராமங்களிலுள்ள வியாதிக்காரர்களுக்கு அவஸ்தை பூசுதல் முதலிய தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றுவார். அவர்களுக்கு வேண்டிய இதர சேவையையும் செய்வார். ஜனங்கள் அவரைப் பார்க்க வரும்போது மற்ற வேலைகளை அவர் நிறுத்திவிட்டு அவர்களோடு புன்சிரிப்புக் கொண்டு சல்லாபிப்பார். அவர்களுக்கு ஞானவிதத்திலும் இலௌகிக காரியங்களிலும் உதவிசெய்ய தயாராக இருந்தார். மக்களுக்கு அளவுக்கு மிஞ்சி அவர் உதவிசெய்கிறார். ஒவ்வொருவருடைய தேவைகளை சரியாக கண்டுபிடிக்காமல்

அதிக உதவிசெய்கிறார். ஆகையால் அவர் ஏமாற்றப்படு கிறார் என்று அவரைப்பற்றி பிறர் குறை கூறினார்கள். அப்போது அவர் புன்சிரிப்போடுதான் இருக்க திருப்தி கொள்வார். மக்களை எப்பொழுதும் சந்தோசப்படுத்து வார். அவர்களுடைய ஏழ்மை நிலையைப் போக்க விரும்புவார். தனக்கு மிகவும் பிரியமான புத்தகங்களை வாசிப்பதைக்கூட விட்டுவிட்டு அவர்களுக்கு உதவிசெய்ய தீவரித்து ஓடுவார். தன் சொந்த சௌகரியங்களைப் பற்றிக் கொஞ்சங்கூட அவர் கவலைப் பட்டவரல்ல. தன் வேலைக்காரர்கள் அரைகுறையாய்ச் செய்தாலோ அல்லது பேசினாலோ அவர் அதைப்பற்றி பொருட்படுத்த மாட்டார். அதுவெல்லாம் மாயாவின் வெறும் தோற்றம் என்று சொல்லுவார். ஒரே காரியந்தான் அவசியம்; அந்தக் காரியம் கடவுளோடு மனித ஆத்மா ஐக்கியமடைவது. அதுதான் மனிதனுடைய ஏக காரியம். அன்றியும், நாமும் உலக பிரபஞ்சமும் கடவுளுக்கு முன் என்ன மதிப்பைக் கொண்டுள்ளோம்? சகலமும் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கப்பட்டன. ஆகையால் கடவுளைத் தவிர சகலமும் வெறுமைக் குணத்தைக்



பண்ணைப்பட்டி உதவி சாமியார்
1940

கொண்டிருக்கின்றன. கடவுள் சகலத்துக்கும் இருக்கையைத் தருகிறார். கடவுளோ ஏகம். கடவுளோ கேவலம். இந்த தேவ ஏகத்துக்குமுன், இந்த தேவசுயம்புக்குமுன் உலகத்திலுள்ள நன்மை, தின்மை, குற்றங்குறை என்ன? நாம் அவைகளைப் பொருட்படுத்த நமக்கு உரிமையில்லை. தேவன்தான் அவைகளை சீர்தூக்கிப் பார்ப்பவர். நாம் வெறுமைதான் என்று அவர் பேசுவார்.

## மறை வாதம்

உண்மையில் அவருடைய அழைத்தலோ அலாதி. அவருடைய அழைத்தல் அருள் அழைத்தல், லௌகீக காரியங்களைக் கவனிக்கவோ நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவோ அவர் அழைக்கப்படவில்லை. தான் வைத்திருந்ததெல்லாம் ஒன்றும் விடாமல் பிறருக்குக் கொடுத்துவிட்டார். அது மட்டுமா? ஆச்சரியகரமான ஞானத்தையும் ஆழ்ந்தசிந்தனைகளின் மலர்ச்சிகளையும் வஸ்துக்களின் நவீன மூல வடிவார்த்தங்களையும் பிறருக்கு பரிமாறினார். ஆனால் ஐயோ! அவருடைய ஆழ்ந்த ஞானத்தை பயன்படுத்தி விருத்திசெய்து மேன்மையாக்க ஒருவரும் பிரயாசைப் படவில்லை. தன் நோக்கத்திலோ ஜீவியத்திலோ அதைரியங்கள் கஷ்டங்கள் நெருக்கடிகள் ஏற்பட்டால் அவர் அவைகளை நிவர்த்திக்க அவருக்கு இலேசாக இருந்தது. இருந்தாலும் மனக்கஸ்திகளை அவருக்கு அனுப்ப ஆண்டவர் குறைக்கவில்லை. ஏற்கனவே அவர் இந்தியாவுக்கு வந்த ஏறக்குறைய மூன்று மாதத்திற்குள் இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பித்தது. தன் குடும்பத்தோடும் உலக நாற்றிசையில் பிரிக்கப்பட்ட நண்பர்களோடும் யாதொருவிதமான தொடர்பும் வைக்க முடியவில்லை. மற்ற எவரானாலும் அதைரியப்பட்டு இருப்பார். அவர் உலகத்தில் வாழ்ந்தாலும் வேறே ஓர் தனி உலகத்தில் வாழ்வதுபோல் காணப்பட்டார். அவர்

ஓர் சிந்தனை உலகத்தில் ஜீவித்தார் என்போமோ? பகலில் ஆழ்ந்து புஸ்தகங்களை வாசித்தார். வாசித்தவைகளை நெடுநேரம் சிந்தித்தார். இரவில் நிறந்தீட்டிய உன்னத கனவு கண்டார். இந்த ஆச்சரியமான தரிசனங்கள் நிறைந்த நிறந்தீட்டிய உற்சாகமான உன்னத கனவில் அவர் உலாவினர். இனிமையான கீதங்களை ரசித்தார். இவ்விதமாக ஒரு லோகத்திலிருந்து மற்றோரு லோகத்திற்குத் தாண்டித் தாண்டிச் சென்றார். தரையையும் நிலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் கவனிக்காதவர்போல தன் சுயலோகத்தில் அமைதியாக எப்பொழுதும் நடந்து கொண்டிருந்தார். அவருக்கு மிகவும் பிரியமான ஓர் கிரேக்க வார்த்தை ஒன்று உண்டு. அந்த வார்த்தை "எஸ்க் காத்தோன்" எஸ்காத்தோன் என்ற வார்த்தைக்கு கடைசி, முடிவு, கதி என்று அர்த்தம் கூறலாம். அந்த கடைசி கதி தேவ பிரசன்னமேதான். தேவ பிரசன்னம் என்பது கிறிஸ்து நாதரின் இறுதி எழுந்தருளி வருதல், அவரின் இரண்டாவது ஆகமனம் இஸ்பிரீத்து சாந்து அப்போஸ்தலர்கள்மேல் இறங்கிவந்த அந்த பெந்தகோஸ் திருநாளிலிருந்தே அந்த தேவ பிரசன்னம். அர்ச். அருளப்பர் சொல்லுவதுபோல கிறிஸ்தவர்கள் ஏற்கனவே கடைசிகாலமாகிய தேவ பிரசன்னத்தை அடைந்து விட்டார்கள். ஏனென்றால் கடைசி என்றும் அந்தமானது ஆரம்பம் என்ற ஆதியில் அடங்கி இருக்கிறது. ஞானமுள்ளவர்கள் ஆதியையும் அந்தத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து தரிசிப்பார்கள். இந்த உண்மையில் நமது சுவாமிகள் கடைசிலோகத்தில் இப்போதே ஈடுபட்டிருந்தார் என்று சொல்லலாம். அந்த தேவ பிரசன்னத்தை அவர் உண்மையாகவே அநுபவித்தார். பரலோகமும் பூலோகமும் கடவுளால் ஒன்று மில்லாமையிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டவை. இந்த தேவ சிருஷ்டிப்பின் அலுவல் கடவுளின் அன்பைக் காட்டுகிறது. அவருடைய

அன்பு சிருஷ்டிப்பின்மேல் பாய்ந்தோடுகிறது. கடவுள் சகல நன்மைகளும் பொருந்திய **கேவலம்***. அவருக்கு யாதொரு குறையுமில்லை. அப்படி இருந்தாலும் அவர் உலகத்தை சிருஷ்டித்தார். கடவுள் சிருஷ்டிப்பில் காண்பித்த அன்பை விட தமதிருத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனுடைய மனுஷ அவதாரத்திலேயே அதிக அன்பு வெளிப்படுத்தப்பட்டது. ஏனென்றால் இந்த அவதார அலுவல் தேவனின் சுய வெறுமையாக்குதலைக் குறிக்கிறது. எதற்காக? தேவகுமாரன் உலகத்தில் வைத்த அன்புக்காக தன்னை வெறுமையாக்குகிறார். இந்த வெறுமை என்ற பதத்தை கிரேக்க பாஷையில் "கேனோஸிஸ்" † என்று சொல்லுகிறார்கள். எந்த சிநேகமும் பரித்தியாகத்தில் உற்பத்தியாகி வளர்கிறது. தேவன் உலகத்தை அன்பினால் இரட்சித்தார். ஆகையால் இந்த தேவ அன்பில் பரித்தியாகம் அடங்கி இருக்கிறது. அந்த பரித்தியாகம் தேவ வெறுமையாக்கும் பரியந்தம் வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுக்கு சிருஷ்டிப்போடு வெளி உறவு இல்லை. இருந்தாலும் தேவன் உலகத்தை சிருஷ்டித்து (ஆதியாகமம் I, 1) இரக்ஷித்து அத்தோடு ஒருவித உறவை ஏற்படுத்தினார். ஆகையால் அவர் அன்பினால் தன்னை தாழ்த்தினார். இதுவும் தேவ வெறுமையாக்குதலைக் குறிக்கிறது. ஆனால் தேவ வெறுமையாக்குதல் தெய்வீகத்தைப் பங்கப்படுத்துவதில்லை. தேவன் எப்பொழுதும் நித்தியத்தில் தான் தன் அலுவலைச் செய்கிறார். அவருக்கு காலமென்பதே இல்லை. ஆகையால் உலக சிருஷ்டிப்பானது நித்திய தேவ வேலையாயிருந்தது. உலகமே தேவ நித்தியத்தில் தனக்குக் குறிக்கப்

---

* **கேவலம்**, Absolute : சம்பூர்ணமான வரம் பெற்ற பரமன்.

† *பிலிப்பியர்* **II** *6–8*.

பட்ட நேரம் வரவும் ஏற்பட்டது. ஆகையால் சிருஷ்டிப் பானது இருமுக முள்ளது. அதாவது அது நித்தியத்தில் விந்தாரங் கொண்டது. அநித்தியத்தில் இருக்கை ஆதாரங் கொண்டது. இந்த நித்திய தேவ சிருஷ்டிப்பின் வேலை நித்திய அன்பைக் கொண்டதல்லவா? இந்த நித்திய அன்பு நித்திய தேவ ஏவுதலால் ஏற்படுகிறது. இந்த நித்திய தேவ ஏவுதல்தான் திவ்விய இஸ்பிரீத்து சாந்து. அவரே தேவ அன்பு. உலக ஆரம்பத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் உலகத்தில் அலுவல் செய்து கொண்டிருக்கிறார். "தேவ ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார்" (ஆதியாகமம் I, 2) அவருடைய அலுவல் என்னவென்றால் பரம பிதாவிடம் தேவ குமாரன் மூலமாய் சர்வத்தையும் நடப்பித்துக் கொண்டு போவது. பரிசுத்த ஆவியானவர் முக்கியமாக திருச்சபையில் அலுவல் நடத்துகிறார். அதற்காகவே மோட்சத்தில் வீற்றிருந்த சேசுநாதரால் அவர் உலகத்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால் பரிசுத்த ஆவியின் சக்தி உலகத்திலும் திருச்சபையிலும் வெளித் தோற்றங்களிலேயே மறைந்திருக்கிறது. இந்த வெளித்தோற்றங்கள் தான் பற்பல மானிடரின் குறைகள்; அதாவது அறியாமை, அன்பின்மை, அமைதியின்மை முதலியவை. இந்த குறைகள் தான் பரிசுத்த ஆவியின் "கேனோசிஸ்"; அதாவது சூனியமாகுதல் என்று நமது சுவாமியார் சொல்லுவது பழக்கம். பரிசுத்த ஆவி அந்தக் குறைகளில் வெறுமையாய் இருப்பது போல காணப்படுகிறார். தோற்றங்களைத் தாண்டி உள்ளத்தில் தியானிக்க வல்லமையுள்ள ஞானிகளுக்கு பரிசுத்த ஆவியின் பிரசன்னமும் சக்தியும் புலப்பட தப்ப முடியாது. உலகத்தில் என்ன உண்டானாலும் என்ன நடந்தாலும் பிதாவிலிருந்து வந்து சேசுநாதர் வழியாக பரிசுத்த ஆவியின் அன்பினாலே திரும்ப பிதாவிடம் செல்லுகிறதென்று அவர்களுக்குத் தெரியும். அதுதான்

சம்பூரணத்துவம். அதுதான் தேவ பிரசன்னம். அது தான் "எஸ்காத்தோன்". அதுதான் "பாரூஸியா" இந்த சத்தியத்தை அறிந்த நமது சுவாமியார் சுகித்து மகிழ்ந்து அமர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தார்.

## நோன்பு கொள்ளுதல்

வீண் ஆசை என்பதே அவருக்குக் கிடையாது. இலௌகிக தேவைகளைப் பற்றி அவர் கவலைப்பட்டதே இல்லை. அவருடைய தரித்திரம் பரித்தியாக முயற்சி யாகக்கூட இல்லை. கடவுளுக்கு முன்னும் மனிதர்கள் நடுவில் புண்ணியவான்கள் என்று சொல்லிக்கொள்பவர் களை அவர் விரும்புகிறவரல்ல. அவருக்கு எதுவும் தேவை இல்லை. அவர் பற்றற்று இருந்தார். தத்துவசாஸ்திரத்திற் கடுத்த பற்றின்மையும் ஆன்மார்த்த அகக்காட்சியை தரிசிப்பவரின் பற்றின்மையும் அவரிடம் விளங்கின. அவருக்கு செல்லவேண்டியது ஒன்றுமே இல்லை. சீவியத் திற்கடுத்த சுகங்களோ மகிமை பெருமையோ அல்லது நிலைமையோ அவருக்கு அனுவசியம். அவர் எப்பொழுதும் திருப்தியாகவே இருந்தார். அவர் எப்பொழுதும் சந்தோச மாகவே இருந்தார். அவருக்கு எவரும் எதைக் கொடுத் தாலும் உண்மையான நன்றியறிதலோடும் சாதாரண எளிமை நிலையிலும் அதைப் பெற்றுக்கொண்டார். அவ ரிடம் தாழ்ச்சி இருந்தது. ஆனால் அவருடைய தாழ்ச்சி சாதாரண அர்த்தங்கொண்டதல்ல. மனிதனே சாதாரண மாக தன்னை மதிக்கிறான். இப்பிரபஞ்ச கேந்திரமென்று தன்னைக் கருதுகிறான். உலகமோ அவனை மதித்து சுற்றிச் சுழல்கிறது என்று எண்ணுகிறான். இப்படி கருதுகிற வன் மட்டரகமான மனிதன்; தன் அகத்திற்கு கவனம் செலுத்துகிறவன். நமது சுவாமிகள் தன்னைப்பற்றியே நினைத்தவரல்ல; தன்னை முழுதும் மறந்தவர்; தன்னை வெறுமை யாக்கினவர். இந்த அர்த்தத்தில் தாழ்ச்சி யென்னும் புண்ணியம் மிளிர்ந்தது.

## பாலைவனச் சோலைகள்

அவருக்கு அவருடைய சிந்தனை லோகத்தில் பாலை வனச் சோலைகள் சில உள. அவர் சில சமயங்களில் திருச்சிக்குச் செல்வார். அப்பட்டணத்திலுள்ள குரு மடத்துக்கோ அல்லது சேசுசபை கலாசாலைக்கோ போவார். அங்கேயுள்ள நூல் நிலையங்களில் தங்குவார். புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அப்படியே கிரகித்து வாசிப்பார். சில புத்தகங்களை தன்னோடு எடுத்துவருவார். ஒவ்வொரு வருஷமும் கொடைக்கானல் மலையிலிருக்கும் சேசுசபை தத்துவ சாஸ்திரக் கல்லூரிக்கு அவரை சிரேஷ்டர்கள் அழைப்பார்கள். அங்கே சிறந்த அறிவாளிகளுடன் சமரசத்துடன் சிந்திக்கும் சம்பூரணத்தில் ஆழ்ந்து சல்லாபிப்பார். அப்பேர்ப்பட்ட அறிவாளிகளில் ஒருவர் **கனம் காத்தியே சுவாமிகள்.** அன்றியும் அவர் சமய ஆராய்ச்சிகளைச் செய்தார். அவ்வித ஆராய்ச்சிகளைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படி தம் நண்பரான **கனம் தேலுபாக்** சுவாமிகளுக்கு அனுப்பிவைத்தார். அவர் செய்த ஆராய்ச்சிகளைப் பற்றியும் எழுதின சில அருமையான குறிப்புகளைப் பற்றியும் சிந்தித்து சிந்தித்து சித்தப் பிரமை யடைவார்.

## குளித்தலைப் பங்கு ஆரம்பம்

1940-ம் ஆ௵ நமது சுவாமிகள் **பண்ணைப்பட்டிப்** பங்கில் உதவி சுவாமியாராக இருந்தார். அவர் ஒரு நாள் குளித்தலைக்கு பங்கு விசாரணைக்காக சென்றிருந்தார். அப்போது குளித்தலையில் திருவாளர் P. A. அந்தோணி என்பவர் தாசில்தாராக இருந்தார். அவர் சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகள் குளித்தலையிலேயே பங்கு சுவாமியாராக இருக்க அந்த தாசில்தார் ஆசித்தார். குளித்தலை தக்ஷிண இந்திய கங்கையாகிய காவேரி நதியின்

தென் கரையில் இருக்கிறது. குளித்தலை ஓர் செழிப்பான பூமி. அது நெல், கரும்பு, வாழை, தென்னை முதலியவை வளரும் பிரதேசம். பிராமணர்கள், வெள்ளாளர்கள், நாயுடுகள், செட்டியார்கள் முதலிய சகல சாதியினரும் பெரும்பாலான இந்துமக்களும் வாசம்செய்யும் ஓர் பெரும் பகுதி. இது நமது சுவாமிகளுக்கு மிகவும் தகுந்த இடமாய் இருக்கலாம். தமிழ், சமஸ்கிருத பாஷைகளிலும், இந்து சாஸ்திரங்களிலும், தமிழ்கவிகளிலும் உள்ள அவருடைய அறிவானது ஜனங்களுடன் நெருங்கிப் பழகுவதற்கு ஏற்ற சாதனங்களுமாம். இங்கு சிந்தனை ஒளிப் பிரகாசத்தைப் பரப்ப வசதி ஏதுகரமாயிருக்கலாம். இவைகளைப்பற்றி கனம் தாசில்தார் கனம் சுவாமிகளிடம் உரைத்தார். பிறகு இந்த இடத்தை மிகவும் வந்திக்கத் தக்க திருச்சி மேற்றிராணியாரிடம் தெரிவித்தார். காவேரி நதியோரமாய் வடக்கே இருக்கும் பாகத்தை பண்ணைப் பட்டி பங்கிலிருந்து பிரித்து நமது சுவாமிகளிடமாய் ஒப்படைக்கப்பட்டது. குளித்தலை அவருடைய தலைமை இடமாயிற்று.

நமது புதுப்பங்கு சுவாமியார் தனக்கு ஓர் சாதாரண புல் வேய்ந்த குடிசை போதுமென்றார். ஆனால் அவருக்கு ஓர் சுமாரான விடுதி கட்டப்பட்டது. அவர் பக்தி ஆசிரமம் என்ற அந்த விடுதிக்குள் சந்தோஷத்தோடு பிரவேசித்தார். இருந்தாலும் அவருடைய ஆசை பெருமிதமாக இருந்தது. அவர் கனவு கண்டதுபோல காவி உடை அணிந்து இந்து சந்நியாசி வழியைப் பின்பற்றி ஓர் உண்மையான ஆசிரமத்திலிருக்கப் பெரிதும் விரும்பினார். 50 வருஷத்திற்கு முன் வங்காள நாட்டு சுவாமி பிரமபந்தாப் உபாத்தியாயர் அப்பேர்ப்பட்ட கிறிஸ்துவ சந்நியாச சீவியத்தின் வழிகாட்டியாக இருந்தார். அவருடைய மாதிரிகையை பின்பற்ற நமது சுவாமியார் ஆவலாக நினைத்துக் கொண்டிருந்தார். அட்டத் தரித்

திரத்திலும் மோனத்திலும் ஆழ்ந்த படிப்பிலும் ஜெபத் தியானத்திலும் தன்னை செலவழிக்க அவர் அவாக்கொண் டார். சில மாதங்கள் கடந்து பஞ்சம்பட்டிக்கு உதவி பங்கு சுவாமியாராக அனுப்பப்பட்டார். அவர் தனியே இருந்தால் தான் தவ முயற்சியால் தன் தேக நிலையை அதிக மோச நிலைக்குக் கொண்டுவந்து விடுவார் என்று சொல்லப்பட்டது. அவர் கீழ்ப்படிதலோடு புதிய இடத் திற்குச் சென்றார். மனசிலோ இருந்த மனோவேதனையை ஒருவருக்கும் வெளிப்படுத்தவில்லை. சுமாராக இரண்டு வருஷம் கழித்து நமது சுவாமிகள் திரும்பவும் குளித்தலை யில் நியமிக்கப்பட்டார். அதன் பின் மிகவும் வந்திக்கத் தக்க திருச்சி மேற்றிராணியாரோடு மேல் நாட்டுக்குப் போனார். மேல் நாட்டிலிருந்து வந்த பின் பங்கு பங்காக அலைந்து திரிவது அவருடைய கதியாயிருந்தது. கடைசி யாய் கடவுள் இரக்கங்கொண்டார். அவர் திரும்பவும் தனக்கு மிகவும் பிரியமான குளித்தலைக்கு வந்தார்.

## சீர்பெருகுதல்.

அப்போது புதுச்சேரியில் குடியேறின அவருடைய சிநேகிதர்கள் சிலபேர் இருந்தார்கள். அவர்களால் அவருடைய செல்வாக்கு அதிகம் பரவத்துவங்கியது. ஏனென்றால் அவர்கள் அவரை தத்துவ சாஸ்திரத்தைப் பற்றியும் ஞான காரியங்களைப்பற்றியும் அவர்களுக்கு சொற்பொழிவாற்ற அவரை புதுச்சேரிக்கு அழைத்தார் கள். அன்றியும் இந்து வேதத்தைப்பற்றி சில விஷயங் களை விவரித்து அர்த்தங் கூற புதுவை அதிமேற்றிராணி யார் அவரை வரவழைத்தார். மேலும் சாஸ்திர சம்பந்த மாயும் இலக்கிய சம்பந்தமாயும் அவரோடுபேச புதுச்சேரி பெங்களூர் மேனாட்டுக்காரர்கள் பெரிதும் விரும்பினார்கள். அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யத் தகுதியான மேதாவி நமது சுவாமிகளே என்று நன்றாய்க் கண்டுபிடித்

தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தங்கள் சொந்தப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசி மனச்சாந்தி யடைய ஓர் உத்தம குருவை நமது சுவாமிகளிடமே அவர்கள் தெரிந்து கொண்டார்கள். மகாத்மா காந்திஜி மறைந்தார். அவரைப்பற்றி புதுச்சேரியில் ஓர் உபந்நியாசம் நமது சுவாமிகள் நிகழ்த்தினுர்கள். அப்போது அவர் இந்தியாவுக்கு சார்பாக வெகு அனுதாபத்தோடு பேசினுர்; அவருக்கு இந்தியாவிலுள்ள அன்பை அள்ளிவீசினுர். இந்தியாவின் பகுதிகள் எல்லாம் அந்நிய ஆட்சி ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலை அடைய வேண்டுமென்ருர். அது முழு சுதந்திரம் அடைய வேண்டுமென்று அழுத்தமாக விளம்பரம் செய்தார். அச்சமயம் அவருடைய உபந்நியாசத்திற்கு எதிர்ப்பாக ஓர் பிரஞ்சு சர்வகலாசாலை ஆசிரியர் ஆரவார முறையோடு எழுந்து வெளியே கிளம்பினுர். ஆனுல் கொஞ்சகாலங் கடந்து அந்த ஆசிரியர்கூட நமது சுவாமியாரிடம் குளித்தலையிலிருக்கும் பக்தி ஆசிரமத்திற்கும் பிறகு சாந்தி வனத்திற்கும் திருயாத்திரையாக வந்து போனுர்.

## கனவு உருவாகுதல்

இந்தியா சுதந்தரம் அடையும் காலத்தில் ஒரு சில வாரங்கள் வரையில் **கொசவபட்டியில்** ஞான அலுவல் ஆற்ற நியமிக்கப்பட்டார். அப்போது அவர் ஒரு நாள் திருச்சி மேற்றிராணியாரிடம் போகும்போது ஆண்டவர் பிரான்ஸ் தேசத்திலிருந்து வந்த ஓர் கடிதத்தை நமது சுவாமிகளிடத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படி கொடுத்தார். நமது சுவாமிகள் அக்கடிதத்தை வாசித்தார். மேற்றிராணியாருக்கு கடிதத்தின் சாரத்தை அறிவித்தார். பிறகு மேற்றிராணியார் பெயரால் பிரான்ஸ் தேசத்திலுள்ள கடிதம் எழுதினவருக்கு பதில் எழுதினுர். அக்கடிதத்தில் பரிசுத்த ஆவியின் எக்களிப்

பில் பதில் எழுதுவதாகக் கூறி எழுதினுர். அக்கடிதம் எழுதினவர் ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த ஓர் துறவி. அவர் திருச்சி மேற்றிராசனத்தில் தங்கி இருக்க உத்திரவு கேட்டிருந்தார். அங்கே ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்த ஆசைகொண்டார். அந்த ஆசிரமத்தில் அவர் கிறிஸ்துவ துறவறத்தையும் இந்திய சந்நியாசத்தையும் இணைத்து தபசிலும் ஜெபத்திலும் தியானத்திலும் வாழ விரும்பினுர். தெய்வீக கிருபையால் நமது சுவாமிகள் ஆசித்து எதிர் பார்த்த பிரகாரம் ஆண்டவர் ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த ஒருவரில் அரிய அடையாளத்தைக் காட்ட சித்த மானுர் போலும். ஆகையால் நமது சுவாமிகள் அவருக்கு பதில் எழுதினபின் ஆண்டவருக்குத் தோத்திரம் செய்து விட்டு அந்த புது துறவியின் வருகைக்காகக் காத்திருந் தார். கொஞ்சநாளில் நமது சுவாமிகள் குளித்தலை சென்ருர். அப்போது புதிய துறவியும் பிரான்ஸ் தேசத்தி லிருந்து குளித்தலைக்கு வந்து சேர்ந்தார். இரு துறவி களும் தங்கள் நோக்கத்தை உருவாக்கத் தக்கதோர் சந்தர்ப்பம் வாய்த்தது.



## V. சச்சிதானந்த ஆசிரமம்.

இரண்டு வருஷத்திற்குள் அவர்கள் இருவரும் புது துறவி விடுதியைப்பற்றி அதிக ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அருள் வருஷமாகிய 1950-ல் அர்ச். ஆசீர்வாதப்பர் திருநாளன்று மிகவும் வந்திக்கத் தக்க திருச்சி மேற்றிராணியாருடைய அங்கீகாரத்துடனும் ஆதரவுடனும் ஆசீர்வாதத்துடனும் ஓர் புது ஆசிரமத்தை அவர்கள் ஸ்தாபித்தார்கள். அது குளித்தலையிலிருந்து 1½ மைலுக்கு அப்பாலே காவேரி நதிக்கரையில் ஓர் பெருந் தோப்பிலே நிறுவப்பட்டது. அவர்கள் தீர்க்க ஆலோசனையோடு அதில் குடியேறினார்கள். இந்திய துறவறத்தையும் பாரம்பரையையும் ஒட்டி அவர்கள் காவி வஸ்திரம் அணிந்தார்கள். அவர்கள் தங்கள் கழுத்தில் அர்ச். ஆசீர்வாதப்பர் சிலுவையைத் தரித்தார்கள். அவர்கள் நவ நாமம் பூண்டார்கள். கனம் மோன்ஷுன் சுவாமிகளின் புதுப் பெயர் பரமாரூபியானந்தம். மேன்மையான அரூபமான தேவ ஆவியின் மட்டில் அவர் வைத்திருந்த விசேஷ பக்தியை அது வெளிப்படுத்துகிறது. ஞான அமைதி நிலவும் வனம் என்ற அர்த்தம் பூண்ட சாந்திவனம் என்று தங்களுடைய புதிய ஆசிரமத்தை அழைத்தார்கள். சட்ட பூர்வமான ரீதியில் அதை சச்சிதானந்த ஆசிரமம் என்று கூப்பிட்டார்கள். ஆகையால் அவர்களுடைய ஆசிரமத்தின் நோக்கத்தை எளிதாய் எவரும் கண்டுபிடித்துக்கொள்ளலாம். அகபுற சமாதான ஜீவியம் ஜீவிக்க இந்த ஆசிரமம் ஏற்பட்டது. இந்த மடம் தமதிரித்துவ ஏக தேவனை சுயேச்சையாயும் இருதய எக்களிப்போடும் தியானிக்கவும் ஆராதிக்கவும் அதிக வளர்ச்சியையளிக்கும்.

## சாந்திவன நிலமை.

பழங்கால வழக்கத்தைப்போல அவர்களுடைய இருப்பிடங்கள் அமைக்கப்பட்டன. அவர்களுடைய குடிசைகள் அலாதி அலாதியாய் கொஞ்ச தூரத்தில் கட்டப்பட்டன. அந்த குடிசைகள் மூங்கித் தட்டிகளினு லும் தென்னங் கீற்றுக்களினுலும் கூரையாக வேயப் பட்டன. அந்த மாதிரியான ஓர் குடிசையோடு ஓர் தாழ்வாரத்தை குடிசைக்கு வெளியே கட்டினுர்கள். அந்தத் தாழ்வாரம் பல சாமான்கள் இல்லாமல் சுத்த மாக இருந்தது. அதிலேதான் அவர்கள் பூசைப்பலி நிறை வேற்றினுர்கள். அதிக ஈரமான நாட்களில் உட்காருவ தற்கு மட்டும் சில செங்கல்களை அடுக்கி வைத்தார்கள். மழை துவக்கினவுடனே சில ஆச்சரியங்களும் மலைப்புக் களும் அங்கு ஏற்பட்டன. எறும்புக் கூட்டங்களுக்கு கணக்கில்லை. பூரான்களுக்கு எண்ணிக்கையில்லை. மற்ற ஊர்வனவற்றிற்கு குறையில்லை. இவைகளெல்லாம் மழைக்கு இந்தத் துறவிகளின் குடிசைக்குள் ஒண்ட வந் தன. குடிசைக்குள் கிடந்த செங்கல் இடைவெளிகளிலே தேளும் நட்டுவாக்களியும் வந்து தங்கின. ஆகையால் அந்த இடைவெளிகளை சிமண்டினுல் பூசி அடைக்க வேண்டி இருந்தது. கொஞ்சங் கொஞ்சமாக மூங்கில் படல்களைக் களைந்து எறியவேண்டியிருந்தது. ஏனென் ருல் கரையான் படையை எதிர்க்க முடியவில்லை. பாம்பு கள் உள்ளே புகுந்தன. ஆகையால் மூங்கில் படல்களை எடுத்துவிட்டு கூரை வரையில் செங்கலினுல் சுவர் எழுப்பி னுர்கள். குரங்குகளுக்கு மிகவும் பிரியமான சமயலறையை செங்கலினுலும் சிமெண்டினுலும் கட்டவேண்டியிருந்தது. அப்படிச் சமயலறையைக் கட்டினதால் குரங்குகளின் உபத்திரவம் நீங்கினது. பட்டணத்து வாரியாய் இந்த சிறு சமயலறையைக் கட்டினபோது அது கனம் பரமா ரூபியானந்தம் சுவாமிகளுக்குப் பிடிக்கவில்லை. அழையாத

வீட்டில் நுழையாதே என்பது பழமொழி. ஆனால் குரங்குகள் அழையாத விருந்தாளிகள் என்றாலும் வீட்டிலே நுழைந்தன. அவைகளால் ஏற்படும் நஷ்டங்களைத் தடுக்க அவருக்கு மனமும் அழைத்தலுமேயில்லைபோலும். தன் மனதிற்கு விரோதமாய் அவர் தன் தரித்திர அந்தஸ்துக்கு ஒரு சில எல்லைகள் போடவேண்டி இருந்தது. கரையான் படைக்கும் எலிப்படைக்கும் புஸ்தகங்களைக் காப்பாற்ற சமையலறையோடு சேர்த்து ஓர் நூலகமும் பட்டணத்து வாரியாய் கட்டப்பட்டது. ஆனால் குடியிருக்கும் குடிசைகளோ கூடினமட்டும் நடைமுறையில் துறவற தரித்திரத்திற்கு ஒத்தபடி வைதீகத்தில் குறைந்ததல்ல.

## எளிமையின் உன்னத வைராக்கியம்

சாந்திவனத்தின் ஆரம்பத்திலிருந்த ஏழ்மைத் தோற்றம் கொஞ்சம் மாறினாலும் உண்மையும் இந்தியமயமுமான ஏழ்மைத் தன்மை மாறவில்லை. நமது அடிகள் அதைப்பற்றி அதிகமும் பிடிவாதமாக இருந்தார். நமது சுவாமிகளின் நோக்கப்படி தரித்திர வார்த்தைப்பாடு எடுத்த துறவி ஏழைகளின் உண்மையான நிலையில் ஏழைகளோடு ஏழையாய் ஜீவிக்கவேண்டும். அதுவும் இந்திய ஏழைகளோடு ஜீவிக்கவேண்டும். அந்த ஏழ்மை நிலையிலிருந்து ஒருபொழுதும் நீங்கக்கூடாது. ஆசிரமத்தில் பட்டணத்து வாசிகள் இல்லாவிட்டாலும் உண்மையில் தமிழ்நாட்டு குருக்களும் மற்றவர்களும் சாந்திவனத்தில் தங்கள் சொந்த வீடுகளிலுள்ள சகல வசதிகளையும் கண்டடைந்தார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் சொந்த தகப்பன் வீட்டில் சிறு பிள்ளையாய் வளரும்போது தங்கள் தகப்பன் வீட்டிலிருந்த வசதிகளையே சாந்திவனத்தில் கண்டு அனுபவித்தார்கள். உதாரணமாக அவர்கள் மேசைச்சாப்பாடு சாப்பிட்டதில்லை.

தரையில் அமர்ந்துதான் உணவு அருந்தினர்கள். தரையில் தான் தூங்கினர்கள். தரையில் உட்கார்ந்தார்கள். தமிழ் நாட்டுப் பொதுமக்களும் இவ்விதம் செய்கிருர்கள். இந்தியாவின் பரம்பரையில் சந்நியாசி என்ற துறவி தன் அழைத்தலுக் கிணங்க ஓர் பரம ஏழையானவர்; சகலத்தையும் துறந்தவர். அன்ருட தர்மத்திஞல் ஜீவிப்பவர். எல்லா பாதுகாப்பையும் தள்ளினவர். இந்த நிபந்தனைகளை சத்திய திருச்சபையிலே விளங்கும் சபைகளின் ஒவ்வொரு அங்கத்தினரும் இவ்வித தரித்திரத்தை அனுசரிக்காவிட்டால் தனிப்பட்ட துறவிகள் கூடினமட்டும் இவ்வித தரித்திரத்தை அனுசரிக்கலாமே. வீரத் தத்துவத்திற்கும் புண்ணிய சாங்கோபாங்கத்திற்கும் நேர் விரோதமாய் இருப்பது பிராணியிலிருந்து உற்பத்தியாகிற எல்லா உணவும் என்று இந்திய பரம்பரை ஓர் பழமொழியாய்ச் சொல்லுகிறது. அப்படியே சொத்தும் உலக நன்மைகளும் துறவிக்கு விரோதமானவையாம். துறவி மடத்து உணவு காய்கறிகளே தவிர புலால் அல்ல. தரையில் அமர்ந்து வாழை இலையில் உணவு அருந்துவது தமிழன் பழக்க வழக்கமல்லவா? எந்த விருந்தாளியும் மேல்நாட்டுக்காரருமே சாந்தி வனத்திற்கு வந்தால் அங்கே உள்ள பழக்கவழக்கங்களையே அனுசரித்தார்கள். தரித்திரம், சுத்த போசனம், ஏகாந்தம், மௌனம் முதலியவைகளெல்லாம் பரித்தியாக முயற்சிகளின் தோற்றங்கள்கூட இல்லை. பெத்லேஹம் ஊரில் கிறிஸ்து பிறந்த மாட்டுடையும் குடிசையும், நசரேத் ஊரில் கிறிஸ்து செய்த தச்சுத் தொழிலும் கிறிஸ்து நாதருக்கு ஒரு பொழுதும் தவமுயற்சியாக இருந்தது என்று கருதப்படவில்லை. திருச்சபையின் பெயரால் இந்தியாவின் சந்நியாசத்தை ஏற்றுக்கொள்ளுவதுதான் சாந்திவனத்தின் நோக்கம். இது பொதுப்பட்ட மானிட சுபாவத்தை கிறிஸ்து ஏற்றுக்கொண்டதற்குச் சமானம். குறிப்பாக

யூதர்களுடைய நிலைமையையும், தாவீது ராஜாவின் கோத்திர நிலைமையையும் கிறிஸ்து ஏற்றுக்கொண்டதற்குச் சமானம். இன்னமும் உலக பல ஜாதிகளின் நிலைமைகளையும் பல தேசத்தின் நிலைமைகளையும் வாழ்க்கையின் பல நிலைமைகளையும், நிபந்தனைகளையும் தாயாகிய சத்திய திருச்சபை ஏற்றுக்கொள்வதற்குச் சமானம். இப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்றுக்கொள்வதுதான் சாந்தி வனத்தின் நோக்கம்.

## VI. சாந்திவனத்தின் நோக்கம்

### எதிர்ப்பும் மறுப்பும்

சச்சிதானந்த ஆசிரமத்தைப்பற்றி குணதோஷங்கள் கண்டுபிடிப்பவர்களின் மனதில் எழும்புகிற கடின எதிர்ப்புகளும் மதிப்புகளும் அநேகம். சந்தேகமில்லாமல் துறவிகள் மனிதப் பிறவிகள்தானே என்று மட்டும் நினைத்து அவர்களுக்கு அனுதாபங் காட்டினார்களே தவிர அவர்களுடைய கருத்துக்களை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து மதிக்கவில்லை. உண்மையோ சாதாரணமாக நடைமுறையைத் தாண்டி நிற்கிறது. நவீன இந்தியாவின் புதியதான நிபந்தனைகளும் நிலைகளும் மாறி வந்துவிட்டன. இத் துறவி மடத்தை இந்துக்கள் சொல்லுவது போல எம் மதமும் சம்மதம் என்று சொல்லும் ரீதியில் எவரும் சொல்லலாமே எனப் பலபேர் பேசினர். சினேகிதரான ஓர் குரு இந்த துறவி ஆசிரமத்தின் மட்டில் எதார்த்தமான காரணம் விளக்கினார். "நீங்கள் இப்போது ஆரம்பித்திருக்கிற ஆசிரமம் போல சுதேசக் குருக்களாகிய நாங்கள் 50 வருடத்திற்கு முன்னே துவக்கியிருக்கவேண்டும். அதை நீங்கள் துவக்கியிருக்கிறீர்கள். நாங்களே அதைச் செய்யத் தவறிவிட்டோம்." எப்படிப்பட்ட எதிர்ப்பு வந்தாலும் கனம் பரமாரூபியானந்தம் அமைதியாய் இருந்தார். அவசியமான விபரங்களைக் கேட்பவர்கள் கண்டுபிடிக்கும்படி சொன்னார். மேற்றிராணியாருடைய ஆதரவாலும், தன் சொந்த விசுவாச உறுதியாலும், தன் பாதையிலே நடந்தார். காலம் கடந்து போனாலும் சுவாமி பரமாரூபியானந்தம் தம்மோடு நெருங்கிப் பழகினவர்கள்கூட சாந்திவனத்தின் நோக்கத்தை அறியவில்லை என்று ஆச்சரியப்பட்டார். மடத்தின் கால அட்டவணைப்பிரகாரம் மணியடித்து சகலமும்

ஒழுங்காக நடைபெறவேண்டுமென்று சிலர் நினைத்தார்கள். ஜெபமாலை செய்யவும் திவ்யநற்கருணை சந்திக்கவும் காய்கறி தோட்டத்தை மேற்பார்க்கவும் அவைகளிலுள்ள பூச்சிகளை நசுக்கவும் நேரங் கொடுக்காத மடம் என்ன மடம்? மடத்தைச் சுற்றி இரண்டு ஏக்கர் நிலம் இருக்கின்றன. அந்நிலத்தில் துறவிகள் ஏன் வேளாண்மை செய்யக்கூடாது என்று வேறு சிலர் வினவலாம். மேல்நாட்டுத் துறவிகள் நிலத்தைச் சாகுபடி செய்கிறதில்லையா? இங்குள்ள துறவிகள் சுயநல வாதிகளோ? ஆகையால்தான் ஏழைகளுக்கு வைத்திய விடுதி வைக்க நோக்கமில்லை போலும். கப்பூசீன் துறவிகளை போல அதிக வேலையாய் கஷ்டப்படும் பங்கு சுவாமியார்களுக்கு உதவி செய்யப் போகிறதில்லை. அப்படிப் பங்குகளுக்குப் போனால் பொது ஜனங்களோடு பழக ஓர் வசதி ஏற்படலாமோ, அல்லது இந்திய இலட்சியத்திற்கு முக்கியமான படிப்பு அறிவை வளர்க்கும் ஆராய்ச்சி நிலயமாக அவர்களுடைய சாந்திவனம் காட்சியளிக்குமோ என்றனர் இன்னும் சிலர்.

## வேத போதக முயற்சியோ?

முக்கியமாக ஓர் வேதபோதக முறையைப் புதிதாகக் கண்டுபிடிக்க சாந்திவனம் உதவலாம். ஆனால் எத்தனை பிராமணர்களை கனம் பரமாரூபியானந்தம் மனந்திருப்பியிருக்கிறார் என்று அநேகர் கேட்டார்கள். தரித்திரம், இந்திய வாழ்க்கை, வைதீக ஞானம், ஹிந்து பண்டிதர்கள் போங்கு, ஜனங்களோடு அனுதாபப் பழக்கம், அவர்களுடைய சிந்தனை வழிபாடு ஒரே வார்த்தையில் சகலத்திலும் ஒற்றுப்போகுதல் என்றவைகளைப்பற்றி இந்த சாந்திவன மடம் ஆராய்ச்சி நடத்தலாம் என்று இன்னும் அநேகர் எதிர்பார்த்தார்கள். இப்படியே சச்சிதானந்த ஆசிரமம் விசேஷ விதமான கருத்துச் செறிந்த ஓர்

எடுத்துக்காட்டாக இருக்கலாம். இந்தியாவை கிறிஸ்தவ மயமாக்க திருச்சபையில் அரிய பெரிய வேலையால் ஏற்படும் விசேஷ பலனின் ஓர் அறிகுறியாக இருக்கலாமென்று சொல்லுவார்களாக்கும். இருந்தாலும் இதுவெல்லாம் சச்சிதானந்த ஆசிரமத்தின் நோக்கமல்ல. இதுவெல்லாம் இரண்டாந்தர மதிப்புடையது. இவ்விதமான ஒற்றுப்போகும் முறை அப்போஸ்தலிக்க பலா பலனில் முன்னமே செலுத்தப்பட்டுவிட்டது.

## ஏகாந்தத்தின் தனி இயல்பும் பயனும்

சச்சிதானந்த ஆசிரமம் ஆழ்ந்த அர்த்தத்தில் அவசியமான சந்நியாச மட கேந்திரமாக விளங்குமென்று நம்பலாம். இந்திய முறை சந்நியாசி தேவ ஏகாந்தத்தில் ஜீவிக்கும் மனிதனுக இருப்பார். கேவல பிரமன் அதாவது தெய்வீக சுயம்பு மட்டும் அவருடைய தியான சிந்தனையின் பொருளாயிருக்கும். அதுதான் அவருடைய ஏக அலுவல். சமூக சேவை செய்யவோ, அறிவு வளர்ச்சி சம்பந்தமான வேலையை நடத்தவோ, அப்போஸ்தலிக்க அலுவலை விஸ்தரிக்கவோ, உலக இரக்ஷணியத்துக்காக உழைக்கவோ ஓர் சந்நியாசி உண்டாக்கப்படுவதில்லை. சந்நியாசி தன்னை அப்படியே தேவனுக்கு அர்ப்பணம் செய்கிருர்! யாதொரு கட்டிடமில்லாமல் தனி மண்டபத் தோம்புபோல் காட்சி அளிக்கிருர். தன் விசேஷ அழைத்தலில் பிரமாணிக்கமாய் இருக்கிருர். இந்திய துறவியின் ஜீவியம் சந்தேகமில்லாமல் திருச்சபையின் பற்பல ஞான அலுவல்களில் ஓர் விசேஷ எதிர்த்தாக்க விளைவாய் இருக்கும்.

மேலெழுந்த வாரியாய் கவனிப்பவர்களுக்கோ அந்த சந்நியாச வாழ்வு வெறும் பலனில்லாத அலுவலற்றதாய் இருக்கிறதென்று குறையாய்த் தோன்றலாம். ஆனுல்

துறவியோ தன் உள்ளத்தில் அதி உன்னத கிரிகாஙிலையில் இருக்கிறார். அதாவது பரமபிதாவின் மடியில் சாதாரண தன் அர்ப்பணத்தை உறைவிடமாய் தெரிந்துகொண்டு அதில் தன்னை மூழ்கடிக்கிறார். குருவானவரோ திருச் சபையில் தேவத் திரவிய அனுமானத்தின் இரகசியத்தை அடையாள மூலமாக வெளிப்படுத்துகிறார். துறவியோ தேவ இரகசியத்தில் அமிழ்ந்து மூழ்கிறார். அதில்தான் தன் உறைவிடமென்று அறிந்து அதில் தன்னை முழுதும் மூழ்கடிக்கிறார். பிரபஞ்சத்தில் எத்தனையோ இரகசியங் கள் இருக்கின்றன. நூதனமாய் கண்டுபிடித்தல்கள் இன் னும் மனித புலனுக்கு எட்டாத எத்தனையோ காரியங்கள் ஆராய்ச்சிக்கு எட்டாமல் இரகசியமாய் இருக்கின்றன. அவைகளில் கதிரியக்கங்கள், ஆகாசக் கதிர்கள் "எக்ஸ்ரே" முதலிய கிரணங்கள் சர்வத்தையும் நமது உடலையும் கூட ஊடுருவிப் பாய்கின்றன. ஆனால் அவை களின் ஸ்பரிஸ உணர்ச்சியை நுட்ப அறிவுள்ள மேதாவி கள் நுண்ணிய ஆயுதங்களைக்கொண்டு கண்டுபிடிக்கலாமே தவிர மற்ற எவருக்குத் தெரியும்? இப் பிரபஞ்சத்தில் எத்தனையோ இரகசியங்கள் இருக்கின்றன! அதேபோல தான் திருச்சபையிலும் அநேக இரகசியங்கள் இருக்கின் றனவென்று நாம் உணர வேண்டும். திருச்சபையிலுள்ள இரகசியங்களை தேவ அருளால் ஏவப்பட்டவர்கள் மட்டும் ஒரு விதமாக விவரித்து அர்த்தம் சொல்லலாம். திருச்சபையில் ஞான துறவி ஜீவியத்தின் பலன்கள் அந்த ஆகாச இரகசியங்கள் போல எங்கேயும் எப்பொழுதும் திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினரையும் ஊடுருவிப் பாய்ந்து விசாலித்து இயங்குகிறது. உலகத்திற்குள் சரீர வாழ்வில் பிழைக்கிற, அசைகிற, இருக்கிற நமக்கு நாம் கண்டுணராத ஆகாச இரகசிய சக்திகள் அத்தியா வசியமாயிருக்கிறது போலவே திருச்சபைக்குள் திவ்ய வாழ்வில் பிழைக்கிற, அசைகிற, இருக்கிற நமக்கு துறவி

யின் தியான ஜீவியத்திலிருந்து கசிகிற ஞான இரகசியமான சக்திகள் அத்தியாவசியமானவை. சந்நியாசிக்கோ வெளித்தோற்றமான பலாபலன் தேவையில்லை. எந்தப் பலாபலனும் அவருக்கு இரண்டாவது காரியம். அது அவருக்கு அவசியமே இல்லை. எவ்வளவுக்கு சந்நியாசி நேரடியாக பலாபலனை கவனிக்கிறாரோ அவ்வளவுக்கு அவர் தன் அழைத்தலுக்கு பிரமாணிக்க மற்றவராகிறார். அவர் அப்படி பலாபலனை இரசிக்க நேர்ந்தால் அவர் ஒரு வேளை அசமந்தத்தில் அமிழ்வார். தனக்குரிய மௌனம் தியானம் ஏகாந்தத்திலிருந்து சந்நியாசி வெளியேறி ஏதாவது ஞானசேவை செய்தால் ஒரு வேளை பலன் ஏற்படலாம். அப்பலனைப் பார்த்து ஜனங்கள் அவரை புகழ்வார்கள். அது சரிதான். ஆனால் கடவுள் அவரை ஏகாந்தத்திற்கு அழைத்த நோக்கத்தின் பலன் நிறைவேறவில்லை. சத்தமிடுகிற வெண்கலம், ஓசையிடுகிற கைத்தாளம்.

## சன்னியாசத்துவம்.

விளக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால் இந்தியா தன் கர்ப்பத்தில் உற்பத்தியாயிருக்கிற மிகவும் அந்தரங்கமான கோளங்களிலிருந்து இரகசியங்கள் கசிந்து வடிகின்றன. தேவ கேவலத்துக்கு மிகவும் அரிதாய் ஈடான ஓர் உண்மை முறையிலும் தேவ இரகசியத்திற்கு மேலான வழியிலும் இந்தியா ஓர் துறவி முறையை உருவாக்கியிருக்கிறது. இந்திய சந்நியாசத்துவம் ஆன்ம சாதனங்களிலும் இடைவிடாத தியானத்திலும் மானிட உதவியற்ற தனத்திலும் அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தியா தன் பெருமையையும் மேன்மையையும் உலகத்திற்கு உயர்த்திக் காட்டுகிறது. எப்படி யென்றால் இந்தியா தன் ஜன சமூகத்தின் நடுவே தனக்கு மிகவும் உயர்வான ரீதியிலே, இப்படிப்பட்ட சந்நியாசிகள்

முளைத்து முன்னேறும்படி வாய்ப்பளித்திருக்கிறது. இது எவ்வளவு பெரிய ஆச்சரியம்! அந்த சந்நியாசிகள் சும்மா தேவ சந்நிதானத்தில் இருந்தால் போதும். அக இரகசியங்களின் சாட்சிகளாய் தேவ கேவலமென்ற சுயம்பாயிருக்கும் தேவனின் பக்தியுள்ள சாட்சிகளாய் அவர்கள் இருந்தால் மட்டும் போதுமென்று பெருமை காட்டுகிறது. இந்தியா கால வோட்டத்தில் இருந்த பெரும் நோக்கம் போலித்தனத்திலும் குறை குற்றங்களிலும் சிதைவடைந்திருந்தாலும் அந்த நோக்கத்தின் மேன்மையை நாம் மறக்கக்கூடாது. இன்னும் எவ்வித முயற்சியாலும் தேவனை நோக்கிப் போகும் இந்த நோக்கத்தின் பூர்த்தி செய்வது இந்தியர்களுக்கு முக்கியமான கடமை. இப்பேர்ப்பட்ட இந்திய சந்நியாசத்துவம் கிறிஸ்துவ நவீன துறவி மடத்திற்குக்கூட ஓர் அஸ்திவாரமாயிருக்கும். இந்த நவீன துறவி மடத்தை திருச்சபையிலே உடனே சேர்க்கலாம். பரிசுத்த ஆவியில் எதிர்கொண்டழைக்கும் கிறிஸ்துநாதரோடு இந்தியாவை உடனடியாக கிறிஸ்து சம்பூரணத்தில் நிலைநாட்டலாமா வென்று அநேகர் கேள்வி கேட்கலாம். மேல்நாட்டு துறவி மடத்தை இந்தியாவில் பெயர்த்து நடுவது சாந்திவனத்தின் நோக்கமல்ல. கிறிஸ்து வேதத்தின் போதனைக்குத் தக்கமட்டும் சுய இந்தியாவின் பழங்கால சந்நியாசத்தை ஏற்றுக்கொள்வதே அதன் நோக்கம். நடைமுறையில் இதனுள்ளே பலவிதமான ஆபத்துக்களும் கஷ்டங்களும் இருக்கின்றனவென்று அநேக சிநேகிதர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். ஆனால் எந்த விஷயத்தில் எதிர்ப்பு இல்லை? சகல விஷயங்களிலும் எதிர்ப்புகள் இருக்கின்றன. பந்தய ஓட்டங்களில் எத்தனையோ ஆபத்துக்கள் இருக்கின்றன. இருந்தாலும் எத்தனையோபேர் அவைகளை எதிர்நோக்கி தைரியமாய் ஓடுகிறார்கள்! இந்தியாவின் அந்தராத்மாவில் ஓர் அரிய இரகசிய ஞானமுத்து இருக்கிறது. அந்த

இரகசிய ஞானமுத்தை விடுவித்து பிரகாசிக்கச் செய்வதில் என்ன ஆபத்து இருந்தாலும் அது அனுவசியம். உடல் முழுவதையும் ஆத்தும முழுவதையும் அதில் மூழ்கடித்து அகபுற கஷ்டங்களை சகித்து இந்திய சந்நியாசத்தின் சாரத்தைக் கண்டுபிடிப்பதே அந்த இரகசிய ஞான முத்தை விடுவிப்பது. இதில் விவேகமில்லாமல் நடக்க வேண்டுமென்று அர்த்தமல்ல. ஆனால் விமரிசை பரிசுத்த ஆவியின் கொடையாயிருந்தால் திடமும் அந்த பரம ஆவியின் கொடைதானே. இனிமையாகவும் வன்மையாகவும் அனைத்தையும் நடத்துகிற பரிசுத்த ஆவியின் ஏவுதலில் தேவ ஊழியத்தை நாங்கள் நடத்த வேண்டியதில்லையா ?

## பாரத மக்களின் கடமை.

ஆனால் சாந்திவனம் தானாக தன் சொந்த பிரயாசையால் இவ்விதபலனை அடைந்துவிடக்கூடுமென்று பெருமை பாராட்டவில்லை. சாந்திவன துறவிகள் தங்கள் சொந்தக் குறைகளைக் கண்டுபிடிக்கிறார்கள். முக்கியமாக அவர்கள் பிறப்பில் இந்தியர்களல்ல. ஆயிர வருடமாக படிந்து கிடக்கும் பாரம்பரையில் உருவாகும் விசேஷ இருதய அமைதலும் புத்தி உருவகமும் அவர்களுக்கில்லை. இரத்தம், தாய்பாஷை, இந்திய குழந்தைப் பருவத்தின் வளர்ப்பு முதலியவைகள் அவர்களுக்கில்லை. கனம் பரமாரூபியானந்தம் சொல்லுவதுபோல மேல் நாட்டுக்காரர்கள் ஜீவியத்தின் வழிபாடுகளைப் பற்றிதான் வரையறுத்துப் பேசுவார்கள். ஆனால் இந்தியர் மட்டுமே சாந்திவனத்தின் நோக்கத்தை பூர்த்தி செய்வார்கள். பிறநாட்டார் இந்தியர்களுக்கு தற்சமயத்தில் தூண்டுதல் கொடுக்க அவசியமிருந்தாலும் இந்திய திருச்சபைக்குள் இந்திய மக்கள் தானே பூர்த்தியான இந்திய கிறிஸ்துவ சந்நியாசிகளாகக் கூடும். இந்திய மக்கள் வழியி

லுள்ள மாயவித்தைக்காரர்களின் பாசக்கானங்களைக் கேட்டு மயங்கி பின் தங்கக்கூடாது. அவ்வாறே கிறிஸ்துவ சந்நியாசத்திற்கும் துறவறத்திற்கும் மறு உதயம் போல் இது இருக்கும்.

## சாந்திவனத்தின் பரந்த விளைவு

இந்தியாவின் சிந்தனை, கலைஞானம், பரம்பரை முதலியவைகளோடு ஒத்துப்போகுதல்தான் சாந்திவனத்தின் முக்கிய நோக்கம் என்று சிலர் சொல்லலாம். இது அநுதாப விமரிசை தாழ்ச்சியோடு கூடிய நெருங்கிப் பழகுதல் முதலியவை சுவிசேஷ போதகத்திற்கும் இரக்ஷணியம் மக்களுக்குக் கொண்டுவருவதற்கும் ஓர் முக்கியமான தயாரிப்பாகும் என்று அவர்கள் நினைப்பார்கள். இதுவெல்லாம் சாந்திவனக் கொள்கையின் அடிப்படையானது என்று ஒருவாறு சொல்லலாம். ஆனால் அதே சமயத்தில் அதன் பலாபலன் ஒருவேளை கூடவும் ஒருவேளை குறையவுமிருக்கலாம். ஏனென்றால் நேரடியாக இது சாந்திவன நோக்கத்தின் வெற்றியைத் தராது. மேலும் இதுவெல்லாம் சாந்திவனத்தின் கவனத்தைச் சிதறடிக்கலாம்; அல்லது அதைப்பற்றி அவர்கள் புகழவோ, இகழவோ அல்லது கண்டு பாவிக்கவோ உதவக்கூடும். இதுவெல்லாம் காற்றைப்போல நிலவரமில்லாதது; கிறுகிறுவென்று ஒலிக்கும் பித்தளை மணிக்கு ஒப்பாகும். அதிகம் சொல்லவேண்டுமானால் இந்தியாவின் மனந்திருப்புவதற்காக சாந்திவனம் நேரடியாக உழைக்காது. ஆனால் அது அதற்கு மேல் உழைக்கும். அது சந்தேகமில்லாமல் ஆழ்ந்த அடிப்படையில் இந்தியாவின் இரகசியத்தை அடைய இயலும். இந்தியா தன்னகத்தில் தரித்திருக்கிற இரகசியத்தை ஆராய அதன் ஆழங்களில் மூழ்கி அமிழ்ந்திப்பார்ப்பது நலம். ஆகையால் திவ்ய வெளிப்படுத்தலின் ஒளியை இந்தியாவின் மேல்

பிரகாசிப்பிக்கிறதைத் தவிர இந்தியாவின் ஞான செல்வத்தின் சேர்தலில் முழுதிருச்சபை அதிக மேன்மையடையுமென்பது நிச்சயம். இது விஷயத்தில் நமது அடிகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்னவென்ருல் திருச்சபை உள்ளத்தில் அதிக அதிகமாக ஆழ்ந்து மூழ்கி அங்கே படிந்து கிடக்கிற திவ்ய வெளிப்படுத்தலின் சத்தியங்களை மிக கம்பீரமாக உணர்ந்து பரம திரித்துவத்தின் உட்சீவியத்தின் இரகசியங்களையும் தேவகுமாரனின் இரகசியங்களையும் இந்திய ஞானசாஸ்திரிகள் அபூர்வமான முறையில் விவரிப்பார்கள். அவைகளில் இதுவரைக்கும் அவ்வளவு விஸ்தரிக்கப்படாத பரமாரூபியின் ஞான சாஸ்திரம் புது மலர்ச்சி அடையுமென்று நமது அடிகளார் நம்பியிருந்தார். ஏனென்ருல் பாரத ரிஷிகள் தேவ அருளினுலே ஞானக்கண் திறந்துகொண்டு உள்ளத்துக்குள் இருக்கிற பரமாத்மன் தியானத்தில் அமிழ்ந்து கிடப்பது வீணுகாதே! இதுவெல்லாம் சாந்திவனத்தின் தாழ்மையான அடிப்படையில் அடங்கியிருந்தது.



# VII. சாந்திவன வாழ்வு

## அடிகளாரின் படிப்புகள்

மேற்கூறிய நோக்கத்தோடுதான் சாந்திவனத்தில் பரமாரூபியானந்தம் சுவாமிகள் தனக்கு ஆண்டவர் கொடுத்த ஏழுவருஷம் வரை ஜீவித்தார். தியானமும் படிப்பும்தான் அவருடைய முக்கிய அலுவலாயிருந்தன. துறவிமடத்து வழக்கம்போல் அவருக்கு படிப்பானது தெய்வீக இரகசியத்தில் ஆழ்ந்த சிந்தனையையும் மேன்மையான புத்தி அறிவுவளர்ச்சியையும் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அவருடைய படிப்பு தத்துவ சாஸ்திரங்களின் முறைகளைப்பற்றியும் சரித்திர போங்குகளைப் பற்றியும் விஞ்ஞானங்களின் ஆராய்ச்சிகளைப்பற்றியும் பாஷைகளின் அபிவிருத்தியைப் பற்றியும் சார்ந்திருக்தது. ஜெபம் செய்யும் நேரம் போக மற்ற நேரங்களில் அவருடைய படிப்பானது இறுதி மௌனத்திற்குத் தயாரிப்பாக இருந்தது. இன்னமும் அவருடைய படிப்பானது எல்லாச் சிந்தனையிலும் எல்லாப் பொருளிலும் பிரசன்னமாயிருந்தும் எல்லாச் சிந்தனையிலிருந்தும் எல்லாப் பொருளிலிருந்தும் தன்னிலேதானே விலகியிருக்கும் ஆண்டவருடைய பிரசன்னத்திற்கு ஓர் தயாரிப்பாக இருந்தது.

## சாந்திவன யாத்திரீகர்கள்.

சாந்திவனத்துக்கு அநேகர், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், புத்தர்கள், முஸ்லீம்கள், இந்தியர்கள், மேல்நாட்டுக்காரர்கள் வந்தார்கள். சிலபேர் விநோதப்பிரியத்தினால் வந்தார்கள். ஆனால் ஞானவெளிச்சம் கண்டடைய ஆவலாகவும் உண்மையான ஞானத்தியானவழி தெரிந்து கொள்ளுவதற்கும் அநேகர் அவரிடம் சென்றார்கள்.

திருச்சபையின் வெளித்தோற்றங்களைத் தாண்டிப்போக முடியாத சிலர் மேல்திசையிலிருந்து கீழ் திசையில் ஏதாவது மறைந்துகிடக்கும் ஞானத்தை யடையலாமோ



வென்று ஆவல் கொண்டு இந்தியாவுக்கு வந்தவர்களில் ஒருசிலர் சாந்திவனத்திற்குச் சென்றார்கள். சாந்திவனத்தைப் பார்த்தபின் உண்மையில் தங்கள் அதிருப்தியின் பிரச்னைகளைப் போக்க இங்கேதான் வழி உண்டல்லவா என மொழிந்தார்கள். உண்மையில் துறவி மடத்தில் கொஞ்சநாள் தங்கியிருந்தவர்கள் இருதய சாந்தியடையாமல் வெளியே போனவர்களல்ல.

## அடிகளாரின் எழுதுதலும் உரையாடுதலும்.

பரமாரூபியானந்தம் சுவாமிகளுக்கு ஏராளமான தபால்கள் வந்து சேர்ந்தன. அவைகள் பல தேசங்களிலிருந்தும் வந்தன. அவர் மட்டும் புத்தியொளியுடன் சாமார்த்தியமாய் பதில் கடிதங்கள் எழுதக்கூடும். அக்

கடிதங்களைப் பெற்றவர்கள் பாக்கியவான்களே! தன் துறவி ஆசிரமத்தைவிட்டுப் பிரிய மனமில்லாமலிருந்தாலும் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் அல்லது தமிழர்கள் அவருடைய சொற்பொழிவைக் கேட்க விரும்பினபொழுது அவர் அவர்களிடம் செல்ல தயங்கவில்லை. சில சமயங்களில் பெங்களூர் கோயம்புத்தூர் கார்மேல் மாதா மடத்துக் கன்னியர்களுக்கு தியானம் கொடுக்கச் சென்றார். ஏன்? கார்மேல் மடத்தின் பழங்காலநோக்கம் சாந்திவனத்தைத் துவக்க ஓர் ஏவுதலாக இருந்திருக்கக் கூடாதா? திரு இருதயத்தின் சிறிய சகோதரிகளென்ற சார்ல்ஸ் தெஃபூக்கோவின் பாதையைப் பின்பற்றும் கன்னியர்கள் அவருடைய உதவியை அதிகம் நாடினார்கள். தியான தபசு செறிந்த இந்த கன்னியர்கள் மூலமாய் இந்திய மாதர்கள் மத்தியில் சாந்திவனத்தின் உன்னத நோக்கம் பரப்பலாமென்ற எண்ணம் நமது சுவாமிகளிடம் இருந்தது.

அவருடைய அபாரமான அறிவில் பலர் பங்கு பெறும் படியாக புஸ்தகங்கள் எழுத அநேகர் அடிக்கடி அவரைக் கேட்டனர். பல பிரசுர ஆசிரியர்கள் இடைவிடாமல் சாந்திவனத்தின் விவரங்களைக் கேட்டுக்கொண்டே இருந்தனர். ஆனால் அவரிடமிருந்து பதிலே இல்லை. அவரை எந்தக் காரியத்தைப் பற்றியும் எழுத வற்புறுத்தின பொழுது அவர் சொன்னதாவது: இந்த ஆசிரியரோ அந்த மேதாவியோ அதைப்பற்றி எவ்வளவு அழகாக எழுதக்கூடும். தகுதியற்ற என்னை ஏன் அப்படி எழுதக் கேட்கிறீர்கள்? அதற்குமேல் அழுத்தினால் முறிக்க முடியாத புன் சிரிப்போடு எதுவும் எழுதப் படாத சுத்தமான வெள்ளைக்கடுதாசியே போதும். அதுவே அழகென்றார். சாந்திவன நோக்கத்தைப்பற்றி சில வரலாறுகளடங்கிய இரண்டு புஸ்தகங்களுக்கு அவருடைய முகவுரை வாங்க எவ்வளவோ கஷ்டமாக

இருந்தது!* அவர் புதுச்சேரியில் செய்த சொற்பொழிவுகளை சில சமயம் சுருக்கெழுத்தில் எழுதுவதுதான் கடைசி முறையாகத்தெரிந்தது. அவ்வாறே அவருடைய சிந்தனைகள் சில பத்திரிகைகளிலாவது மிளிர்ந்தன. அப்பத்திரிகை என்னவென்ருல் முக்கியமாக "ஜீவிய திருச்சபை" ("எக்லீஸ் விவான்த்") என்ற அவருடைய சபையின் பத்திரிகை, புதுச்சேரியிலிருக்கிற "இந்திய ஆராய்ச்சி செய்யும் பிரெஞ்சுக்கல்விக் கழக"த்தின் இதழ். பிரான்ஸ் தேசத்தில் அவர், முன் சமயத்தில் அவருடைய சிநேகிதர் விடுத்த உறைகளைச் சேர்த்து ஆழ்ந்த சிந்தனைகள் செறிந்த ஓர் புஸ்தகத்தை ஓர் மலர்க்கொத்தாக வெளியிட்டார். அந்த புத்தகத்தின் பெயர் "அழகுக் கலையிலிருந்து ஆன்மார்த்தக்கலை வரை".

## தேவாலயம் அமைத்தல்.

*1951*-ம் வருஷத்தில் தோப்பு முகப்பில் ஓர் சிறு ஆலய மூலஸ்தானம் கட்டப்பட்டது. குறைந்த வருமானத்திலிருந்து அலங்காரமில்லாமல் இந்த மூலஸ்தானம் திராவிட ஆலயங்களையொட்டி கூடிய மட்டும் அமைக்கப்பட்டது. கூடினமட்டும் செதுக்கப்படாத கற்களினுலே அமைக்கப்பட்ட பீடமும் சற்பிரசாத கூடமும் பரமனின் கேவலத்தையும் சந்நியாசியின் அகத்தில் இருக்க வேண்டிய கேவலத்தையும் சுட்டிக் காட்டின. ஒரு இந்துக் கோவிலை அப்படியே பின்பற்றி கட்டாவிட்டாலும் நமது நாட்டு தேவாலயங்களில் மனங்கவரும் சாந்தியும் தெய்வீக பிரசன்னமும் வாய்ந்த ஆலயமாகவும் அது இருந்தது. எத்தனையோபேர் சாந்திவனத்திற்கு விஜயம்

---

* **புனித ஆசீர்வாதப்பர் அருளிய திருவொழுங்குகளுக்குரிய ஒரு ஆசிரமம்.** திருச்சிராப்பள்ளி 1951 (ஆங்கிலப் பாஷையிலே) **—சச்சிதானந்த ஏகாந்திகள்.** பாரீஸ் 1956. (பிரஞ்சு பாஷையிலே)

செய்து அக்கோவிலுள் புகுந்து உருக்கமாக ஜெபிக்கவும் அல்லது தியானிக்கவும் ஆராதிக்கவும் ஏதுகரமாக அது இருக்கிறதென்று மனப்பூர்த்தியாய்ச் சொன்னார்கள். மூன்று வருஷங் கடந்தபின் திராவிடதூண்கள் தாங்கிய சதுரமண்டபம் ஒன்று மூலஸ்தானத்திற்கு முன் கிழக்கே கட்டப்பட்டது.

அதன் பின் அந்த மண்டபத்திலேயே நித்தியகர்மம் என்ற கட்டளை ஜெபத்தை கீதமாகப்பாட ஆரம்பித்தார்கள். நமது நாட்டு வழக்கப்படி சச்சிதானந்த சந்நியாசிகள் தேவன் மோயிசனுக்கு விடுத்த கட்டளைப் பிரகாரம் தங்கள் பாதரக்ஷையை வெளியே களைந்து விட்டு தேவாலயத்தில் பிரவேசித்தார்கள். அப்படி பிரவேசித்து திவ்ய சந்நதியில் சாஸ்டாங்கம் செய்தார்கள். பிறகு தரையில் ஆசனஞ் செய்து கீதங்களையோ ஜெபங்களையோ நடத்தினார்கள். விருந்தாளிகள் மடத்துக்கு வந்திருந்தால் அவர்களும் இவ்வித சடங்கில் கலந்து கொள்ள அநுமதியளிக்கப்பட்டார்கள். மடத்துக்குரிய பூசையையும் கட்டளை ஜெபத்தையும் பாட்டாகப்பாடும் முறையை ஸ்வாமி பரமாரூபி



யானந்தம் பெரிதும் விரும்பினர். அர்ச். ஆசிர்வாதப்பர் சபையின் சந்தத்தில் சங்கீதத்தைப்பாட சன்னஞ் சன்னமாக அவர் பழகினர். குறித்த நேரங்களில் அவர்கள் கட்டளை ஜெபங்களைச் செய்தார்கள். சூரியன் உதிக்கிற நேரத்தில் காலைப்புகழ் கீதங்களைப் பாடி முடித்தார்கள். அதன்பின் திவ்யபாட்டுப் பூசை நிறைவேறினது. 9 மணிக்கு, மதியம், மாலை 3 மணிக்கு மறுபடியும் ஆலயத்தில் சேர்ந்து தேவஸ்துதிகளில் அமிழ்ந்திருந்தார்கள். கடைசியாக சூரியன் அஸ்தமிக்கும்போது கிரேக்க ஸிரியா கிறிஸ்தவர்கள் "மாலைஜோதி கீதம்" ஏற்றுவதுபோலவும் நமது நாட்டில் "சந்தியாவந்தனம்" அனுசரிக்கிறதுபோலவும் அந்திப் பிரார்த்தனை செய்து உண்மையான **ஜகத் ஜோதி** என்ற **கிறிஸ்து நாதரைத்** தொழுதார்கள். திருச்சபை சட்டங்களுக்கேற்கப் பாடும் ஜெபங்களுக்கு முன்னும் பின்னும் சமஸ்கிருத, தமிழ் சுலோகங்களைப் பாடினார்கள். சூடம் கொளுத்தினார்கள். சாம்பிராணி புகைத்தார்கள். ஆலாத்தி எடுத்தார்கள். இதுவெல்லாம் வெறும் வேடிக்கை என்று சிலர் சொன்னார்கள். ஆனல் சுவாமி பரமாரூபியானந்தம் இதை பொருட் படுத்தவில்லை. அடையாளத்திற்குப் பலன் இருக்கிறது என்று உறுதியாக நமது சுவாமிகள் நம்பினர்கள். அவர்கள் அப்படிச் செய்வது பண்டைய நித்திய பாரத ரிஷிகள் அல்லது பக்தர்களின் சரணங்களையும், அர்ப்பணங்களையும், பூசைகளையும், ஸ்துதி தோத்திரங்களையும் கிறிஸ்துநாதரின் சத்தியமான ஆராதனைக்குள் சேர்த்துக் கொள்ளுதலின் அடையாளமாக இருக்கும்.

## பலாபலன்கள்

சாந்திவனத்தின் வாழ்வு இவ்விதமாக நடந்துகொண்டிருந்தது. ஆனல் வெளியே அதன் நலன் புலப்படவில்லை. சந்தேகமில்லாமல் ஞான போசனத்திற்காக சாந்திவனத்


திற்கு அநேக ஆத்மாக்கள் வந்து போய்க்கொண்டே இருந்தார்கள். சுதேச குருக்களின் உண்மையான அவசிய மான ஜீவிய கருத்தை சாந்திவன வாழ்வும், நோக்கமும், இடைவிடாமல் ஞாபகமூட்டும். மேலும் அது மனச் சாட்சிகளுக்கு ஒளியாயிருக்கும். பங்கு வேலையிலும் மத போதக அலுவலிலும் சாந்திவனத்தின் நோக்கத்தை அனுசரிப்பதற்கான ஓர் முறையைத் திட்டம் செய்ய சில குருக்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அந்த கருத்தை உருவாக்க சில குருக்களும் மற்றவர்களும் நீடித்தகாலம் வரையில் தங்கி சாந்திவன வாழ்வில் பங்கெடுத்துக்கொண்டார்கள். அவர்களுடைய இருக்கை சச்சிதானந்த ஆலயச் சடங்காசாரங்கள் சிறப்பாக நிறை வேற உதவியாயிருந்தது. ஆனால் இதுவெல்லாம் பக்க பலாபலன்தான். துவக்கத்திலிருந்து அவர்கள் ஆவலா யிருந்தது எதுவென்றால் உண்மையான இந்திய கிறிஸ்துவ துறவி ஜீவியம் நடத்தும்படி முயற்சி எடுக்க சாந்திவனத் திற்கு அவர்கள் வந்ததே. ஒருவேளை மடத்தை ஸ்தாபித் தவர்கள் தெளிவாகத் தங்களின் நோக்கத்தை அவர் களுக்கு விவரிக்க முடியாமல் இருந்திருக்கலாம். ஏனென் றால் அச்சந்நியாசிகள் செய்ததெல்லாம் அவ்வளவு இலே சாகவும் இயற்கையாகவுமிருந்தது. ஒருவேளை தமிழ் நாட்டுத் திருச்சபையின் தற்சமய சந்தர்ப்ப சூழ்நிலை வாதிகளைப் பிரியப்படுத்தக் கவலை எடுக்காமல் அவர்கள் இருந்தார்களோ ? ஏன் ? சந்தர்ப்பவாதிகளைத் திருப்தி செய்வதற்காக, வெளி வளர்ச்சி அடைவதற்காக, எவ்விதத்திலும் அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்காக எப்படியாவது சாந்திவனத்தின் உன்னத நோக் கத்தைப் பங்கப்படுத்தினால் திருச்சபையைக் காட்டிக் கொடுப்பதைப்போல சச்சிதானந்த சந்நியாசிகளுக்குத் தோன்றினது. சாந்திவனத்திற்கு விசேஷ அழைத்தல் வேண்டும். அவ்வித அழைத்தலை ஏற்றுக்கொண்டவர்

களுக்கு அம்மடத்தின் நோக்கத்தைக் கண்டுபிடிக்கவும் அதை நிறைவேற்றவும் தேவன் அருள்புரிவார். விசேஷ அழைத்தலுக்குத் தகுதியான பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து அவர்களை மடத்தின் நோக்கத்திற்குத் தகுந்தாற்போல் பழக்கலாம். ஆனால் அப்படி சிறு பிள்ளைகளைப் பழக்கினால் சந்தேகமில்லாமல் யூகிக்க முடியாத மற்ற அநேக பிரதிபலன்கள் இருக்கின்றன. அனுமதிச் சீட்டு சர்க்காரிலிருந்து கிடைப்பது கஷ்டமாக இருந்தபடியால் மேல்நாட்டு ஆசீர்வாதப்பர் சபையினர்கள் இந்தியாவுக்கு வர கடினமாயிருந்தது. ஆகையால் சாந்திவனத்திலுள்ள விசேஷ சூழ்நிலைகளில் தங்களை உருவாக்கத் தகுதியுள்ள பொறுக்கியெடுத்த அழைத்தல்களை ஆண்டவரே அனுப்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. உண்மையாகவே சாந்திவனம் மெதுவாக வளர்ச்சி அடைய ஆண்டவர் சித்தங்கொண்டார் போலும். சாந்திவனத்தை ஸ்தாபிக்கவும் சாந்திவனத்தில் சிருஷ்டித்த பிரகாரம் கிறிஸ்துவ சந்நியாசத்தைத் தன் ஜீவியத்திலாவது நிறைவேற்ற அவருடைய ஏவலாக இருந்தது. மற்றவை எல்லாம் கடவுள் பொறுப்பு. யார் நட்டாலும் யார் நீர் பாய்ச்சினாலும் வளர்ச்சியைக் கொடுப்பது கடவுளே !

## இறுதி மன நிலைகள்


ஆசிரமத்தின் மெதுவான வளர்ச்சியைக் கண்டு சில பேர் கவலையாயிருந்தார்கள். ஆகையால் நமது அடிகளுக்கு அநேக புத்தம்புதிய ஆலோசனைகளைக் கொடுத்தார்கள். உதாரணமாக பிரயோஜனமில்லாததும் தூரமுள்ளதுமான காவேரிக் கரையை விட்டுவிட்டு ஓர் பட்டணத்தில் மடத்தை ஸ்தாபிக்கச் சொன்னார்கள். அப்படிச் செய்தால் மடத்தின் நோக்கம் இலேசாக ஜனங்கள் மத்தியில் பரவும், அங்கத்தினர்களின் தொகை அதிகரிக்கும் என்

ருர்கள். சில சமயம் களைப்பு மலைப்பினால் நமது அடிகள் அப்படிச் செய்ய ஒருவிதமாக செவிகொடுத்தாலும் முடிவில் அப்படிச் செய்ய மனங்கொள்ளவில்லை. சாந்திவனத்திலேயே சஞ்சரிப்பேன், சாந்திவனத்திலேயே சாவேனென்ருர். அவர் அப்படி சாந்திவனத்திலேயே தங்கியிருந்தது சரியில்லையோ? மனிதன் எந்த வேலையையும் பூர்த்தியாய்ச் செய்யவேண்டுமென்று துவக்கத்திலேயே வெகு நுணுக்கமாகத் திட்டம் போட்டால் அது பூர்த்தியாய் நிறைவேருது. அன்றியும் பூர்த்தி செய்யும்



கவலையும் அதன் புள்ளி விவரங்களும் அந்த வேலையை ஆரம்பிப்பதற்கு இடைஞ்சலாக இருக்கும். அதேபோல ஓர் துறவி மடத்தைத் துவக்கும்போது அந்தத் துறவி மடத்தின் பூர்த்தியைப் பற்றி அதிகம் கவலைகொண்டே போனால் அந்த மடம் ஆரம்பிக்கப்படாது. அர்ச். ஆசிர்வாதப்பர் தன் குகையில் துறவி வாழ்வு ஆரம்பிக்கும் போது மடம், சபை ஏற்படுத்தும் கவலை கொள்ளவில்லை. அர்ச். பெரிய அந்தோணியார் வனந்தரத்தில் தவக்கோலம் கொண்டபோது சிஷ்யர்களைச் சேர்க்க ஆசைகூடப் படவில்லை. தாமரை மலர்கிறபொழுது அதிலிருந்து வடிகிற

தேனை அருந்த அநேக தேனீக்கள் வந்து சேருகின்றன. இது ஓர் இந்திய பழமொழி. அதேபோல தேவநேரம் ஓர் மடத்திற்கு வந்ததும் அது தானுகவே சகல காரியங்களையும் ஆட்களையும் ஆகர்ஷித்து வசீகரப்படுத்திக் கொள்ளுகிறது. ஆனுல் தேவநேரத்துக்கு முன் மனிதன் என்ன செய்யக்கூடும்? துறவியின் தகுதியானதும் அவசியமானதுமான சொந்த வேலை தேவனைக் கண்டு பிடிப்பதே. அவர் முதலில் தேவ சன்னிதானத்தில் அமிழ்ந்து மூழ்கிறதே தவிர மற்ற இதர விஷயங்களைப் பற்றி அவர் கவலையே படக்கூடாது.



# VIII. பாக்கியமான மரணம்

## உடல்நலக் குறைவு

சாந்திவனத்தில் சுவாமி பரமாரூபியானந்தம் தபசு முயற்சிகளால் தன் சுகத்தைக் கெடுத்துக்கொள்கிறார் என்று சிலபேர் சொன்னார்கள். சாந்திவனத்தில் அனுஷ்டித்த தபசு முயற்சிகளை அநேகர் கூட்டிப்பெருக்கிச் சொன்னார்கள். ஆனால் உண்மையில் அந்த தப முயற்சிகள் கனம் சுவாமிகளை அவ்வளவாக பாதிக்கவே இல்லை என்று சொல்லலாம். சாந்திவனத்திற்கு வருமுன் குளித்தலைப் பங்கில் அவர் தனியாயிருந்து தன் சௌக்கியத்தை அவ்வளவு நன்ருய்க் கவனிக்காமலிருந்தார். பங்கு சுவாமியாராகக் குளித்தலையிலிருந்ததைவிட சாந்திவனத்தில் சௌக்கியத்திற்குரிய உணவு முதலிய சாதனங்கள் குறைபடவில்லை. ஆனால் அவருடைய தேகநிலை சாதாரணமாகவே இளம் பருவத்திலிருந்து அதிக நுட்பமாயிருந்தது. அவருடைய நுட்ப உடல்நிலையைக் கவனிக்க அவருடைய அன்புள்ள அன்னை அல்லது அவருடைய அக்காள் பிரஞ்சு தேசத்திலிருந்ததுபோல் எப்பொழுதும் தேவையாயிருந்திருக்கும். அவரே தன் உடலைக் கவனிக்காமல் சிந்தனை உலகத்தில் அதிக ஆழமாக அமிழ்ந்திக் கிடந்தார். அவருடைய சிநேகிதர்கள் அவருடைய நிலையைப்பற்றி அவருக்கு எவ்வளவோ எடுத்து ஓதினார்கள். பயனில்லை. அவருக்கு இளைப்பு வியாதி உண்டு. அந்த வியாதி வருஷந்தோறும் ஒரு தடவையாவது அவரை அதிகமாக பாதிக்கும். அப்போது ஓர் வைத்தியரை அழைத்து வந்து அவருடைய வியாதிக்கு சிகிச்சை செய்யலாமாவென்று அவருடைய சிநேகிதர்கள் அவரைக் கேட்பார்கள். அப்பொழுது அவர் அதற்குச் சம்மதிக்க மாட்டார். வைத்திய உதவியை அவருக்குக் கொடுக்க

ஏதாவது உபாய தந்திரம் அவருடைய சிநேகிதர்கள் செய்யவேண்டியிருந்தது. உண்மையில் அவருடைய உடல்நல தேவைகள் அவருக்கு அவ்வளவு அவசிய மில்லாமல் இருந்தன. இயற்கையாகவே அவர் விசேஷ தேக பலமுள்ளவரல்ல. ஆனால் நாம் நினைத்து எதிர்பார்த்ததற்கு மேல் அவர் சாதாரணமாய் சௌக்கிய மாயும் வியாதிகளைத் தாங்கக் கூடியவராயு மிருந்தார். 1957-ம் ஸு பாஸ்க்குத் திருநாளுக்குப்பின் அசாதாரண மாக அவர் களைப்புற்றிருந்தார். கொஞ்சம் ஓய்வு எடுக் கும்படி அவருடைய சிநேகிதர்கள் அவரைப் பரபரப் புடன் கொடைக்கானலுக்குக் கூட்டிச் சென்றார்கள். அவருக்கு அவர்கள் அதிகமான வைத்திய உதவி கொடுத் தார்கள். ஆனால் பயனில்லை. ஆகையால் அவரை அதிக நுட்ப வைத்திய பரிசோதனைக்காக புதுச்சேரியிலிருக் கும் வைத்தியர்களிடம் அழைத்துச் சென்றார்கள். வைத் திய பரிசோதனைக்கும் வைத்தியத்திற்கும் கீழ்ப்படித லோடும் அமைதியோடும் சம்மதித்தார். கடைசியாக அவருடைய வயிற்றில் ஆபத்தாக வீக்கங்கொண்ட ஓர் உட்பிளவை இருப்பதாக வைத்தியர்கள் கண்டார்கள். இரணசிகிச்சையோ மிக நுட்பமானதும் அவருக்கு ஆபத் துக்குரியதுமாகவும் காணப்பட்டது. இரண சிகிச்சை சித்தி பெரும்படியான முறையைத் தேடினார்கள். தாமத மில்லாமல் அவரை பாரீஸ் பட்டணத்திலுள்ள பெரிய வைத்திய விடுதிக்கு பிரஞ்சு தேசச் செலவில் ஆகாய விமான மூலமாக அனுப்பத் தீர்மானித்தார்கள். இந்தி யாவுக்குத் திரும்ப பிரஞ்சு தேசத்திலிருந்து வர மறு உத்தரவு இருக்குமானால் பாரீஸ் பட்டணத்திற்குச் சிகிச்சைக்குப் போவதாக சம்மதித்தார். ஆகையால் இந்திய பிரஞ்சு தேச அதிகாரியின் அன்பினாலும், அனு தாபத்தினாலும் எட்டு நாட்களுக்குள் சகல அனுமதிச் சீட்டு வசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

செப்டம்பர் மாதம் 10-ம் உ மாலை 7 மணிக்கு பம்பாயில் "ஏர் இந்தியா இண்டர்நேஷனல்" விமானம் அவருக்கு மிகவும் பிரியமான இந்திய பூமியிலிருந்து அவரை ஏற்றிச் சென்றது.

## பரமனின் திரு அடிகளை அடைதல்.

ஆனுல், அய்யோ! பாரீஸ் பட்டணத்தின் உபயோக மான இரண சிகிச்சைக்கு மிகவும் பிந்திவிட்டார் என்று சீக்கிரம் அறியப்பட்டது. அங்கே வைத்திய விடுதியில் கனம் சுவாமியவர்களின் உடம்பை சோதித்துப் பார்த்த தில் உடம்பினுள் கபடமாய் ஓர் பிளவை புறப்பட்டு பருத்திருந்தது. அந்தப் பிளவை உயிர்ப்பிடியான கோளங்களைப் பாதிக்காமலிருந்தது. சாதாரணமாய் இவ் வியாதிக்குரிய பெரும் வேதனை அவருக்கு இல்லாத தால், அது இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. கடைசியாக அது மிஞ்சினதாய் இருந்தது. ஆகை யால் அதை இரண சிகிச்சை செய்யப்படாத நிலையில் இருந்தது. என்ன நேரிட்டாலும் அதை முழு மனதோடு ஏற்றுக்கொள்ள சுவாமிகள் தயாராகவே இருந்தார்கள். ஆண்டவர் சித்தம்போல உலகத்திலிருக்கிறதைவிட ஆண்டவரிடம் போகத் தயாராக அவர் இருந்தார். அவருடைய அதிகமான நண்பர்களெல்லோரும் அவர் இருந்த வைத்திய விடுதிக்கு வந்தார்கள். கனம் சுவாமி யவர்களுக்கு அவருடைய நண்பர்கள் தங்களின் இறுதி யன்பைக் காட்டினுர்கள். அவர் எலும்புந் தோலுமாக இருந்தார். ஆனுல் அவருடைய திரண்ட பெரிய கண் களில் ஒளி கடைசிவரையில் மங்காமல் அவருடைய முகத் தில் பிரகாசித்துக்கொண்டே இருந்தது. அவர் மெது வாகப் பேசினுர். ஆனுல் அவர் எப்பொழுதும் போல கவனத்தோடும் பேசினுர். கடைசி வாரத்தில் கூட அவ ருடைய சிநேகிதர்கள் தமதிரித்துவத்தின் இரகசியத்தைப்

பற்றி விளக்கிக் காட்டும் அவருடைய தியானக் குறிப்பு களை பெற்றூர்கள். அவருடைய இறுதி நாட்களில் அவருக் குப் பிற மனிதருடைய இரத்தம் உடம்பில் செலுத்தப் பட்டது. அதனுல் அவர் கொஞ்சநாள் வரையில் உயிரோ டிருக்க நேர்ந்தது. அவர் தன் மரணத்தின் கடைசி நேரம் வரையில் சொரணையோடும் அமைதியோடுமிருந்தார். அவருடைய அந்திய நாள் வந்தது. அவருடைய ஓர் முக்கியமான நண்பருடன் நித்தியப் பொருள்களைப்பற்றி வழக்கம்போல் சல்லாபித்துக் கொண்டிருந்தார். பிறகு திவ்ய நற்கருணை அவருக்கு வழங்கப்பட்டது. அவர் அப்பொழுது பேச்சை நிறுத்தி உள்ளத்துக்குள் உள்ள வரோடு ஒன்றித்து மௌன தியானத்தில் ஆழ்ந்திருந்தார். கொஞ்ச நேரஞ்சென்று, திடீரென்று தன் இரு கரங்களை யும் சிலுவைப் பாடமாக விரித்துக் கொண்டு தன் ஆவியை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்தார்.

1957-ம் ஞூ அக்டோபர்-மீ 10-ம் உ வியாழக் கிழமை காலை 11 மணிக்கு இம்மாமுனிவர் பரமாரூபி யானந்த சுவாமிகள் பரமனின் திருவடிகளை அடைந்தார். தமத்திருத்துவத்தின் அரிய பக்தரான அவர் இறுதியாக பரமபிதாவின் மடியில் அன்புள்ள புதல்வரான சேசு நாதரோடு பரமாரூபியின் ஆனந்தவனந்த சாந்தியிலேயே அமர்ந்திருக்கிறுர்.

திரு ஸ்தலமாகிய அர்ச். செவரன் கோவிலுக்கு அவரு டைய திருச் சடலம் கொண்டுவரப்பட்டு அங்கே தீபா லங்காரத்துடன் வைக்கப்பட்டிருந்தது. ஏராளமான ஜனங்கள் அதன் பக்கத்தில் வந்து செபித்து அவர் மூல மாக தங்களுக்குக் கடவுள் பொழிந்த அருளுக்காக சர்வேஸ்பரனுக்கு நன்றி செலுத்தி தொழுதார்கள். அவர் இறந்த அடுத்த திங்கட்கிழமை அதே கோயிலி லேயே பக்தியோடு ஜெபித்துக்கொண்டு இருந்த அநேக

குருமார்கள், கன்னியர்கள், இல்லறவாசிகள், சிநேகிதர்கள் புடைசூழ அவருடைய அடக்கச் சடங்கு நடந்தது. பீயேவர் என்ற ஊரில் அவருக்கு மிகவும் பிரியமான ஓர் சிநேகிதரால் அமைக்கப்பட்ட கல்லறையில் அவருடைய திருச் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

## அடிகளாரின் அழியாத சந்நதம்


அவருடைய மரண அறிக்கை உடனே அடுத்தநாளே குளித்தலையிலிருக்கும் சாந்திவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. 6 வருடத்திற்கு முன் எந்த நாளிலே ஆசிரம ஆலயம் மந்திரிக்கப்பட்டு முதல் பூசை அதிலே நிறைவேறினதோ அதே நாளிலேயே சுவாமிகளுடைய மரண அறிக்கை சாந்தி வனத்திற்கு வந்தது. அந்த ஆலயத்தில் நமது அடிகள் தினந்தோறும் எவ்வளவு பக்தியோடும், விசுவாசத்தோடும் தேவ மகிமை ஆசிரம பூர்த்தியால் பெருகுமென்ற நம்பிக்கையோடு ஜெபித்தார்! கிறிஸ்துவின் திவ்விய பலி ஒப்புக்கொடுத்தார்! புதுச்சேரியிலிருந்து அவர் கடைசித் தடவையாக இந்தியாவை விட்டு பிரியுமுன்னே தன் அன்புமிக்க திருச்சிராப்பள்ளி மேற்றிராணியாரிடமிருந்து விடைபெற்று எழுதினதாவது: "ஆண்டவர் சித்தம்போல் சாந்தி வனத்திற்காக என் வாழ்நாளை அல்லது என் மரணத்தை ஒப்புக்கொடுக்கிறேன்." ஆண்டவர் ஏற்கனவே தன் தேர்தலை நிரூபித்துவிட்டார். "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடியாவிட்டால் அது தனியே கிடக்கும், மடிந்தால் மிகுந்த பலனைத் தரும்".

கால தேச வரம்பைத் தாண்டி நிற்பதே மெய்யான பிரசன்னம். சுவாமி பரமாரூபியானந்தம் தன்

சாந்தி வனத்தை விட்டுவிடவில்லை. ஆனால் அவரை சாந்திவனத்தில் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் ஞாபகத்திலல்ல; அவருடைய திருமேனி இங்கே கொண்டு வரப்பட்டாலுங்கூட அவருடைய சமாதியிலல்ல. நித்திய உயிர்ப் பிரசன்னத்திற்கு முன் மனதிலிருக்கிற ஞாபகமென்ன? ஊனக் கண் காணுகிற சமாதி என்ன? அந்த பரிசுத்த இடமென்ற சாந்தி வனத்திற்கு பக்தியுடன் வந்து தனக்குள் ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்து கால தேச வரம்பைக் கடந்த உள்ளத்துக்குள் உள்ள வரை ஆன்ம ஞானக்கண்ணால் தரிசிப்பவர்களுக்கு அவர் உண்மையாகவே காணப்படுவார். ஏனென்றால் அங்கே தானே பரம சச்சிதானந்தரின் முடிவான அழைத்தலினாலே நித்தியத்திற்கும், பரமாரூபியின் ஆனந்தத்திலேயும் நிலைநாட்டப்பட்டிருக்கிறார்.


சாந்திவனம் முன் இருந்ததுபோல பின்னும் அது எப்பொழுதும் ஆத்ம சாந்திக்கும் தியானத்திற்கும் ஓர் ஏற்ற இடமாக கடவுள் கிருபை தாங்கி விளங்குமென்று நாம் நம்புகிறோம். இதற்கு மனிதனுடைய முயற்சி அவசியம். ஆனால் அதன் பூர்த்தியோ அல்லது மடத்துத் துறவிகளின் தொகையோ அவ்வளவு அவசியமில்லை. இதுவெல்லாம் மாயத்தின் ஆதிக்கம், தோற்றங்களின் லீலை. துறவி எப்பொழுதும் நித்தியமென்றதைப்பற்றி மட்டும் சதா சிந்திப்பாரே தவிர வேறல்ல. சந்நியாசி ஏகாந்தி தானே! தனியே இருந்தாலுங் கூட குறைவற்ற சன்னியாசிதானே! காவேரி நதிக்கரையில் இருக்கும் தண்ணீர்ப் பள்ளி என்ற கிராமத்தருகில் சாந்திவனம் தோற்றமளிக்கிறது. இந்த சாந்திவனத்தின் எதிர்கால நிலமை தற்சமயம் நமக்குப் புலப்படுகிறதில்லை. ஆனால் சாந்திவனத்தின் திட்டத்தைப்பற்றி கனம் பரமாரூபியானந்தம்

சுவாமிகளுக்கு தேவசாஸ்திரத்துக்கடுத்த நம்பிக்கையிருந்தது. காவேரிக் கரையில் மட்டுமல்ல; கங்கை, நருமதை முதலிய திரு நதிக்கரைகளிலுங்கூட, திராவிட நாடு மட்டுமல்ல, ஆனால் இந்தியாவின் ஒவ்வொரு திரு ஸ்தலத்திலும், ஹிமாலயத்திலிருந்து கன்னியாகுமரிவரையிலும், வங்காளத்திலிருந்து மகாராஷ்டிரா வரையிலும் சாந்தி வனங்கள் மலர்ந்து பரிணாமிக்கும் ஒரு நாள் வரும். அதுநிச்சயம். இந்தியாவின் நாற்றிசையிலும் சாந்திவனத்தின் நோக்கம் ஊடுருவிப் பாய்ந்து பரவும். அதுவரையில் வருஷக் கணக்காக பொறுமையோடு காத்திருந்தால் என்ன ? தெளிவில்லாத இருட்டிலும் மௌனத்திலும் இப்போது சாந்திவனம் அமிழ்ந்தித் தோன்றுகிறது. ஆனால் பின் அது தன் உயர்ந்த நிலையில் பிரகாசிக்கும். நித்தியத்துக்கும் கடவுள் முன்னும் திருச்சபைக்கு முன்னும் இந்தியாவுக்கு முன்னும் அது திரியேக கடவுளை ஆராதிக்கும் சாட்சியமாகக் காட்சியளிக்கும். கிறிஸ்துவ சந்நியாசத்தின் விலை மதிக்கப்படாத ஆபரணமாக விளங்கும் சச்சிதானந்த ஆசிரமம்.




மேல் : 1. காவேரி நீர்வீழ்ச்சி அருகில். 2. அகண்ட காவேரி அண்மையில்.

கீழ் : 3. கோவில் தென்கோடியில். 4. ஸ்ரீரங்க ஆலயத்தில்.



மேல்: 1. ஆசிரமத் தோப்பு. 2. காவேரி ஆறு.

கீழ்: 3. சுவாமியாரும் பக்தர்களும் 4. கோவில் மண்டபம்.



## தியான ஜீவியத்தைப்பற்றியும் சர்வதேசங்களின் அழைத்தலைப்பற்றியும் அர்ச். பாப்புமார்கள் திருவாய்மலர்ந்தருளிய பொன்மொழிகள்

"தேவ இரகசியங்களையும் நித்திய சத்தியங்களையும் தியானிக்கவும், தேவ இராச்சியம் பரப்பவும், இடைவிடாமல் ஜெபிக்கவும், சபை ஒழுங்குப் பிரகாரம் தபசு மூலமாக தங்களுடைய பாவங்களுக்காகவும் மற்றவர்களுடைய பாவங்களுக்காகவும் பரிகாரம் செய்யவும், உலக கவலைகளையும் மாயைகளையும் விட்டுவிட்டு ஏகாந்த ஜீவியத்தில் புகுந்தவர்களே சந்தேகமில்லாமல் பெத்தானியா மரியம்மாள்போல மேலான பாகத்தைத் தெரிந்துகொண்டார்கள் என்று சொல்லுகிறோம். கடவுள் இவ்விதம் எவரையும் அழைத்தால் உத்தமதனத்துக்கு தெரிந்துகொள்ளக் கூடிய வேறே எந்த வழியுமில்லை. அவர்களில் ஒவ்வொருவரும் பகிரங்க ஆத்ம சேவையிலிருந்து விலகி தன் அந்தரங்கக் கூடத்திலமர்ந்து தேவ உண்மைகளைத் தியானிப்பதுதான் ஏக நோக்கம்." "கார்த்தூசியன்"

என்ற ஏகாந்திகளின் சபைக்கு **11-ம் பத்திநாதர்** "உம்ப்ராத்திலேம்" என்ற திரு நிரூபத்திலிருந்து எடுக்கப்பட்டது. (8-7-1924).

"கடினமான தியான ஜீவியத்தை வேத போதக நாடுகளில் புகுத்தி விஸ்தரித்தால், அது அபூர்வமான அருளைப் பொழியும். அங்கே அப்பேர்ப்பட்ட துறவி களுக்குத் தகுந்த இடம் இல்லையென்று பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் முக்கியமான சில நாடு களில் மக்கள் கிறிஸ்தவரல்லாதவராயிருந்தாலும் இயற்கையாகவே ஏகாந்தத்திற்கும், தபத்திற்கும், ஜெபத் திற்கும், தியானத்திற்கும் சார்புள்ளவர்களாயிருக்கிறார் கள். சபைகளின் ஒழுங்குகளையும் சபை ஸ்தாபித்த வருடைய மனதையும் பங்கப்படுத்தாமல் வெளி ஞான அலுவலில் பங்கு எடுக்காமல் நமது ஏகாந்திகள் வேத பரப்புதலுக்கு பிரயோசனப்படுவார்கள்." "ரேரும் எக்ளேசியே" என்ற **11-ம் பத்திநாதர்** எழுதியருளின திரு நிரூபத்திலிருந்து எடுக்கப்பட்டது. (28—2—1926.)

"திருச்சபையானது தனிப்பட்ட ஒவ்வொரு மனித னின் தாய்மட்டுமல்ல. ஒவ்வொரு தேச சகல ஜாதி ஜனங்களுக்கும் தாயாக இருக்கிறது. அது தாயாராக இருப்பதால் குறிப்பிட்ட தனி ஆளுக்கோ, குறிப்பிட்ட தனி தேசத்துக்கோ அல்லது குறிப்பிட்ட ஜாதிக்கோ சொந்தமாக இல்லாமல், எல்லோருக்கும் சமமாக சொந்த மாக இருக்கிறது. அது தாயாக இருக்கிறதால் எந்த இடத்திலும் அந்நியதாக இருப்பதில்லை. இவ்விதத் தன்மை அதற்கு இருப்பதால், அது எல்லா ஜாதிகளி டையேயும் குடியிருக்கிறது அல்லது குடியிருக்க வேண்டும். தேவகுமாரன் உண்மையான மனுச சுபாவத்தை ஏற்றுக் கொண்டது போலவே திருச்சபையும், எங்கேயும் எப்படி

யும் மனித இயல்புக்குரியவைகளை யெல்லாம் பூர்த்தியாகத் தன்னிடம் சேர்த்துக்கொண்டு அவைகளை தெய்வீக சக்திகளின் ஊற்றுக்குகிறது. அது உலகத்திலுள்ள பலவிதமான பழக்க வழக்கங்களிலும், சட்ட திட்டங்களிலும் பல ஸ்தாபனங்களிலும், கவலைப்படாமல் அவைகளில் எதையாவது அழிக்காமலிருக்கிறதுந் தவிர அவைகளைக் காப்பாற்றி வளர்க்கிறது.'' 1945-ம்௵ கிறிஸ்து ஜயந்தி சுபநாளில் **12-ம் பக்திநாதர்** திருவாய்மலர்ந்தருளின சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்டது.

“நாட்டு ஞானிகளின் சிந்தனைகளையும் கலைகளையும் ஒருபோதும் இகழ்ச்சி செய்யாமல் அவைகளை தப்பறை, சுத்தமின்மை முதலியவைகளிலிருந்து விலக்கி கிறிஸ்துவ ஞானத்தினாலே பூர்த்தியாக்கி அலங்கரிக்கின்றது திருச்சபையே''. “எவான்ஜெலியி ப்ரேகோனெஸ்'' என்ற **12-ம் பக்திநாதர்** எழுதியருளின திரு நிருபத்திலிருந்து எடுக்கப்பட்டது. (2—6—1951.)

# ஞாபகக் குறிப்புகள்

## I

சுவாமி பரமாரூபியானந்தம் என்ற ஜூலியஸ் மோன்ஷனுன் சுவாமி அவர்களின் விருப்பப்படியும் என்னுடைய ஆசையின்படியும் அவர் எனக்கு உதவிக் குருவாக பண்ணைப்பட்டி உடையாபட்டிக்கு 1939-ம்ஞு கடைசியில் அனுப்பப்பட்டார். பண்ணைப்பட்டி உடையாபட்டியானது கடவூர் ஜமீன்தாரியில் ஓர் கிராமம். அதிலுள்ள மக்கள் பலவகையிலும் பிற்போக்கான நிலையில் இருந்தனர். மேலும் அந்த கிராமத்தில் யாதொரு வசதியும் இல்லாதிருந்தும், நமது சுவாமிகள் சந்தோஷமாகவும் திருப்தியாகவுமிருந்தார். அன்றியும் நாங்கள் இருவரும் ஒருமித்து எந்தவித கஷ்டங்களிலும் ஒருவருக்கொருவர் ஆறுதலாகவும் ஆதரவாகவுமிருந்தோம்.

எங்களுடைய ஓய்வு நேரங்களில் இந்தியாவின் அருள் வளர்ச்சிக்காகப் பலமுறைகளைப்பற்றி சல்லாபித்து, எங்களுடைய ஜெபத்தையும், உழைப்பையும் அவ்வளர்ச்சிக்காக பரமனுக்கு ஒப்புக் கொடுத்தோம். இன்னமும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மேற்கூறிய கருத்துக்காக விரதம் இருந்தோம். மேலும் வாரம் இருமுறை ஆத்தும சுத்தி செய்தோம். பெரும் விழாக்களில் அக்கருத்துக்காக பலி பூசையில் ஜெபித்தோம்.

தமிழ் பாஷையில் எழுதப் படிக்க பண்ணைப்பட்டியில்தான், ஓர் தமிழ் ஆசிரியர் அடியில் ஓர் மாணவனைப் போல கற்க ஆரம்பித்தார். தமிழ் பாஷையில் ஜனங்களோடு உரையாடவும் பலி பூசையில் பிரசங்கம் செய்யவும் அதிகப் பிரியம் கொண்டவராயிருந்தார். அன்றியும் ஏழை ஜனங்களோடு சமரசமாய் வாழ ஆசை கொண்டார். பிற்போக்கான கிராம மக்கள் மத்தியில்

வெகு சாதாரண முறையில், ஓர் இந்தியனைப்போல், அவர்களுடைய உணவைப் புசிக்கவும், ஆசன உதவியைத் தேடாது, நம் நாட்டு வழக்கங்களை அனுசரிப்பதில் அவர் ஆர்வங்கொண்டார். பிணியாளர்கள் மட்டிலும், யாசகர்கள் மட்டிலும், ஏழைகள் மட்டிலும் விசேஷக் கருணையும் தாராள குணத்தையும் காட்டுவார்.

என் மட்டில் குருவும் சகோதரரும் என்ற ரீதியில் விசேஷ நம்பிக்கையும் அன்பும் மதிப்பும் அதிகாரத்திற்குப் பணிவும் கொண்டவராய் நடந்துகொண்டார். மறைந்துபோன அவருடைய தகப்பனுக்குப் பதிலாய் என்னை அவருடைய தகப்பனென்று அழைப்பார். நானோ அவருடைய அனுபோக வளர்ச்சியை அறிந்து, விசேஷ நற்குணங்களைக் கண்டு, வாழ்க்கைத் திட்டத்தின் முறைகளை நன்குணர்ந்து, நான் அவருக்குப் பிதாவல்ல, ஆனால் அவருடைய சகோதரனே என்பேன். என் மட்டில் அவர் கொண்ட அன்பும் மதிப்பும் எந்நாளும் மாறினதில்லை என்று உறுதி கூறுகிறேன்.

சுவாமி அபிஷிக்தேஸ்வரானந்த அவர்களின் வருகைக்குப் பின், நமது சுவாமிகள் தண்ணீர்பள்ளியில் சச்சிதானந்த ஆசிரமத்தை ஆரம்பித்ததை வெகு சந்தோஷத்தோடு வரவேற்றேன். நாளது பரியந்தம் பரமாரூபியானந்தம் சுவாமிகளின் வாழ்க்கைத் திட்டங்களின் அபிமானியாயும், சாந்தி வனத்தின் வளர்ச்சியை வெகுவாய் ஆசிக்கும் நண்பராயுமிருந்து வருகிறேன். பரமாரூபியானந்தம் சுவாமிகளின் தூய வாழ்க்கை என்றும் நமது பாரத நாட்டிற்கு ஓர் ஞான தீபம்போல் ஒளிர்வதாக.

**மிக. சங். ப. சவரிமுத்து,**

புனித சூசையப்பர் கோவில் பங்கு குருவும்,
திண்டுக்கல் மாவட்ட பெரிய சுவாமியாரும்.

*19—1—59.*

## II

சுமார் பனிரெண்டு வருடமிருக்கலாம், ஒரு நாள் புதுச்சேரி பிரான்ஸ் கல்லூரி தலைவர் என்னைப் பகல் விருந்திற்கு அழைத்திருந்தார். அங்கு ஸ்ரீமதி மார்கரீத் புரோ அவர்களைச் சந்தித்தேன். இவர் அப்போது புதிதாகப் பிரான்ஸிலிருந்து அக்கல்லூரிக்கு ஆசிரியையாக வந்திருந்தார். இலக்கியப் பயிற்சியில் தேர்ச்சிப் பெற்றவர். இந்தியத்திலும் (Indianism) பற்றுடையவர். சமஸ்கிருத பயிற்சியில் விருது வாங்கினவர். அன்று மாலை மீண்டும் அவரை அவர் இல்லத்தில் சந்தித்தேன். சம்பாஷணை மத்தியில் தமிழ் பாக்களைப் பிரஞ்சில் மொழிபெயர்க்க நான் முயன்று வருவதை அவரிடம் சொன்னேன். உடனே அவர் அப்படியானால் நான் மோஞ்ஷனன் சுவாமியாரைச் சந்தித்தல் நலம் என்றார். மோஞ்ஷனன் சுவாமியார் பிரான்ஸிலிருந்து வந்து சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வசிப்பதாகத் தெரிவித்தார். இவர் அப்போது குளித்தலையில் பங்கு சுவாமியாராக இருந்தார்.

இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு சுவாமி மோஞ்ஷனன் புதுவைக்கு வந்தார். ஸ்ரீமதி புரோ எங்கள் இருவரையும் ஒரு விருந்திற்கழைத்து ஒருவருக்கு ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார். வள்ளுவர் குறள் முதல் பல தமிழ் இலக்கியங்களை இருவரும் சேர்ந்து மொழிபெயர்க்கத் திட்டமிட்டோம். சுவாமி மோஞ்ஷனன் இறக்கும் வரையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது என்றே உறுதி கொண்டிருந்தோம். ஆனால் இருவருக்கும் ஓய்வு கிடைத்துச் சந்திப்பது அரிதாயிற்று. திட்டமிட்ட வேலை நிறைவேறாமலே போயிற்று.

மத்தியில் நான் திருவாசகத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தேன். இந்த வேலைக்குச் சுவாமிகள் எனக்கு மிகுந்த ஊக்கம் அளித்தார். போப்பு (Pope) ஆங்கில

மொழிபெயர்ப்பு மகத்தான தொன்று, ஆனால் அவர் சிற்சில இடங்களில் மாணிக்கவாசகரின் கருத்துக்களைச் சரிவரக் கண்டு பிடிக்கவில்லை. ஆகையால் பிரஞ்சில் நல்ல மொழிபெயர்ப்பு வெளிவருவது நலம் என்பது மோஞ்ஷனனடிகளின் அபிப்பிராயம்.

ஸ்ரீமதி புரோ எனது பள்ளித் தோழரும் தற்காலம் புதுவை பிரஞ்சு கல்லூரி தலைவருமான அதிசையமவர்களை மணந்து கொண்டார். அந்த மணம் குளித்தலை கோயிலில் சுவாமியார் மோஞ்ஷனனவர்களால் நடத்தப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு மோஞ்ஷனனடிகள் குளித்தலைக் கோவில் நிர்வாகத்தை விட்டுவிட்டு ஒரு ஆசிரமம் உண்டுபண்ணினார். குளித்தலைக்குச் சமீபத்தில் தண்ணீர்பள்ளி எனும் சிற்றூர் ஒன்று உண்டு. அகன்று பரந்து ஒழுகும் காவிரியின் தென்கரையில் ஒரு பெரிய மாந்தோப்பு. மந்தை மந்தையாக மந்திகள் அதில் வாழ்ந்து வந்தன. அதில் தமது "சச்சிதானந்த ஆஸ்ரமத்தை" ஸ்தாபித்தார். தோப்பை "சாந்திவனம்" என அழைத்தார். இந்தியர்கள் சச்சிதானந்தம் என இறைவனைக் குறிப்பிட்டதை மிக வியந்து வியந்து மெச்சுவார். சச்சிதானந்தம் என்ற பதம் எந்த மொழியிலே பேசினாலும் அடிக்கடி அவர் வாக்கில் வரும். கிறித்துவ ஆலயங்களிலும் அதைச் சொல்லுவார். அதை எண்ணி யெண்ணி மகிழ்வார். அவர் ஆசிரமத்தின் சின்னம் ஒரு சக்கரத்தின்மீது சிலுவை, அதன் நடுவில் ஓம் என்ற சமஸ்கிருதப் பதம். கத்தோலிக்க மதத்தில் பெரும் பற்றும் நம்பிக்கையும் உடையவரானாலும் இந்திய பூமியில் இந்தியருக்கு ஒவ்வும்படி அந்த மதத்தை வளர்க்க வேணும் என்பது அவர் எண்ணம். வெறும் காலால் நடந்தார். தரையில் கோரைப்பாய்மீது உறங்கினார். இந்திய சன்னியாசிகளைப்போல் தையல் இல்லாத காவி உடைகளை அணிந்தார். யோகிகளின் எளிய வாழ்க்கை

யைக் கடைப்பிடித்தார். இந்திய சைவ போஜனம் அருந்தினுர். இவருக்குத் துணையாக ஒரு பிரஞ்சு துறவி இருந்தார். கிறித்துவ சச்சிதானந்த ஆசிரமம் ஒரே இந்திய மயமாய் விளங்கிற்று.

நான் அடிகளைச் சந்தித்து அநேகம் தடவை நீண்ட நேரம் சம்பாஷித்து அவர் சொற்பொழிவுகள் பலவற்றையும் செவிமடுத்து ஆனந்திக்கும் பெரும் பேற்றையும் பெற்றுள்ளேன். அவரது புலமை மேல்நாட்டு பயிற்சிகளிலும், கீழ்நாட்டு ஆராய்ச்சிகளிலும் அளப்பரியது. எந்த மொழியில் புத்தகங்கள் படித்தாலும் அவைகளின் சாரம் முழுமையும் அப்படியே தன்மயமாக்கிக்கொள்வார். அவர் பிரஞ்சு மொழியில் எழுதிய கட்டுரைகளும், ஆற்றிய பேச்சுகளும் மிகமிகச் சிறப்புவாய்ந்தன. அவைகளைப் படிப்போருக்கும் கேட்போருக்கும் இன்பம் பயப்பன.

1947 அல்லது 1948-ஆம் ஆண்டில் அவர் முதல்முதல் காரைக்காலிற்கு வந்தார். "காரைக் கல்விக் கழகம்" தன் ஆண்டு விழாவிற்கு அவரை அழைத்தது. முதன் நாள் விழாவிற்கு அவர் தலைமை தாங்கினுர். இரண்டாம் நாள் விழா திரு. வி. கலியாணசுந்திர முதலியார் அக்கிராசனத்தில் நடந்தது. இருவரும் என் விருந்தினராய் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொண்டனர். பரஸ்பர மதிப்பும் கொண்டனர். முதன் நாள் திரு. வி. க. வருவதற்கு முன் மோஞ்ஷனனடிகள் பேசின பிரஞ்சு உரைகளும் மறுதினம் திரு. வி. க. பொழிந்த தமிழ் மொழிகளும் கருத்தில் வெகுவாக ஒத்திருந்தன. இறைவனை இந்தியர் நடராஜ உருவில் கண்டதும் அந்த உரு இந்திய கலைக்கே பெருமை வழங்கியதும் அடிகளின் முதல் நாளைய பேச்சின் இறுதி வார்த்தைகளின் சாரம் என்பது இன்றைக்கும் எனது நினைவை விட்டு மாறவில்லை. பின்

ஞல் திரு. வி. க.-வை சென்னையில் ஒருநாள் பார்த்த போது அவர் என் இல்லத்தில் நடந்த பிரஞ்சு சுவாமி யார் சந்திப்பு என்றும் அவர் நினைவைவிட்டு அகலாது என்றும் அந்த சுவாமியார் ஒருமகானுக இருத்தல் வேண் டும் என்றும் வெளிப்படுத்தினர்.

மோஞ்ஷனனடிகளுக்குத் திருவண்ணுமலை ரமண மகரிஷியின்மீது அன்பு அதிகம். பரம்பரை இந்திய யோகிகளின் வழி வந்தவர் ரமணர் என்பது அவர் அபிப் பிராயம். அடிக்கடி மகரிஷியைக் கண்டு மகிழ்வார்.

1957-ம் ஆண்டு மத்தியில் நோய்வாய்ப்பட்டுப் புதுவைக்கு அதிசையம் தம்பதிகளால் அழைத்துவரப் பட்டு சிகிச்சை செய்யப்பட்டார். வைத்திய நிபுணர்கள் அவர் பாரீசுக்குப் போய்ச் சத்திரமிடப்பட்டால் ஒருக் கால் பிழைக்கலாம் என்று எண்ணினர். அதுசமயம் இறந்த கடல் கையெழுத்து ஏடுகளைப் (*Les Manuscrits de la Mer Morte*) பற்றி ஒரு அழகிய பிரஞ்சு சொற் பொழிவு புதுச்சேரி இந்தியம் பயில் பிரஞ்சு கழகத்தில் (*Institut Français d'Indologie*) ஆற்றினர்.

நான் கடைசியாக அவரை 1957-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் கண்டு நீண்ட நேரம் உரையாடினேன். என் மனுேநிலையை நன்கு அறிந்த அவர் நான் என்வழியில் திவ்வியத்தை நோக்கிச் செல்வதாக எனக்கு என்னையே விளக்கி நன்மை மட்டுமல்ல, தீமையும் ஆண்டவனிட மிருந்தே வருகின்றன என்றுர்.

அவர் சத்திரத்தின் பொருட்டுப் பிரான்சுக்குப் புறப் படுவதற்குச் சில தினங்களின் முன்னுல் நான் பிரஞ்சு பாஷையில் செய்துள்ள காரைக்காலம்மையார் பாக்களின் மொழி பெயர்ப்புக் கையெழுத்துப் பிரதியை முற்றிலும் படித்து மகிழ்ந்தார்.

**காராவேலன்,**
வழக்கறிஞர், காரைக்கால்

# III

1940-ம் வருடத்திலே முதன்முறையாக நான் சுவாமி மோன்ஸானுவை சந்தித்தேன். அப்பொழுது குளித்தலை யில் தாசில்தாராக பணியாற்றிக்கொண்டு வந்தேன். சுவாமிகள் பண்ணைபட்டி பங்கில் உதவி குருவாக இருந் தார். அவ்வமயம் குளித்தலையில் கத்தோலிக்க தாசில்தார் இருப்பதாக கேள்விப்பட்டு ஒரு நாள் என் வீடுதேடி வந்தார். அவரைக் கண்டதும் Good morning சுவாமி களே என ஆங்கில முறையில் வரவேற்றேன். ஆனுல் அவர் இருகரம் கூப்பி வணக்கம் செய்தார் தமிழன் முறையிலே. அவருடைய எளிய எடையும், குழந்தை போன்ற உள்ளமும் என்னை கவர்ந்தன. அவரின் பிறப் பிடம், வந்த நோக்கம், எந்த சபை போன்ற தகவல்களை தெரிய ஆவல் கொண்டு பலபல கேள்விகள் கேட்டேன். பிரான்சு நாட்டிலேயிருந்து மேற்றிராசன குருவாக இந்தியாவிற்கு வந்து, இந்திய மக்களுக்காக பணிபுரிய பிரியம் கொண்டிருப்பதாகவும், திருச்சி மேற்றிராணியா ரிடம் தன்னை முழுவதும் ஒப்படைத்து அவரின் விருப் பத்தை நிறைவேற்ற தயாராயிருப்பதாகவும் அவர் கூறக் கேட்டு வியந்தேன். ஏனெனில் சாதாரணமாக இந்திய மண்ணில் பிறந்தவர்கள்தான் மேற்றிராசன குருக்களாக சேவை புரிவதைப் பார்த்திருக்கிறேன். மேலைநாட்டி லிருந்து வந்த குருக்கள் ஏதாவது ஒரு சபையை (சேசு சபை, பிரான்சிஸ்கன் போன்ற) சார்ந்தவர்களாயிருந் தனர். ஆனுல் பிரான்சு நாட்டிலே மேற்றிராசன குருவா யிருக்கும் அடிகளார் இங்கு தமிழகத்தில் ஒரு தமிழ் மேற்றிராசனத்தில் உழைக்க முன்வந்திருப்பது, சரித்தி ரத்தில் பொன்னுல் பொறிக்கப்பட வேண்டிய சம்பவம்.

எங்களின் சம்பாஷணை வளர்ந்தது. திருச்சபையை வளர்க்கும் விதம், வேதபோதக முறைகள், பண்பாட்டிற் கேற்ப கிறிஸ்துவை அளித்தல் போன்ற முக்கிய பிரச் சினைகளில் எங்களின் உரையாடல் பிரயாணம் செய்தது.

பாரதபண்பாட்டின் பெருமையையும், கலாச்சாரத்தின் உயர்வையும், இந்திய தத்துவ, தர்க்க இலக்கிய உன்னத படைப்புகளேயும் கண்டு, படித்து பரவசமாகிறேன். அதோடு இந்து சந்நியாசிகளேப்போல ஏழ்மையும், தியான மௌன வாழ்க்கையுமே இலட்சியங்களாகக் கொள்ள வேண்டுமென்பதே என் அவா. இத்துறையில் சிறந்த பணியாற்றிவரும் பெங்கால் சேசுசபை குருக்கள் Johanns, Dandoy இவர்களே குறிப்பிட்டார். ஆனால் தான் கிறிஸ்து வுக்கு வாழ்க்கை மூலமாகவும், செபத்தின் மூலமாகவும் சாட்சியம் சொல்ல விரும்புவதாக உரைத்தார். பிற ரோடு வாதாடி மதத்தை பரப்புவது மட்டும் போதாது. பிறமதத்தினரோடு அன்போடும் அரவணைப்போடும் அளவளாவி பேசி அதன்மூலம் கிறிஸ்துவின் பெருமையை தெரிவிப்பதே சிறந்த வழி. இத்தனே கருத்துக்களும் அவரிடமிருந்து துள்ளி விழுந்தன. இன்னும் அவரோடு நெருங்கி பழகியதனால் பல பல கற்றுக்கொண்டேன். உண்மையில் அவர் மகாமேதை. குருத்துவ கல்லூரிகளில் போதிக்கப்படும் இலக்கியங்களே பூரணமாகக்கற்று, அவை களிலே ஊறித் திளேத்தவர். என்றாலும் தனக்கென்று ஒரு தத்துவத்தை உருவாக்கி யிருக்கிறார். கடவுளோடு என்றும் உன்னத நிலேயில் ஐக்கியமாயிருத்தல். இதை எப்படி விளக்குவது என எனக்கு புரியவில்லே. அவர் மக்களுக்கு இப்பேர்ப்பட்ட இமயம் உயர்ந்த கருத்துக் களே பிரசங்கங்களின் மூலம் வாரி வழங்கினார். சாதாரண பாமர மக்கள் மெய்மறந்து கேட்டனர். ஆனால் எவ் வளவு தூரம் கண்டுபிடித்தாரென்பது தெரியவில்லே. பிறரோடு பேசும்போது இப்பேர்ப்பட்ட பரம இரகசியங் களே வெகுசுலபமாக, தெளிவாக, விளக்கமாக கூறுவதைக் கேட்டு நான் பரமானந்தத்தில் ஆழ்ந்திருக்கிறேன். ஒரே வார்த்தையில் அவர் புனிதர் என எனக்குப்பட்டது. அவரது வாழ்க்கை என் வாழ்வுக்கு ஒரு கலங்கரை

விளக்கு. என் ஆன்மீக வாழ்வு உயர்வுக்கு அவர் உரையாடல்கள், பிரசங்கங்கள் படிக்கட்டுகள்.

குளித்தலைக்கு மிகவும் மேன்மை தங்கிய ஜேம்ஸ் மெண்டோன்ஸா ஆண்டகை பங்கு விசாரணைக்காக வந்த பொழுது, நகரின் கிறிஸ்துவர்களுக்கும் இதர பிரமுகர் களுக்கும் நடந்த தேனீர் விருந்தின்போது சுவாமி மோன் ஷனுன் 'கிறிஸ்துவும், பாரத பண்பாடும்' என்பதைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவு இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது. தாய் மண்ணில் பிறந்தவர்போல அவ்வளவு ஆர்வத்துடனும், ஆன்மீகக் கனல் கக்கும் சொற்களுடன் பேசினர். எல்லோரா, அஜந்தா குகைகளிலே பொதிந்து கிடக்கும் கலைச் சுரங்கங்களின் அடிப்படை தத்துவங்களை பருகி சுவைத்து, சுவையின் அருமையைக் கூறியபோது நானும் ஒரு இந்தியனு என என் மனதிலே கேள்விக் குறி தோன்றியது. கிறிஸ்துவம் அதிமுக்கியமான பணி பாரதத்திற்கு தரவேண்டும். அப்பணியை பெற பாரதம் பரிபக்குவமாயிருக்கிறது என மகிழ்ச்சிக் குரலில் கூறி முடித்தார்.

1941-ம் வருடம் குளித்தலைக்குப் பங்கு குருவாக நியமிக்கப்பட்டார். பங்கு வீடு இல்லாத குறையை நிவர்த்திக்க மேற்றிராணியார் உடனே விரும்பினர். சுவாமி மோன்ஷனுன் குடிசை வீடு ஒன்று கட்டித்தந்தால் போதும் என அடிக்கடி கூறியபோதிலும், மேற்றிராணியார் மூன்று சிறிய அறைகள் அடங்கிய வீட்டைக்கட்டித் தந்தார். அதிலே அடிகளார் சிறிய அறையில் பாய்மீது அமர்ந்து, பச்சைத் தமிழனைப்போல் வாழ்ந்து, காய் வகைகளை உணவாக உண்டு, எளிய ஜீவியம் ஜீவித்தார். எனவே மக்கள் அவரை கீரைசாமியார் என அழைத்தனர். ஏழை வீடுகளிலே பழையசாதம் சாப்பிடுவதிலே விருப்பமும், அவர்களோடு திண்ணையிலமர்ந்து பேசவும்

ஆவல் கொண்டார். அடிக்கடி செய்தும் வந்தார். என்ருலும் தனிமை வாழ்வு, கடவுளோடு தனிமையில் உறவு கொள்வது இவற்றையே நாளும் நாளும் நினைத்து அந்நேரத்தையும் எதிர்பார்த்திருந்தார்.

அவரின் உயர்ந்த ஆசையை நிறைவேற்றுவதுபோல் கடவுள் அவருக்கு துணையாக அர்ச். ஆசீர்வாதப்பர் சபையை சேர்ந்த துறவியை அனுப்பினுர். இருவரும் சேர்ந்து கிறிஸ்துவ ஆஸ்ரமம் அமைக்க திட்டமிட்டனர் ஆண்டகையின் ஆசீர் பெற்றனர். விறுவிறுப்பான நகர சப்தத்தைக் கடந்து அமைதியாக ஓடும் காவேரி கரையிலே தண்ணீர்ப்பள்ளி யென்னும் சோலையடர்ந்த நிழல் பந்தலிலே சிறு சிறு குடிசைகளாக கட்டிகொண்டு சாந்தி வனம் என்னும் சிந்தையள்ளும் செந்நாமத்துடன் கடவுளோடு சல்லாபித்து, அவரின் இரகசியங்களின் தியான மௌன வாழ்வுடன் மூழ்கி, மூழ்கி, ஒளிநீட்டும் முத்துக்களை பெற்று, பாரத கலாசார, பண்பு, இலக்கியம், செல்வங்களிலே பதிந்து பெருமை பெறும்படி செய்ய அனைத்தையும் அவரில் பதிப்பிக்க ஆரம்பித்தனர். சமஸ்கிருத சந்தங்களிலே செபங்கள் மகிழ்ந்தன.

இப்பேர்ப்பட்ட சுவாமி மோன்ஷனுன் வாழ்வை திரும்பிப் பார்க்கும்பொழுது என் மனதிலே இருள் பரவுகிறது. பெரிய மேதை விரைவில் நம்மைவிட்டு பிரிந்துவிட்டார். கனவு உருவாகி நனவாகுவதற்குள் அவர் மறைந்துவிட்டார். அவர் பட்டபாடுகள், உருவாக்க முனைந்தபோது எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணு? ஆனுல் கடவுளின் தெய்வீக திட்டங்களின் ஆழத்தை யார் அறியக்கூடும்? சுவாமி மோன்ஷனுன் உள்ளத்திலே பிறந்து சாந்திவனத்திலே வளர்ந்துவரும் கிறிஸ்துவ ஆஸ்ரமம் திக்கெட்டும் பரவி பாரத்தை பரமனின்

பாதத்தண்டை கொண்டுவர ஒரே வழியாகும் நாள் எந்நாளோ! அந்நாள் உதயமாகும் என்பதில் சந்தேக மில்லை. என் உறுதி.

**P. A. அந்தோனி, M. A.**
ஓய்வு பெற்ற டெபுடி கலெக்டர்,
திருச்சிராப்பள்ளி.

*29—11—57*

IV

## சச்சிதானந்த ஆசிரம ஆரம்பம்

*1948*-ஆம் அக்டோபர்-மீ *11*-ம் தேதி கன்னி மரியம்மாள் தேவமாதாவான திருநாளன்று இந்திய கத்தோலிக்கத் திருச்சபை முக்கியமான ஒரு எல்லையைத் தாண்டிற்று. அர்ச். பிரிட்டோ அருளப்பர் (அருளானந்தர்), வீரமாமுனிவர், தத்துவபோதகர் போன்ற திருஷ்டியும் விசால மனதும் படைத்த மகான்கள் காலத்து வேதப் பொழிவு புத்துயிர் தோன்றி எழுந்துள்ளது என்றும் நினைக்கும்படியாயிருக்கிறது. "எவாஞ்செலியிப்ரெக்கோனெஸ்" என்ற நிருபம் வெளிவந்த வருஷத்திலே, அதிலடங்கிய அரிய கருத்துகள் சிலவற்றை செயலளவில் நிறைவேற்றி வைக்கும் திட்டத்துடன் தோன்றிய முனிவர்குலம் உருப்பெற்றெடுத்தது முழுதும் தற்செயலென்று சொல்லிவிடமுடியுமா?

திருச்சபை எந்நாட்டிற்கும் புறம்பானதுஅன்று. எத்தகைய நாகரீகத்திற்கும் கலைப்பண்பிற்கும் அந்நியமல்ல. எம்மக்களுக்கும் பொதுவானது, எல்லோரையும் புனிதப்படுத்திப் பெரும் வாழ்வு வாழச் செய்யவல்ல திருச்சபை ஒவ்வொரு நாட்டு நாகரீகத்தையும், கலைப்பண்பையும் தனதாக்கி அதற்குப் புதுமெருகு கொடுத்து வளர்க்கும் தன்மையது. பாரத நாட்டுப் பழம்பெருமை, நாகரீகச் சிறப்பு, கலைவளம் மகத்தானது. அதனுடைய தெய்வப் பற்றும் அத்தகையதே.

எனவே நம் நாட்டுத் தெய்வ வழிப்பாட்டில் காணப்படும் சிறந்த முறைகளைக் கையாண்டு நம் நாட்டுத் திருச்சபை மெய்யாகவே இந்திய திருச்சபையாக விளங்க வைக்கக் கங்கணம் கட்டியுள்ளனர் இரு குருக்கள். அவர்கள் வளம்பெற்ற காவிரிக் கரையிலே, குளித்தலை அருகே தண்ணீர்ப்பள்ளிக் கிராமத்தை ஒட்டியுள்ள ஒரு வனத்திலே தங்கள் ஆசிரமத்தை நிறுவியுள்ளார்கள். அவர்கள் ஆலயம் அக்டோபர் 11-ம் தேதி வேத முறையின்படி மந்திரிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. திவ்ய சேசு, ஆசிரம சாசுவத சிரேஷ்டராகவும் அவ்விரு குருக்களின் தந்தையாகவும் துணைவராகவும் திருப்பேழையில் அமர்த்தப்பட்டார். பல குருக்களும் பிரமுகர்களும் விழாவிற்கு விஜயம் செய்து சிறப்பித்தனர்.

ஆசிரமவாசிகளின் அன்றாட வாழ்வு முற்றிலும் இந்திய சந்நியாசிகளின் வாழ்க்கை முறையையொட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆடை காவி வஸ்திரம்; போஜனம் புலால் நீக்கிய சைவ உணவு; குடியிருப்பு கூரை வேய்ந்த எளிய குடிசை. தொழில் தியானமும் தவத்தோடு கூடிய ஜெபமும், வருங்காலத்தில் தத்துவ ஞான வேத சாஸ்திர ஆராய்ச்சியுமே. சந்நியாச வாழ்க்கை ஒழுங்கு அர்ச். ஆசிர்வாதப்பர் சபையாரின் ஒழுங்குத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரமவாசிகள் இருவரில் முதல்வரும் "மோன்ஷனுன் சுவாமி" என இதுவரை அழைக்கப்பட்டு வந்தவருமான பரம அரூபி ஆனந்த சுவாமிகள் இந்தியக் கலை மீது அளவற்ற காதல் கொண்டவர். அவருடையவும் அவரது தோழரான ஓர் ஆசிர்வாதப்பர் சபை துறவி சுவாமியாருடையவும் முயற்சியாலும் உழைப்பாலும் தண்ணீர்ப் பள்ளி, சாந்திவனத்தில் ஸ்தாபகம் பெற்றுள்ள சச்சிதானந்த ஆசிரமம் தழைத்தோங்குவதாக.

**சுவாமி தர்மநாதர்,**

**(சத்திய போதினி,** நவம்பர், 1951.)

**சுவாமி பரம அருபி ஆனந்தம் “ நினைவு மலர் ”**

சுவாமி ஆரோக்கிய நாதர் அவர்களால்
இயற்றப்பெற்ற தமிழ் புத்தகம் விலை ரூ. 0—75.

**Swami Parama Arubi Anandam**

English Edition–248 Pages Price Rs. 2—50.

**கிடைக்குமிடம் :**

நிர்மலா ஆர்ட் பப்ளிசிட்டி,
கோட்டை ஸ்டேஷன் ரோடு,
திருச்சிராப்பள்ளி—2.

---

**“ சாவின் சுவை ”**

சுவாமி பரம அருபிஆனந்தம் அவர்களின்
முன்னுரையுடன் சுவாமி ஆரோக்கிய
நாதர் அவர்களால் இயற்றப்பெற்ற
தமிழ் புத்தகம் விலை ரூ. 0—75.

**கிடைக்குமிடம் :**

1. புனித சூசையப்பர் தொழிற்பள்ளி அச்சகம்,
திருச்சிராப்பள்ளி—1.

2. நிர்மலா ஆர்ட் பப்ளிசிட்டி,
கோட்டை ஸ்டேஷன் ரோடு,
திருச்சிராப்பள்ளி—2.